உ

# மணிமேகலை.

இஃது

மதுரைக் கூலவாணிகன் சாத்தனார்பாடியது.

புரசை - அட்டாவதானம் - சபாபதி முதலியார்

அவர்கள் மாணாக்கர்

திருமயிலை

சண்முகம் பிள்ளை அவர்களால்

பார்வையிடப்பட்டுக்

கயப்பாக்கம். இரத்தினசெட்டியார் குமாரர்

க. முருகேச செட்டியாரால்

சென்னை:

மதராஸ் ரிப்பன் அச்சியந்திர சாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

1894.

விஜய௵ தனுர்ரவி.

இப்புத்தகம் வேண்டியவர்கள், சென்னை சீருபஜார தெரு 189-நம்பர் க. முருகேசசெட்டியார் ஷாப்பில் விலை அணா 12 கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

7169a

# முகவுரை.

"தொண்டர்காதலனைத் தூதிடைவிடுத்தது முதலை யுண்ட பாலனை யழைத்தது மெலும்பு பெண்ணுருவாக் கண்டதும் மறைக்கதவினைத்திறந்தது" மாகிய இன்னோரன்ன வற்புதங்கள் நமதுசமயகுரவர் செயற்கிடமாய அருமந்தமொழி இந்நிலவுலகத்தில் எம்மொழியினுஞ் சிறந்த தமிழ்மொழியேயாம். தமிழென்பதற் கினிமையென்பது பொருள். இனிமையான மொழியுடைமையானன்றே தமிழெனப்பட்டது. இங்ஙனங்கொள்ளாது திரமிள மென்பது திரிந்ததென்றும், திராவிடமென்றதன் பரியாய நாமமென்றும், தனியென்பது தமியென்றாகி ழகரம் பெற்றதென்றும் கூறுவார் பலதிறத்தர். அவர், 'தமிழ்ப்பாட்டிசைக்குந் தாமரையே' என்றாற்போன்றவற்றிற்கு இனிமையெனப்பொருள்பயப்பதறியாமை நோக்கி யாதுசெய்வதென்க. எம்மொழியினுஞ்சிறந்த காப்பியங்களும் பிறவுமுளவாமாறுபோலும் தமிழ்மொழியினுஞ் சிந்தாமணி முதலியனவாகக் கிடந்த பெருங்காப்பியங்களும் பிறவுமுள. தொன்மையென்பதுஉரையிடையிட்டசெய்யுளெனவும், தோலென்பது இழுமென் மொழியான்விழுமியது நுவலப்படுவதென்னவுமாம். தொன்மை யென்பதனுள் சிலப்பதிகாரம் பாரதவெண்பா முதலனவும், தோல் என்பதனுள் சிந்தாமணி மணிமேகலைமுதலனவுமடங்கு மென்க. சிந்தாமணிக்கு முன்னர், காப்பியஞ்செய்யும்புலமையினர் ஆசிரியப்பாவானும் கலிப்பாவானும் சொற்றொடர்நிலைச்செய்யுள் செய்வாராயினர். தேவரேகாப்பிய விலக்கணநிரம்பச்சிறப்புறச்சீர்த்திபெய்தினர்; அவர் வழியை வளர்த்தார் அருண்மொழித்தேவர் கம்பநாடர் முதலானோர்; இது நிற்க;—

சிலப்பதிகாரக் கவி நாயகனாகிய கோவலனுடைய காதற்பரத்தையாமாதவிமகள்மணிமேகலையினுடைய துறவுமுதலிய வனைத்தும் விரிக்கப்பட்டமையின்மணிமேகலையெனப்பட்டது. முதலிற்கதைபொதிபாட்டையுடைத்தாய் விழாவறை காதைமுதற் பவத்திறமறுக்கெனப் பாவைநோற்றகாதை யிறுதியாய முப்பது காதையினையுடைத்தாய் ஆசிரியப்பாவாற் கூறப்பட்டுச் சொன்னயம் பொருணயம முதலிய பொதுளிய 'இனிய நடையினையுடைத்து. இந்நூலின் மணிமேகலைபுத்தசமயந்தழுவி யொழுகியாளாகலின் அதனையே சிறி

தெடுத்துக்கூறும். இதனைச்செய்த ஆசிரியரின்னரென்பதனை இந்நூற்பதிகத்தும், 'இளங்கோ வேந்தனருளிக் கேட்ப வளங்கெழு கூல வாணிகன் சாத்தன் வண்டமிழினின் மணிமேகலைத் திறனாறைம்பாட்டினுளறிய வைத்தனன்,' என்றதனா னறிவதன்றி அவர் கடைச்சங்கத்தினைச் சேர்ந்தவரென்பதனை 'ஞகாரை முதலான காரையீற்று' என்னும் தொல்காப்பியப் பொருளதிகாரத்துச் செய்யுளியற் சூத்திரத்து நச்சினார்க்கினியருரையானு முணர்க. இதுநிற்க:- இந்நூலினருமையை,

'காதன்மடந்தையர் கையறுங் காலையு மெய்யகலா
மேதகுநாணு மெலியவன்றே விழிபோலு நெய்தற்
போதவிழ்மென் மலர்ப்புன்னையங்கானல் பொருந்துமிந்த
மாதவிபெற்ற மணிமேகலை நம்மை வாழ்விப்பதே'

என அம்பிகாபதியும்;

'மந்தாகினி யணிவேணிப்பிரான் வெங்கை மன்னவனே, கொந்தாருழன் மணிமேகலை நூனுட்பங்கொள்வதெங்ஙன், சிந்தாமணியுந் திருக்கோவையு மெழுதிக்கொளினும், நந்தாவுரையை யெழுதவெவ்வாறுநவின்றருளே' எனச் சிவப்பிரகாச சுவாமிகளுமியற்றிய கோவைகளிற் சிலேடையினமைத்துக் கூறியிருப்பதனானு மறிக.

கடவுட்டுணை.

# மணிமேகலை.

## முதலாவது
## விழாவறை காதை.

உலகந்திரியா வோங்குயர்விழுச்சீர்ப்
பலர்புகழ்மூதூர்ப் பண்புமேம்படீஇய
வோங்குயர்மலையத் தருந்தவனுரைப்பத்
தூங்கெயிலெறிந்த தொடித்தோட்செம்பியன்
விண்ணவர்தலைவனை வணங்கிமுன்னின்று
மண்ணகத்தென்றன் வான்பதிதன்னின்
மேலோர்விழைய விழாக்கோளெடுத்த
நாலேழ்நாளினு நன்கினிதுறைகென
வமரர்தலைவ னாங்கதுநேர்ந்தது
கரவாக்கேள்வியோர் கடவாராகலின்
மெய்த்திறம்வழக்கு நன்பொருள்வீடெனு
மித்திறந்தத்த மியல்பிற்காட்டுஞ்
சமயக்கணக்கருந் தந்துறைபோகிய
கவையகத்தருங் கல்லென்பேரூர்க்
கரந்துருவெய்திய கடவுளாளரும்
பரந்தொருங்கீண்டிய பாடைமாக்களு
மைம்பெருங்குழுவு மெண்பேராயமும்
வந்தொருங்குகுழீஇய வான்பதிதன்னுட்
கொடித்தேர்த்தானைக் கொற்றவன்றுயரற
விடுத்தபூத விழாக்கோண்மறப்பின்
மடித்தசெவ்வாய் வல்லெயிறரும்ப
விடிக்குரன்முழக்கத் திடும்பைசெய்திடுந்
தொடுத்தபாசத்துத் தொல்மதிநாகரைப்
* புடைத்துணும்பூதமும் பொருந்தாதாயிடு
மாயிருஞாலத் தரசுதலையீண்டு

* 'புடைத்தவைம்பூதமும்' என்றும் பாடம்.

மாயிரங்கண்ணோன் விழாக்கால்கொள்கென
வச்சிரக்கோட்டத்து மணங்கெழுமுரசங்
கச்சையானைப் பிடர்த்தலையேற்றி
யேற்றுரிபோர்த்த விடியுருமுழக்கிற்
கூற்றுக்கண்விளிக்குங் குருதிவேட்கை
முரசுகடிப்பிடூஉ முதுக்குடிப்பிறந்தோன்
திருவிழைமூதூர் வாழ்கென்றேத்தி
வானமும்மாரி பொழிகமன்னவன்
கோணிலைதிரியாக் கோலோனுகுக
தீவகைசாந்தி செய்தருநன்னா
ளாயிரங்கண்ணோன் றன்னோடாங்கு
நால்வேறுதேவரு நலத்தகுசிறப்பிற்
பால்வேறுதேவரு மப்பதிபடர்ந்து
மன்னன்கரிகால் வளவனீங்கியநா
ளிந்நகர்போல்வதோ ரியல்பினதாகிப்
பொன்னகர்வறிதாப் போதுவரென்பது
தொன்னிலையுணர்ந்தோர் துணிபொருளாகலிற்
றோரணவீதியுந் தோமறுதொட்டியும்
பூரணகும்பமும் பொலம்பாலிகைகளும்
பாவைவிளக்கும் பலவுடன்பரப்புமின்
காய்க்குலைக்கமுகும் வாழையும்வஞ்சியும்
பூக்கொடிவல்லியுங் கரும்புநடுமின்
பத்திவேதிகைப் பசும்பொற்றூணத்து
முத்துத்தாமமு முறையொடுநாற்றுமின்
விழவுமலிமூதூர் வீதியுமன்றமும்
பழமணல்பாற்றுமின் புதுமணல்பரப்புமின்
கதலிக்கொடியுங் காமனறுவிலோதமு
மதலைமாடமும் வாயிலுஞ்சேர்த்துமி
னுதல்விழிநாட்டத் திறையோன்முதலாப்
பதிவாழ்சதுக்கத் தெய்வமீறு
வேறுவேறுசிறப்பின் வேறுவேறுசெய்வினை
யாற்றிமரபி னறிந்தோர்செய்மின்
றண்மணற்பந்தருந் தாழ்தருபொதியிலும்
புண்ணியநல்லுரையறிந்தோர்பொருந்துமி
னொட்டியதுறுபொரு ளுணர்ந்தவாதிகள்
பட்டிமண்டபத்துப் பாங்கறிந்தேறுமின்
பற்றாமாக்க டம்முடனாயினுஞ்

செற்றமுங்கலாமுஞ் செய்யாதகலுமின்
வெண்மணற்குன்றமும் விரிபூஞ்சோலையுந்
தண்மணற்றுருத்தியுந் தாழ்பூந்துறைகளுந்
தேவருமக்களு மொத்துடன்றிரிந்தா
நாலேழ்நாளினு நன்கறிந்தீரென
வெளிறுவாண்மறவருந் தேருமாவுங்
களிறுஞ்சூழ்தாக் கணமுரசியம்பப்
பசியும்பிணியும் பகையுநீங்கி
வசியும்வளனுஞ் சுரக்கெனவாழ்த்தி
யணிவிழாவறைந்தன னகனகர்மருங்கென.

விழாவறைகாதை முற்றிற்று.

---

## இரண்டாவது

## ஊரலருரைத்த காதை.

நாவலோங்கிய மாபெருந்தீவினுட்
காவேற்றெய்வந் தேவர்கோற்கெடுத்த
தீபசாந்தி செய்தருணன்னாள்
மணிமேகலையொடு மாதவி * வாராத்
தணியாத்துன்பந் தலைத்தலைமேல்வரச்
சித்திராபதிதான் செல்லலுற்றிரங்கித்
தத்தரிநெடுங்கட் டன்மகடோழி
வயந்தமாலை வருகெனக்கூஉய்ப்
பயங்கெழுமாநக ரலரொடுத்துரையென
வயந்தமாலையு மாதவியின்னற்
கயர்ந்துமெய்வாடிய வழிவினளாதலின்
மணிமேகலையுடன் மாதவியிருந்த
வணிமலர்மண்டபத் தகவயிற்செலீஇ
யாடியசாய லாயிழைமடந்தை
வாடியமேனி கண்டுளம்வருந்திப்
பொன்னேரனையாய் புகுந்ததுகேளா
யுன்னோடிவ்வூ ருற்றதொன்றுண்டுகொல்
வேத்தியல்பொதுவிய லென்றிருதிறத்துக்
கூத்தும்பாட்டுந் தூக்குந்துணிவும்
பண்ணியாழ்த்தானமும் பாடைப்பாடலுந்

---

* 'பாரா' எனவும் பாடம்.

## ஊரலருரைத்தகாதை.

தண்ணுமைக்கருவியுந் தாழ்தீங்குழலுங்
கந்துகக்கருத்தும் வடநூற்செய்தியுஞ்
சுந்தரச்சுண்ணமுந் தூநீராடலும்
பாயற்பள்ளியும் பருவத்தொழுக்கமுங்
காயக்கரணமுங் கண்ணியதுணர்தலுங்
கட்டுரைவகையுங் கரந்துறைகணக்கும்
வட்டிகைச்செய்தியு மலராய்ந்துதொடுத்தலுங்
கோலங்கோடலுங் கோவையின்கோப்புங்
காலகணிதமுங் கலைகளின்றுணிவும்
நாடகமகளிர்க்கு நன்கனம்வகுத்த
வோவியச்செந்நூ லுரைநூற்கிடக்கையுங்
கற்றுத்துறைபோகிய பொற்கொடிநங்கை
நற்றவம்புரிந்தது நாணுடைத்தன்றே
அலகின்மூதூ ரான்றவரல்லதைப்
பலர்தொகுபுரைக்கும் பண்பில்வாய்மொழி
நயம்பாராட்டலி னாணுடைத்தன்று
வயந்தமாலைக்கு மாதவியுரைக்குங்
காதலனுற்ற கடுந்துயர்கேட்டுப்
போதல்செய்யா வுயிரோநன்றே
பொற்கொடிமூதூர்ப் பொருளுரையிழந்து
நற்றொடிநங்காய் நாணுத்துறந்தேன்
காதலரிறப்பிற் கனையெரிபொத்தி
யூதுலைக்குருகி னுயிர்த்தகத்தடங்கா
தின்னுயிர்கடிதி னீவாராகி
நன்னீர்ப்பொய்கை நளியெரிபுகுவர்
நள்ளெரிபுகா ராயினன்பரோ
டுடனுறைவாழ்க்கைக்கு நோற்றுடன்படுவர்
பத்தினிப்பெண்டிர் பரப்புநீர்ஞாலத்
தத்திறத்தாளு மல்லளெம்மாயிழை
கணவற்குற்ற கடுந்துயர்பொறாஅள்
மணமலிகூந்தற் சிறுபுறம்புதைப்பக்
கண்ணீராடிய கதிரிளவனமுலை
திண்ணிதிற்றிருகித் தீயழற்பொத்திக்
காவலன்பேரூர் கனையெரியூட்டிய
மாபெரும்பத்தினி மகண்மணிமேகலை
யருந்தவம்படுத்த லல்லதியாவதுந்
திருந்தாச்செய்கைத் தீத்தொழிற்படாஅ

ளாங்கனமன்றிய மாயிழைகேளா
யீங்கிம்மாதவ ருறைவிடம்புகுந்து
மறவணநீத்த மாசறுகேள்வி
யறவணவடிக ளடியிணைவீழ்ந்து
மாபெருந்துன்பங் கொண்டுளமயங்கிக்
காதலனுற்ற கடுந்துயர்கூறப்
பிறந்தோருறுவது பெருகியதுன்பம்
பிறவாருறுவது பெரும்பேரின்பம்
பற்றின்வருவது முன்னதுபின்ன
தற்றோருறுவ தறிகென்றருளி
யையவகைச்சீலத் தமைதியுங்காட்டி
யுய்வகையிவைகொளென் றுரவோனருளினன்
மைத்தடங்கண்ணார் தமக்குமேற்பயந்த
சித்திராபதிக்குஞ் செப்புநீயென
வாங்கவளுரைகேட் டரும்பெறன்மாமணி
யோங்குதிரைப்பெருங்கடல் வீழ்த்தோர்போன்று
மையனெஞ்சமொடு வயந்தமாலையுங்
கையற்றுப்பெயர்ந்தனள் காரிகைதிறத்தென.

ஊரலருரைத்தகாதை முற்றிற்று.

---

## மூன்றாவது

## மலர்வனம்புகு காதை.

வயந்தமாலைக்கு மாதவியுரைத்த
வுயங்குநோய்வருத்தத் துரைமுன்றோன்ற
மாமலர்நாற்றம் போன்மணிமேகலை
கேதுநிகழ்ச்சி யெதிர்ந்துளதாதலிற்
றந்தையுந்தாயருந் தாழ்துயருழந்த
வெந்துயரிடும்பை செவியகம்வெதுப்பக்
காதலனெஞ்சங் கலங்கிக்காரிகை
மாதர்ச்செங்கண் வரிவனப்பழிந்து
புலம்புநீருருட்டிப் பொதியவிழ்நறுமல
ரிலங்குதண்மாலையை யிட்டுநீராட்ட
மாதவிமணிமே கலைமுகநோக்கித்
தாமரைதண்மதி சேர்ந்ததுபோலக்

காமர்செங்கையிற் கண்ணீர்மாற்றித்
தூநீர்மாலை தூத்தகையிழந்தது
நிகமலர்நீயே கொணர்வாயென்றலு
மதுமலர்க்குழலியொடு மாமலர்தொடுக்குஞ்
சுதமதிகேட்டுத் துயரொடுங்கூறுங்
குரவர்க்குற்ற கொடுந்துயர்கேட்டுத்
தணியாத்துன்பந் தலைத்தலையெய்து
மணிமேகலைதன் மணிமுகந்தன்னு
ளணிதிகழ்நீலத் தாய்மலரொட்டிய
கடைமணியுகுநீர் கண்டனளாயிற்
படையிட்டுநடுங்குங் காமன்பாவையை
யாடவர்கண்டா லகறலுமுண்டோ
பேடியாளின்றே பெற்றியினின்றிடி
னாங்ஙனமன்றியு மணியிழைகேளா
யீங்குன்னகரத் தியான்வருங்காரணம்
பாராவாரம் பல்வளம்பழுநிகர்
காராள்சண்பையிற் கவுசிகனென்போ
னிருபிறப்பாள னொருமகனுள்ளே
னொருதனியஞ்சே னோராநெஞ்சமோ
டாராமத்திடை யலர்கொய்வேனை
மாருதவேக னென்பனோர்விஞ்சையன்
றிருவிழைமூதூர் தேவர்கோற்கெடுத்த
பெருவிழாக்காணும் பெற்றியின்வருவோன்
றாரன்மாலையன் றமனியப்பூணினன்
பாரோர்காணப் பலர்தொழும்படிமைய
னெடுத்தனனெற்கொண் டெழுந்தனன்விசும்பிற்
படுத்தனனாங்கவன் பான்மையாளனே
னாங்கவனீங்கெனை யகன்றுகண்மாறி
நீங்கினன்றன்பதி நெட்டிடையாயினு
மணிப்பூங்கொம்பர் மணிமேகலைதான்
றனித்தலர்கொய்யுந் தன்மையளல்லள்
பன்மலரடுக்கிய நன்மரப்பந்த
ரிலவந்திகையி னெயிற்புறம்போகி
னுலகமன்னவ னுழையோராங்குளர்
விண்ணவர்கோமான் விழாக்கோணன்னாள்
மண்ணவர்விழையார் வானவரல்லதைப்
பாடுவண்டிமிராப் பன்மரம்யாவையும்

வாடாமாமலர் மாலைகடேக்கலிற்
கைபெய்பாசத்துப் பூதங்காக்குமென்
றுய்யானத்திடை யுணர்ந்தோர்செல்லார்
வெங்கதிர்வெம்மையின் விரிசிறையிழந்த
சம்பாதியிருந்த சம்பாதிவனமுந்
தவாநீர்க்காவிரிப் பாவைதன்றாதைக்
கவேரனாங்கிருந்த * கவேரவனமும்
மூப்புடைமுதுமைய தாக்கணங்குடைய
தியாப்புடைத்தாக வறிந்தோரெய்தா
வருளுமன்பு மாருயிரோம்பு
மொருபெரும்பூட்கையு மொழியாநோன்பிற்
பகவனதாணையிற் பன்மரம்பூக்கு
முவவனமென்பதொன் றுண்டதனுள்ளது
விளிப்பறைபோகாது மெய்ப்புறத்திடூஉம்
பளிக்கறைமண்டப முண்டதனுள்ளது
தூநிறமாமணிச் சுடரொளிவிரிந்த
தாமரைப்பீடிகை தானுண்டாங்கிடி
னரும்பவிழ்செய்யு மலர்ந்தனவாடாச்
சுரும்புமூசாத் தொல்யாண்டுகழியினும்
மறந்தெனதன்றிற மாதவிகேளாய்
கடம்பூண்டோர்தெய்வங் கருத்திடைவைத்தோ
ராங்கவரடிக்கி னவரடிதானுறு
நீங்காதியாங்கணு நினைப்பிலராயிடி
னீங்கிதன்காரண மென்னையென்றியேற்
சிந்தையன்றியுஞ் செய்வினையுறுமெனும்
வெந்திறனோன்பிகள் விழுமங்கொள்ளவுஞ்
செய்வினைசிந்தை யின்றெனின்யாவது
மெய்தாதென்போர்க் கேதுவாகவு
மயங்கெழுமாமல ரிட்டுக்காட்டி
மயன்பண்டிழைத்த மரபினததுதா
னவ்வனமல்ல தணியிழைநின்மகள்
செவ்வனஞ்செல்லுஞ் செம்மைதானிலள்
மணிமேகலையொடு மாமலர்கொய்ய
வணியிழைநல்லா யானும்போவலென்
றணிப்பூங்கொம்ப ரவளொடுங்கூடி
மணித்தேர்வீதியிற் சுதமதிசெல்வுழீஇச்

---

* 'கவேரதவன'மென்றும் பாடம்.

சீர்மலிகாண்டைய னுழைத்தோற்பிரம்பினன்
றவலருஞ்சிறப்பி னனாங் * தானத்துளோ
னுணமுமுடையு நன்கனநீத்துக்
காணுவுயிர்க்குங் கையற்றேங்கி
யுண்ணுநேன்பொ டுயவலியானையின்
மண்ணுமேனியன் வருவோன்றன்னை
வந்தீரடிகளும் மலரடிதொழுதே
னெந்தமடிக ளெம்முனைர்கேண்மோ
வழுக்குடையாக்கையிற் புகுந்தநம்முயிர்
புழுக்கறைப்பட்டோர் போன்றுவருந்தா
இம்மையுமறுமையு மிறுதியிலின்பமுந்
தன்வயிற்றருஉமென் றலைமகனுரைத்தது
கொலையுமுண்டோ கொழுமடற்றெங்கின்
விளைபூந்தேறன் மெய்த்தவத்தீரோ
யுண்டுதெளிந்திவ் வியோகத்துறுபயன்
கண்டாலெம்மையுங் கைவிதிர்[illegible]கொண்மென
வுண்ணுநோன்பியைத் தன்னொடுஞ்சூளுற்
றுண்மெனவிரக்குமோர் களிமகன்பின்னருங்
கணவிரமாலையிற் கட்டியதிரள்புயன்
குவிமுகிழெருக்கிற் கோத்தமாலையன்
சிதவற்றுணியொடு சேணொங்குநெஞ்சினைத்
தாதவிழ்பொடித்தூக் கட்டியவுடையினன்
வெண்பலிச்சாந்த மெய்முழுதுநீஇப்
பண்பில்கிளவி பலரொடுமுரைத்தாங்
கழூஉம்விழூஉ மாற்றவுழந்து
தொழூஉமெழூஉஞ் சுழலவுஞ்சுழலு
மோடலுமோடு மொருசிறையொதுங்கி
நீடலுநீடு நிழலொடுமறலு
மையலுற்ற மகன்பின்வருந்திக்
கையறுதுன்பங் கண்டுநிற்குநருஞ்
சுரியற்றாடிய மருள்படுபூங்குழல்
பவளச்செவ்வாய் தவளவெண்ணகை
யொள்ளரிநெடுங்கண் வள்ளைவெண்டோட்டுக்
கருங்கொடிப்புருவத்து மருங்குவளைபிறைநுதற்
காந்தளஞ்செங்கை யேந்திளவனமுலை
யகன்றவல்கு லந்நுண்மருங்கு

* 'தனத்துளோன்' என்றும் பாடம்.

விகந்தபட்டுடை யெழுதுவரிக்கோலத்து
வாணன்பெயரூர் மறுகிடைத்தோன்றி
நீணிலமளந்தோன் மகன்முன்னாடிய
பேடிக்கோலத்துப் பேடிகாண்குநரும்
வம்பமர்மாக்கள் கம்பலைமூதூர்ச்
சுடுமண்ணோங்கிய நெடுநிலைமனைதொறு
மையறுபடிவத்து வானவர்முதலா
வெவ்வகையுயிர்களு முவமங்காட்டி
வெண்சுதைவிளக்கத்து வித்தகரியற்றிய
கண்கவரோவியங் கண்டுநிற்குநரும்
விழாவாற்றுப்படுத்த கழிபெருவீதியிற்
பொன்னுண்கோத்த நன்மணிக்கோவை
ஐயவியப்பிய நெய்யணிமுச்சி
மயிர்ப்புறஞ்சுற்றிய கயிற்கடை * முக்காழ்
பொலம்பிறைச்சென்னி நலம்பெறத்தாழச்
செவ்வாய்க்குதலை பெய்பெருமழலை
சிந்துபுசின்னீ ரைம்படைநனைப்ப
வற்றங்காவிரிச் சுற்றுடைப்பூந்துகி
லுடுத்தமணிக்கோவை யுடுப்பொடுதுயல்வரத்
தளர்நடைதாங்காக் கிளர்பூம்புதல்வரைப்
பொலந்தேர்மீமிசைப் புகர்முகவேழத்
திலங்குகொடிநல்லார் சிலர்நின்றேற்றி
யாலமர்செல்வன் மதன்விழாக்கால்கொளக்
காண்மினோவெனக் கண்டுநிற்குநரும்
விராடன்பேரூர் விசயப்பேடியைக்
காணியசூழ்ந்த கம்பலைமாக்களின்
மணிமேகலையை வந்துபுறஞ்சுற்றிய
வணியிழைத்தோற்றத் தருந்தவப்படுத்திய
தாயோகொடியவ டகவிலளீங்கிவள்
மாமலர்கொய்ய மலர்வனந்தான்புகி
னல்லிளவன்ன நாணுதாங்குள
வல்லுநகொல்லோ மடந்தைதன்னடை
மாமயிலாங்குள வந்துமுன்னிற்பன
சாயல்கற்பனகொலோ தையறன்னுடன்
பைங்கிளிதானுள பாவைதன்கிளவிக்
கெஞ்சலகொல்லோ விசையுநவல்ல

---

* 'முகக்காழ்' என்றும் பாடம்.

வென்றிவைசொல்லிய யாவருநினைந்துகச்
செந்தளிர்ச்சேவடி நிலம்வடுவுறாமற்
குரவமுமரவமுங் குருந்துங்கொன்றையுந்
திலகமுஞ்செங்கால் வெட்சியுந்தீதிலா
நரந்தமுநாகமும் பரந்தலர்புன்னையும்
பிடவமுந்தளவமும் முடமுட்டாழையுங்
குடசமும்வெதிரமுங் கொழுங்காலசோகமுஞ்
செருந்தியும்வேங்கையும் பெருஞ்சண்பகமு
மெரிமலரிலவமும் விரிமலர்ப்பரப்பி
வித்தகரியற்றிய விளங்குகைவினை
சித்திரச்செய்கைப் படப்போர்த்ததுவே
யொப்பத்தோன்றிய வுவவனந்தன்னைத்
தொழுதனள்காட்டிய சுதமதிதன்னொடு
மலர்கொய்யப்புகுந்தனள் மணிமேகலையென.

மலர்வனம்புகு காதை முற்றிற்று.

---

நான்காவது

## பளிக்கறைபுகு காதை.

பரிதியஞ்செல்வன் விரிகதிர்த்தானைக்
கிருள்வளைப்புண்டன மருள்படுபூம்பொழிற்
குழலிசைதும்பிக் கொழுந்திக்காட்ட
மழலைவரிவண்டின நல்யாழ்செய்ய
வெயினுழைவறியாக் குயினுழைபொதும்பர்
மயிலாடரங்கின் மந்திகாண்பன
மாசறத்தெளிந்த மணிநீரிலஞ்சிப்
பாசடைப்பரப்பிற் பன்மலரிடைநின்
றொருத்தனியோங்கிய விரைமலர்த்தாமரை
யரசவன்ன மாங்கினிதிருப்பக்
கரைநின்றாலு மொருமயிறனக்குக்
கம்புட்சேவற் கனைகுரன்முழவாக்
கொம்பரிருங்குயில் விளியதுகாணு
மியங்குதேர்வீதி யெழுதுகள்சேர்ந்து
வயங்கொளிமயங்கிய மாதர்நின்முகம்போல்
விரைமலர்த்தாமரை கரைநின்றோங்கிய
கோடுடைத்தாழைக் கொடுமடலவிழ்ந்த

வால்வெண்சுண்ண மாடியவிதுகாண்
மாதர்நின்கண் போதெனச்சேர்ந்து
தாதுண்வண்டின மீதுகடிசெங்கையி
னஞ்சிறைவிரிய வலர்ந்ததாமரைச்
செங்கயல்பாய்ந்து பிறழ்வனகண்டாங்
கெறிந்ததுபெருஅ திரையிழந்துவருந்தி
மறிந்துநீங்கு மணிச்சிரல்காணெனப்
பொழிலும்பொய்கையுஞ் சுதமதிகாட்ட
மணிமேகலையம் மலர்வனங்காண்புழி
மதிமருள்வெண்குடை மன்னவன்சிறுவ
னுதயகுமர னுருகெழுமூதூர்
நனிதானடுங்க நடுநின்றோங்கிய
கூம்புமுதன்முறிய வீங்குபிணியவிழ்ந்து
கயிறுகால்பரிய வயிறுபாழ்பட்டாங்
கிதைச்சிதரார்ப்பத் திரைபொருமுந்நீர்
இயங்குதிசையறியா தியாங்கணுமோடி
மயங்குகாலெடுத்த வங்கம்போலக்
காழோர்கையற மேலோரின்றிப்
பாகின்பிளவையின் பணைமுகந்துடைத்துக்
கோவியல்வீதியுங் கொடித்தேர்வீதியும்
பீடிகைத்தெருவும் பெருங்கலக்குறுத்தாங்
கிருபாற்பெயரிய வுருகெழுமூதூர்
ஒருபாற்படா தொருவழித்தங்காது
பாகும்பறையும் பருந்தின்பந்தரு
மாதுலமாக்களு மலவுற்றுவிளிப்ப
நீலமால்வரை நிலனொடுபடர்ந்தெனக்
காலமேகங்கதங் களிமயக்குற்றென
விடுபரிக்குதிரையின் விரைந்துசென்றெய்திக்
கடுங்கண்யானையின் கடாத்திறமடக்கி
யணித்தேர்த்தானையோ டரசிளங்குமரன்
மணித்தேர்க்கொடிஞ்சிக் கையாற்பற்றித்
தாரலர்கடம்ப னல்லனென்ப
தாரங்கண்ணியிற் சாற்றினன்வருவோ
னாடகமடந்தையர் நலங்கெழுவீதி
யாடகச்செய்வினை மாடத்தங்கட்
சாளரம்பொளித்த கால்போகுபெருவழி
வீதிமருங்கியன்ற பூவணைப்பள்ளித்

தகரக்குழலா டன்னொடுமயங்கி
மகரயாழின் வான்கோடுதழீஇ
வட்டிகைச்செய்தியின் வரைந்தபாவையி
னெட்டிருமாணி னிருந்தோன்றன்னை
மாதர்தன்னொடு மயங்கினையிருந்தோ
யாதுநீயுற்ற விடுக்கணென்றலு
மாங்கதுகேட்ட வீங்கிளமுலையொடு
பாங்கிற்சென்று தான்றொழுதேத்தி
மட்டவிழலங்கன் மன்னகுமரற்
கெட்டிகுமர னெய்தியதுரைப்போன்
வகைவரிச்செப்பின் வைகியமலர்போற்
றகைநலம்வாடி மலர்வனம்புகூஉ
மாதவிபயந்த மணிமேகலையொடு
கோவலனுற்ற கொழுந்துயர்தோன்ற
நெஞ்சிறைகொண்ட நீர்மையைநீக்கி
வெம்பகைநரம்பி னென்கைச்செலுத்திய
தீதியானுற்ற விடும்பையென்றலு
மதுமலர்த்தாரோன் மனமகிழ்வெய்தி
யாங்கவடன்னை யெண்ணித்தேரோற்றி
யீங்கியான்வருவ மென்றவர்க்குரைத்தாங்
கோடுமழைகிழியு மதியம்போல
மாடவீதியின் மணித்தேர்கடைஇக்
காரணிபூம்பொழிற் கடைமுகங்குறுகத்
தேரொலிமாதர் செவிமுதலிசைத்தலுஞ்
சித்திராபதியோ டுதயகுமரனுற்
றென்மேல்வைத்த வுள்ளத்தானென
வயந்தமாலை மாதவிக்கொருநாட்
கிளந்தமாற்றங் கேட்டேனாதலி
னாங்கவன்றேரொலி போலுமாயிழை
யீங்கென்செவிமுத லிசைத்ததென்செய்கென
வமுதுறழீஞ்சொ லாயிழையுரைத்தலுஞ்
சுதமதிகேட்டுத் துளக்குறுமயில்போற்
பளிக்கறைமண்டபம் பாவையைப்புகுகென்
றொளித்தறைதாட்கோத் துள்ளகத்திரீஇ
யாங்கதுதனக்கோ ரைவில்லின்கிடக்கை
நீங்காதுநின்ற நேரிழைதன்னைக்
கல்லென்றானையொடு கடுந்தேர்நிறுத்திப்

பன்மலர்ப்பூம்பொழிற் பகன்முளைத்ததுபோற்
பூமரச்சோலையும் புடையும்பொங்கருந்
தாமரைச்செங்கண் பரப்பினன்வரூஉ
மரசிளங்குமர னருமியொருசிறை
யொருதனிநின்று யுன்றிறமறிந்தேன்
வளரிளவனமுலை மடந்தைமெல்லியல்
தளர்நடையறியுந் தன்மையைகொல்லோ
விளையாமழலையின் விளைந்துமெல்லியல்
முளையெயிறரும்பிய முத்துநிரைத்தனகொல்
செங்கயனெடுங்கண் செவிமருங்கோடி
வெங்கணைநெடுவேல் வியப்புரைக்குங்கொல்
மாதவருறைவிட மொரீஇமணிமேகலை
தானேதமியளிங் கெய்தியதையெனப்
பொதியனற்பட்டோர் போன்றுளம்வருந்தி
மதுமலர்க்கூந்தற் சுதமதியுரைக்கு
மிளமைநாணி முதுமையெய்தி
யுரைமுடிவுகாட்டிய வரவோன்மருங்கற்
கறிவுஞ்சால்பு மரசியல்வழக்குஞ்
செறிவளைமகளிர் செப்பலுமுண்டோ
வினையதாயினும் யானென்றுகிளப்பல்
வினைவிளங்குதடக்கை விறலோய்கேட்டி
வினையின்வந்தது வினைக்குவினையாயது
புனைவினைநீக்கிற் புலால்புறத்திடுவது
மூத்துவிளிவுடையது தீப்பிணியிருக்கை
பற்றினபற்றிடங் குற்றக்கொள்கலம்
புற்றடங்காவிற் செற்றச்சேக்கை
யவலக்கவலை கையாற்றழுங்க
றவலாவுள்ளந் தன்பாலுடையது
மக்கள்யாக்கை யிதுவெனவுணர்ந்து
மிக்கோவிதனைப் புறமறியாரா
யென்றவருரைத்த விசைபடுதீச்சொல்
சென்றவனுள்ளஞ் சேராமுன்னர்ப்
பளிங்குபுறத்தெறிந்தவள்பாவையி
னிளங்கொடிதோன்று மாலிளங்கோமுன்னென.

பளிக்கறைபுக்ககாதை முற்றிற்று.

## ஐந்தாவது

# மணிமேகலாதெய்வந்தோன்றிய காதை.

இளங்கோன்கண்ட விளம்பொற்பூங்கொடி
விளங்கொளிமேனி விண்ணவர்வியப்பப்
பொருமுகப்பளிங்கி னெழினிவீழ்த்துத்
திருவின்செய்யோ ளாடப்பாவையின்
விரைமலரைங்கணை மீனவிலோதனத்
துருவிலாளனொ டேமம்பெயர்ப்ப
வோவியனுள்ளத் துள்ளியதுவியப்போன்
காவியங்கண்ணி யாகுதறெளிந்து
தாளொளிமண்டபந் தன்கையிற்றடைஇய
சூழ்வோன்சுதமதி தன்முகநோக்கிச்
சித்திரக்கைவினை திசைதொறுஞ்சிறந்தன
வெத்திறத்தாளின் னிளங்கொடியுரையெனக்
குருகுபெயர்க்குன்றங் கொன்றோனன்னநின்
முருகச்செவ்வி முகந்துதன்கண்ணாற்
பருகாளாயிற் பைந்தொடிநங்கை
யூழ்தருதவத்தள் சாபசாத
காமற்கடந்த வாய்மையளென்றே
தூமலர்க்கூந்தற் சுதமதியுரைப்பச்
சிறையுமுண்டோ செழுமணன்மிக்குழீஇ
நிறையுமுண்டோ காமங்காழ்க்கொளினின்
செவ்வியளாயினென் செவ்வியளாகென
வவ்வியநெஞ்சமோ டகல்வோனாயிடை
யஞ்செஞ்சாய லார்ந்தானத்துளோர்
விஞ்சையனிட்ட விளங்கிழையென்றே
கல்லென்பேரூர்ப் பல்லோருரையினை
யாங்கவருறைவிட நீங்கியாயிழை
யீங்கிவடன்னொ டெய்தியதுரையென
வார்கழல்வேந்தே வாழ்கநின்கண்ணி
தீநெறிப்படரா நெஞ்சினையாகுமதி
யீங்கிவடன்னொ டெய்தியகாரணம்
வீங்குநீர்ஞால மாள்வோய்கேட்டருள்
யாப்புடையுள்ளத் தெம்மனையிழந்தோன்
பார்ப்பனமுதுமகன் படிவம்வாயன்

மழைவளந்தரூஉ மழகிலாம்பாளன்
பழவினைப்பவத்தாற் பிழைமணமெய்திய
வேற்கெடுத்திரங்கித் தற்றகவுடைமையிற்
குரங்கிருசெய்கடற் குமரியம்பெருந்துறை
பரந்துசென்மாக்களொடு தேடினன்பெயர்வோன்
கடன்மண்டுபெருந்துறைக் காவிரியாடிட
வடமொழியாளரொடு வருவோன்கண்டீங்
கியாங்ஙனம்வந்தனை யெம்மகளென்றே
தாங்காக்கண்ணீ ரொன்றலையுகுத்தாங்
கோதலந்தணர்க் கொவ்வேறாயினுங்
காதலறுதலிற் கைவிடலினியா
னிரந்துண்டலைக்கொண் டிந்நகர்மருங்கிற்
பரந்துபடுமனைதொறுந் திரிவோனொருநாட்
புனிற்றாப்பாய்ந்த வயிற்றுப்புண்ணினன்
கணவிரமாலை கைக்கொண்டனனிறை
நீடுபெருங்குடர் கையகத்தடக்கி
யென்மகளிருந்த விடமென்றெண்ணித்
தன்னுறுதுன்பந் தாங்காதுபுகுந்து
சமணீர்காணுஞ் சரணென்றோனை
யிவணீரல்லவென் றென்றெறும்வெகுண்டு
மையறுபடிவத்து மாதவர்புறத்தெமைக்
கையுதிர்க்கோடலிற் கண்ணறைநீரொ
மறவோரருளீரோ வாருமிலோமெனப்
புறவோர்வீதியிற் புலம்பொடுசாற்ற
மங்குறோய்மாட மனைதொறும்புகூஉ
மங்கையிற்கொண்ட பாத்திரமுடையோன்
கதிர்சூடுமமையத்துப் பன்மலிமுகத்தோன்
பொன்னிற்றிகழும் பொலம்பூவாடையன்
என்னுற்றனிரோ வென்றமைநோக்கி
யன்புடனளைஇய வருண்மொழியதனா
லஞ்செவிநிறைந்து நெஞ்சகங்குளிர்ப்பித்துத்
தன்கைப்பாத்திர மென்கைத்தந்தாங்
கெந்தைக்குற்ற விடும்பைகணீங்க
வெடுத்தனன்றழீஇக் கடுப்பத்தலையேற்றி
மாதவருறைவிடங் காட்டியமறையோன்
சாதுயர்நீக்கிய தலைவன்றவமுனி
சங்கத்தருமன் றானெமக்கருளிய

வெங்கோனியல்குண னேதமில்குணப்பொரு
ளுலகநோன்பிற் பல்கதியுணர்ந்து
தனக்கெனவாழாப் பிறர்க்குரியாளனி
னின்பச்செவ்வி மன்பதையெய்த
வருளறம்பூண்ட வொருபெரும்பூட்கையின்
றக்கதிராழி திறப்படவுருட்டி
காமற்கடந்த வாமன்பாதந்
தகைபாராட்டுத லல்லதையாவது
மிகைநாவில்லென வேந்தேவாழ்கென
வஞ்சொலாயிழை நின்றிறமறிந்தேன்
வஞ்சிநுண்ணிடை மணிமேகலைதனைச்
சித்திராபதியாற் சேர்தலுமுண்டென்
றப்பொழிலாங்கவ ளயர்ந்துபோயபின்
பளிக்கறைதிறந்து பனிமதிமுகத்துக்
களிக்கயல்பிறழாக் காட்சியளாகிக்
கற்புத்தானில ணற்றவம்புணர்விலள்
வருணக்காப்பிலள் பொருள்விலையாட்டியென்
றிகழ்ந்தனனாகி நயந்தோனென்னாது
புதுவோன்பின்னர்ப் போனதென்னெஞ்ச
மிதுவோவன்றே காமத்தற்றகை
யிதுவேயாயிற் கெடுகதன்றிறமென்
மதுமலர்க்குழலாண் மணிமேகலைதான்
சுதமதிதன்னொடு நின்றவெல்லையு
ளிந்திரகோடணை விழாவணிவிரும்பி
வந்துகாண்குறூஉ மணிமேகலாதெய்வம்
பதியகத்துறையுமோர் பைந்தொடியாகி
மணியறைப்பீடிகை வலங்கொண்டோங்கிப்
புலவன்றீர்த்தன் புண்ணியன்புராண
னுலவாநோன்பி னுயர்ந்தோயென்கோ
குற்றங்கடிந்தோய் செற்றஞ்செறுத்தோய்
முற்றவுணர்ந்த முதல்வாவென்கோ
காமற்கடந்தோ யேமமாயோய்
தீநெறிக்கடும்பகை கடந்தாயென்கோ
வாயிரநாமத் தாழியன்றிருந்தடி
நாவாயிரண்டுமி லேத்துவதெவனென்
றெரிமணிப்பூங்கொடி யிருநிலமருங்குவந்
தொருதனித்திரிவதொத் தோதியினொதுங்கி

நிலவரையிறந்தோர் முடங்குநர்நீட்டும்
புலவரையிறந்த புகாரெனும்பூங்கொடி
பன்மலர்சிறந்த நன்னீரகழிப்
புள்ளொலிசிறந்த தெள்ளரிச்சிலம்படி
ஞாயிலிஞ்சி நகைமணிமேகலை
வாயின்மருங்கியன்ற வான்பணைத்தோளி
தருநிலைவச்சிர மெனவிருகோட்ட
மெதிரெதிரோங்கிக் கதிரிளவனமுலை
யார்புனைவேந்தர்க்குப் பேரளவியற்றி
யூழியெண்ணி நீடுநின்றோங்கிய
வொருபெருங்கோயிற் றிருமுகவாட்டிக்
குணதிசைமருங்கி னாண்முதிர்மதியமுங்
குடதிசைமருங்கிற் சென்றுவீழ்கதிரும்
வெள்ளிவெண்டோட்டொடு பொற்றோடாக
வெள்ளறுதிருமுகம் பொலியப்பெய்தலு
மன்னச்சேவ லயர்ந்துவிளையாடிய
தன்னுறுபேடையைத் தாமரையடக்கப்
பூம்பொதிசிதையக் கிழித்துப்பேடைகொண்
டோங்கிருந்தெங்கி னுயர்மடலேற
யன்றிற்பேடை யரிகுரலழைஇச்
சென்றுவீழ்பொழுது சேவற்கிசைப்பப்
பவளச்செங்காற் பறவைக்கானத்துக்
குவளைமேய்ந்த குடக்கட்சேதா
முலையொழிதீம்பா லெழுதுகளவிப்பக்
கன்றுநினைகுரன் மன்றுவழிப்படா
வந்தியந்தணர் செந்தீப்பேண
பைந்தொடிமகளிர் பல்விளக்கெடுப்ப
யாழோர்மருதத் தின்னரம்புளரக்
கோவலர்முல்லைக் குழன்மேற்கொள்ள
வைப்புவமாக மருங்கிற்கணவனை
யிழந்துதமரகம்புகூஉ மொருமகள்போலக்
கதிராற்றுப்படுத்த முதிராத்துன்பமோ
டந்தியென்னும் பசலைமெய்யாட்டி
வந்திறுத்தனளான் மாநகர்மருங்கென.

மணிமேகலாதெய்வந்தோன்றியகாதை முற்றிற்று.

## ஆறாவது
# சக்கரவாளக்கோட்டம்புக்ககாதை.

அந்திமாலை நீங்கியபின்னர்
வந்துதோன்றிய மலர்கதிர்மண்டிலஞ்
சான்றோர்தங்க ணெய்தியகுற்றந்
தோன்றுவழிவிளங்குந் தோற்றம்போல
மாசறுவிசும்பின் மறுநிறங்கிளர
வாசறவிளங்கிய வந்தீந்தண்கதிர்
வெள்ளிவெண்குடத்துப் பால்சொரிவதுபோற்
கள்ளவிழ்பூம்பொழி லிடையிடைசொரிய
வுருவுகண்ட மின்னேபோன்று
திருவிலிட்டுத் திகழ்தருமேனியா
ளாதிமுதல்வ னறவாழியாள்வோன்
பாதபீடிகை பணிந்தனளேத்திப்
பதியகத்துறையுமோர் பைந்தொடியாகிச்
சுதமதிநல்லா டன்முகநோக்கி
யீங்குநின்றீ ரென்னுற்றீரென
வாங்கவளாங்கவன் கூறியதுரைத்தலு
மரசிளங்குமர னாயிழைதன்மேற்
றணியாநோக்கந் தவிர்விலனாகி
யறத்தோர்வனமென் றகன்றனனாயினும்
புறத்தோர்வீதியிற் பொருந்துதலொழியான்
பெருந்தெருவொழித்துப் பெருவனஞ்சூழ்ந்த
திருந்தெயிற்குடபால் சிறுபுழைபோகின்
மிக்கனமாதவர் விரும்பினருறையுஞ்
சக்கரவாளக் கோட்டம்புக்காற்
கங்குல்கழியினுங் கடுநவையெய்தா
தங்குநீர்போமென வருந்தெய்வமுரைப்ப
வஞ்சவிஞ்சையன் மாருதவேகனு
மஞ்செஞ்சாய னீயுமல்லது
நெடுநகர்மருங்கி னுள்ளோரெல்லாஞ்
சுடுகாடுகோட்ட மென்றலதுரையார்
சக்கரவாளக் கோட்டமீதென
மிக்கோய்கூறிய வுரைப்பொருளறியே
னீங்கிதன்காரண மென்சொலோவென

வாங்கதன்காரண மறியக்கூறுவன்
மாதவிமகளொடு வல்லிருள்வரினு
நீகேளென்றே நேரிழைகூறுமி
ஞமப்பேரூர் தன்னொடுதோன்றிய
வீமப்பெருங்கா டங்கிதனயல
தாராநற்றே ரொலியகப்படுத்துத்
தேவர்புகுதரூஉஞ் செழுங்கொடிவாயிலு
நெல்லுங்கரும்பு நீருஞ்சோலையு
நல்வழியெழுதிய நலங்கிளர்வாயிலும்
வெள்ளிவெண்சுதை யெழுதியமாடத்
துள்ளுருவெழுதா வெள்ளிடைவாயிலு
மடித்தசெவ்வாய்க் கடுத்தநோக்கிற்
றொடுத்தபாசத்துப் பிடித்தசூலத்து
நெடுநிலைமண்ணீடு நின்றவாயிலு
நாற்பெருவாயிலும் பாற்பட்டோங்கிய
காப்புடையிஞ்சிக் கடிவழங்காரிடை
யுலையாவுள்ளமோ டுயிர்க்கடனிறுத்தோர்
தலைதாங்குநெடுமரந் தாழ்ந்துபுறஞ்சுற்றிப்
பீடிகையோங்கிய பெரும்பலிமுன்றிற்
காடமர்செல்வி கழிபெருங்கோட்டமு
மருந்தவற்காயினு மல்லவற்காயினு
மொருங்குடன்மாய்ந்த பெண்டிர்க்காயினு
நால்வேறுவருணப் பால்வேறுகாட்டி
யிறந்தோர்மருங்கிற் சிறந்தோர்செய்த
குறியவுநெடியவுங் குன்றுகண்டன்ன
சுடுமண்ணோங்கிய நெடுநிலைக்கோட்டமு
மருந்திறற்கடவுட் டிருந்தபலிக்கந்தமு
நிறைகற்றெற்றியு மிறைக்களச்சந்தியுந்
தண்டுமண்டையும் பிடித்துக்காவல
ருண்டுகண்படுக்கு முறையுட்குடிசையுந்
தூமக்கொடியுஞ் சுடர்த்தோரணங்களு
மீமப்பந்தரு மியாங்கணும்பரந்து
சுடுவோரிடுவோர் தொடுகுழிப்படுப்போர்
தாழ்வயினடைப்போர் தாழியிற்கவிப்போ
ரிரவும்பகலும் பெயர்வீடின்றி
வருவோர்பெயர்வோர் மாறாச்சும்மையு
மெஞ்சினர்மருங்கி னீமஞ்சுற்றி

நெஞ்சநடுக்குறூஉ நெய்தலோசையு
முறவோரிறந்த தொழுவிளிப்பூசலும்
பிறவோரிறந்த வழுவிளிப்பூசலும்
வீண்முகநரியின் றீவிளிக்கூவுஞ்
சாவோர்ப்பயிருங் கூகையின்குரலும்
புலாலூண்பொருந்திய குராலின்குரலு
மூண்டலைதூற்றிய வாண்டலைக்குரலு
நன்னீர்ப்புணரி நளிர்கடலோதையி
னின்றுவிசையொலி யென்றுநின் றறாது
தான்றியுமொடுவையு முழிஞ்சியுமொடுங்கிக்
கான்றையுஞ்சூறையுங் கள்ளியும்படர்ந்து
காய்பசிக்கடும்பேய்க் கணங்கொண்டீண்டு
மாலம்பெருஞ்சினை வாகைமன்றமும்
வெண்ணிணந்தடியொடு மாந்திமகிழ்சிறந்து
புள்ளிறைகூரும் வெள்ளிலமன்றமுஞ்
சுடலைநோன்பிக ளொடியாவுள்ளமொடு
மடைதீயுறுக்கும் வன்னிமன்றமும்
விரதயாக்கைய ருடைதலைதொகுத்தாங்
கிருந்துடற்படுக்கு மிரத்திமன்றமும்
பிணந்தின்னரிக்க ணிணம்படுகுழிசியின்
விருந்தாட்டயரும் வெள்ளிடைமன்றமு
மழற்பெய்குழிசியும் பிழற்பெய்மண்டையும்
வெள்ளிற்பாடையு முள்ளிட்டறுவையும்
பரிந்தமாலையு முடைந்தகும்பமும்
நெல்லும்பொரியுஞ் சில்பலியரிசியும்
யாங்கணும்பரந்த வோங்கிரும்பறந்தலைத்
தவத்துறைமாக்கள் மிகப்பெருஞ்செல்வ
ரீற்றிளம்பெண்டி ராற்றுப்பாலக
ருளைநோயுடையோ ரிளையோரொன்றுன்
கொடுந்தொழிலாளன் கொன்றனன்குவிப்பவிவ்
வழல்வாய்ச்சுடலை தின்னக்கண்டுங்
கழிபெருஞ்செல்வக் கள்ளாட்டயர்ந்து
மிக்கநல்லறம் விரும்பாதுவாழு
மக்களிற்சிறந்த மடவோருண்டோ
வாங்கதுதன்னையோ ரருங்கடிநகரெனச்
சார்ங்கலனென்போன் றனிவழிச்சென்றோ
னென்புந்தடியு முதிரமுமியாக்கையென்

றன்புறமாக்கட் கறியச்சாற்றி
வழுவொடுகிடந்த புழுவூண்பிண்டத்
தலத்தகமூட்டிய வடிநரிவாய்க்கொண்
டுலப்பிலின்பமோ டுளைக்குமோதையுங்
கலைப்புறவல்குல் கழுகுகுடைந்துண்டு
நிலத்தலைநெடுவிளி யெடுக்குமோதையுங்
கடகஞ்செறித்த கையைத்தீநா
யுடையகத்துலவி யொடுங்காவோதையுஞ்
சாந்தந்தோய்ந்த வேந்திளவனமுலை
காய்ந்தபசியெருவை கவர்ந்தூணோதையும்
பண்புகொள்யாக்கையின் வெண்பயங்கத்து
மண்கணைமுழவ மாகவாங்கோர்
கருந்தலைவாங்கிக் கையகத்தேந்தி
யிரும்பேருவகையி னெழுந்தோர்பேய்மகள்
புயலோகுழலோ கயலோகண்ணோ
குமிழோமூக்கோ விதழோகவிரோ
பல்லோமுத்தோ வென்னாதிரங்காது
கண்டொட்டுண்டு கவையடிப்பெயர்த்துத்
தண்டாக்களிப்பி னாடுங்கூத்துக்
கண்டனன்வெரீஇக் கடுநவையெய்தி
விண்டோர்திசையின் விளிந்தனன்பெயர்ந்தீங்
கெம்மனைகாணா வீமச்சுடலையின்
வெம்முதுபேய்க்கென் னுயிர்கொடுத்தேனெனத்
தம்மனைதாமுன் வீழ்ந்துமெய்வைப்பப்
பார்ப்பான்றன்னொடு கண்ணிழந்திருந்தவித்
தீத்தொழிலாட்டியென் சிறுவன்றன்னை
யாருமிறமியே னென்பதுநோக்கா
தாருயிருண்ட தணங்கோபேயோ
துறையுமன்றமுந் தொல்பதிமரனு
முறையுளுங்கோட்டமுங் காப்பாய்காவாய்
தகவிலைகொல்லோ சம்பாபதியென்
மகன்மெய்யாக்கை மார்புறத்தழீஇ
யீமப்புறங்கா டெயிற்புறவாசலிற்
கோதமையென்பாள் கொடுந்துயர்சாற்றக்
கடிவழங்குவாயிற் கடுந்துயரெய்தி
யிடையிருள்யாமத் தென்னையீங்கழைத்தா
யென்னுற்றனையோ வெனக்குரையென்றே

பொன்னிற்பொலிந்த நிறத்தாடோன்ற
வாருமிலாட்டியென் னறியாப்பாலக
னீமப்புறங்காட் டெய்தி யான்றன்னை
யணங்கோ்பேயோ வாருயிருண்ட
துறங்குவான்போலக் கிடந்தனன்காணேன்
வணங்கும்பேயு மாருயிருண்ணாப்
பிணங்குநூன்மார்பன் பேய்நுகர்ந்தாக
வூழ்வினைவந்திவ னுயிருண்டுகழிந்தது
மாபெருந்துன்ப மொழிவாயென்றலு
மென்னுயிர்கொண்டிவ னுயிர்தந்தாலென்
கண்ணில்கணவனை யிவன்காத்தோம்பு
மிவனுயிர்தந்தீங் கென்னுயிர்வாங்கென்றலு
முதுமூதாட்டி யிரங்கினண்மொழிவோ
ளையமுண்டோ வாருயிர்போனாற்
செய்வினைமருங்கே சென்றுபிறப்பெய்துத
லாங்கதுகொணர்ந்துன் றுரிடர்நீக்குத
லீங்கெனக்காவதொன் றன்றுநீயிரங்கல்
கொலையறமாமெனுங் கொடுந்தொழின்மாக்க
ளலவலைப்படிற்றுரை யாங்கதுமடவா
யுலகமன்னவர்க் குயிர்க்குயிரீவா
ரிலரோவிந்த வீமப்புறங்காட்
டரசற்கமைந்தன வாயிரங்கோட்ட
நிரயக்கொடுமொழி நீமொழியென்றலுந்
தேவர்தருவர் வரீஇமன்றொருமுன்ற
நான்மறையந்தண னன்னூலுரைக்கு
மாபெருந்தெய்வ நீயருளாவிடின்
யானோகாவே னென்னுயிரொன்றபி
னாழிமுதல்வ னுயிர்தரினல்ல
தாழியகவயிற் றிரிவோர்தாந்தரின்
யானுந்தருகுவன் மடவாயென்றே
யீங்கெனுற்றலுங் காண்பாயென்றே
நால்வகைமரபி னரூபிப்பிடாமரு
நானால்வகையி னுரூபிப்* பிடாமரு
மிருவகைச்சுடரு மிருமூவகையிற்
பெருவனப்பெய்திய தெய்வக்கணங்களும்
பல்வகையசுரரும் படுதுயருறூஉ

---

* 'பிரமரும்' என்றும் பாடம்.

மெண்வகைநாகரு மிருவிசும்பியங்கும்
பன்மீனீட்டமு நாளுங்கோளுந்
தன்னகத்தடக்கிய சக்கரவாளத்து
வரந்தரற்குரியோர் தலைமுன்னிறுத்திங்
கரந்தைகெடுமிவ ளருந்துயரிதுவெனச்
சம்பாபதிதா னுரைத்தவம்முறையே
யெங்குவாழ்தேவரு முரைப்பக்கேட்டக்
கோதமையுற்ற கொடுந்துயர்நீங்கி
யீமச்சுடலையின் மகனையிட்டிறந்தபின்
சம்பாபதிதன் * னாற்றல்தோன்ற
வெங்குவாழ்தேவருங் கூடியவிடந்தனிற்
சூழ்கடல்வளைஇய வாழியங்குன்றத்து
நடுவுநின்ற மேருக்குன்றமும்
புடையினின்ற வெழுவகைக்குன்றமு
நால்வகைமரபினர் மாபெருந்தீவு
மோரீராயிரஞ் சிற்றிடைத்தீவும்
பிறவுமாங்கத னிடவகையுரியன
பெறுமுறைமரபி னறிவுவரக்காட்டி
யாங்குவாழுயிர்களு மவ்வுயிரிடங்களும்
பாங்குறமண்ணீட்டிற் பண்புறவகுத்து
மிக்கமயனா லிழைக்கப்பட்ட
சக்கரவாளக் கோட்டமீங்கிதுகா
ணிடுபிணக்கோட்ட மெயிற்புறமாதலிற்
சுடுகாட்டுக்கோட்ட மென்றலதுரையா
ரிதன்வரவிதுவென விருந்தெய்வமுரைக்க
மதனினெஞ்சமொடு வான்றுயரெய்திப்
பிறந்தோர்வாழ்க்கை சிறந்தோளுரைப்ப
விறந்திருள்கூர்ந்த விடையிருள்யாமத்துத்
தூங்குதுயிலெய்திய சுதமதியொழியப்
பூங்கொடிதன்னைப் பொருந்திடைதழீஇ
யந்தரமாறா வாறைந்தியோசனை
தென்றிசைமருங்கிற் சென்றுதிரையுடுத்த
மணிப்பல்லவத்திடை மணிமேகலாதெய்வ
மணியிழைதன்னைவைத் தகன்றதுதானென.

சக்கரவாளக்கோட்டம்புக்ககாதை முற்றிற்று.

---

* 'நோற்றல்' என்றும் பாடம்.

### ஏழாவது

## துயிலெழுப்பிய காதை.

மணிமேகலைதனை மணிப்பல்லவத்திடை
மணிமேகலாதெய்வம் வைத்துநீங்கி
மணிமேகலைதனை மலர்ப்பொழிற்கண்ட
வுதயகுமர னுறுதுயரெய்திக்
கங்குல்கழியிலென் கையகத்தாளெனப்
பொங்குமெல்லமளியிற் பொருந்தாதிருந்தோன்
முன்னர்த்தோன்றிய மன்னவன்மகனே
கோனிலைதிரிந்திடிற் கோணிலைதிரியுங்
கோணிலைதிரிந்திடின் மாரிவறங்கூரு
மாரிவறங்கூரின் மன்னுயிரில்லை
மன்னுயிரில்லா மண்ணாள்வேந்தன்
றன்னுயி *ரென்னுந் தகுதியின்றாகுந்
தவத்திறம்பூண்டோ டன்மேல்வைத்த
வவத்திறமொழிகென் றவன்வயினுரைத்தபி
னுவவனம்புகுந்தாங் குறுதுயில்கொள்ளுஞ்
சுதமதிதன்னைத் துயிலிடைநீக்கி
யிந்திரகோடணை யிந்நகர்க்காண
வந்தேனஞ்சன மணிமேகலையா
னாதிசான்முனிவ னறவழிப்படூஉ
மேதமுதிர்ந்த விளங்கொடிக்காதலி
விஞ்சையிற்கொணர்ந்துநின் விளங்கிழைதன்னையோர்
வஞ்சமின்மணிப்பல் லவத்திடைவைத்தேன்
பண்டையபிறப்பும் பண்புறவுணர்ந்திங்
கின்றேழுநாளி லிந்நகர்மருங்கே
வந்துதோன்று மடக்கொடிநல்லாள்
களிப்புமாண்செல்வக் காவற்பெயரூ
ரொளித்துருவெய்தினு முன்றிறமொழியா
ளாங்கவளிந்நகர் புகுந்தவந்நா
ளீங்குநிகழ்வன வேதுப்பலவுள
மாதவிதனக்கியான் வந்தவண்ணமு
மேதமிலென்மக ளெய்தியவண்ணமு
முரையாய்நீயவ ளென்றிறமுணருந்
திரையிரும்பௌவத் தெய்வமொன்றுண்டெனக்

* 'இன்றெனும்' என்றும் பாடம்.

கோவலன்கூறி யிக்கொடி தன்னையென்
னாமஞ்செய்த நன்னாணல்லிருள்
காமன்கையறக் கடுநவையறுக்கு
மாபெருந்தவக்கொடி யீன்றனையென்றே
நனவேபோலக் கனவகத்துரைத்தே
னீங்கிவ்வண்ண மாங்கவட்குரையென்
றந்தரத்தெழுந்தாங் கருந்தெய்வம்போயபின்
வெந்துயரெய்திய சுதமதியெழுந்தாங்
ககன்மனையரங்கத் தாசிரியர்தம்மொடு
வகைதெரிமாக்கட்கு வட்டணைகாட்டி
யாடல்புரக்குமரங் கினியன்மகளிரிற்
கூடியகுயிலுவக் கருவிகண்டுயின்று
பண்ணுக்கிளைபயிறரும் பண்ணியாழ்த்தீந்தொடை
கொளைவல்லாயமோ டிசைகூட்டுண்டு
வளைசேர்செங்கை மெல்விரலுதைத்த
வெம்மைவெய்துறாது தன்மையிற்றிரியவும்
பண்பில்காதல் பார்த்தமைநோனா
துண்கண்சிவந்தாங் கொல்குகொடிபோன்று
தெருட்டவுந்தெருளா தூடலொடுதுயில்வோர்
விரைப்பூம்பள்ளி வீழ்துணைதழுவவுந்
தளர்நடையாயமொடு தாங்காதோடி
விளையாடுசிறுதே ரீர்த்துமெய்வருந்தி
யமளிதுஞ்சு மைம்படைத்தாலிக்
குதலைச்செவ்வாய்க் குறுநடைப்புதல்வர்க்குக்
காவற்பெண்டிர் கடிப்பகையெறிந்து
தூபங்காட்டித் தூங்குதுயில்வதியவு
மிறையுறைபுறவு நிறைநீர்ப்புள்ளுங்
காவுறைபறவையு நாவுளழுந்தி
விழவுக்களியடங்கி முழவுக்கண்டுயின்று
பழவிறன்மூதூர்ப் பாயல்கொண்டுநாட்
கோமகன்கோயிற் குறுநீர்க்கன்னவன்
யாமங்கொள்வோ ரேத்தொலியரவமு
முறையுணின்றொடுங்கிய வுண்ணுவயக்கத்து
நிறையழியானை நெடுங்கூவிளியுந்
தேர்வழங்குதெருவுஞ் சிற்றிடைமுடுக்கரு
மூர்காப்பாள ரெறிதுடியோதையு
முழங்குநீர்முன்றுறைக் கலம்புணர்கம்மியர்

துழந்தகள்ளின் றொப்பியுண்டுயர்ந்து
பழஞ்செருக்குற்ற வனந்தர்ப்பாணியு
மாவாக்கடிப்பகை யையவிக்கடிப்பகை
விரவியமகளி ரோந்தியதூமத்துப்
புதல்வர்ப்பயந்த புனிதநீருயக்கத்
தாவியன்மகளிர் குளநாட்டரவமும்
வலித்தநெஞ்சி னாடவரின்றியும்
புலிக்கணத்தன்னார் பூதசதுக்கத்துக்
கொடித்தேர்வேந்தன் கொற்றங்கொள்கென
விடிக்குரன்முழக்கத் திடுபலியோதையு
மீற்றிளம்பெண்டி ராற்றாப்பாலகர்
கடுஞ்சூன்மகளிர் நெடும்புணற்றோர்
தந்துயர்கெடுக்கு மந்திரமாக்கள்
மன்றப்பேய்மகள் வந்துகைக்கொள்கென
நின்றெறிபலியி னெடுங்குரலோதையும்
பல்வேறோதையும் பரந்தொருங்கிசைப்பக்
கேட்டுளங்கலங்கிப் பூட்டிருளழுவத்
துருந்தேரிளநகை நீங்கியபூம்பொழிற்
றிருந்தெயிற்குடபாற் சிறுபுழைபோகி
மிக்கமாதெய்வம் வியந்தெடுத்துரைத்த
சக்கரவாளக் கோட்டத்தாங்கட்
பலர்புகத்திறந்த பகுவாய்வாயி
லுலகவறவி யொருபுடையிருத்தலுங்
கந்துடைநெடுநிலைக் காரணங்காட்டிய
வந்திலெழுதிய வற்புதப்பாவை
மைத்தடங்கண்ணாண் மயங்கினள்வெருவத்
திப்பியமுரைக்குந் தெய்வக்கிளவி
யிரவிவன்ம னொருபெருமகளே
துரகதத்தானைத் துச்சயன்றேவி
தயங்கிணர்க்கோதை தாரைசாவுற
மயங்கியல்யானைமுன் மன்னுயிர்நீத்தோய்
காராளர்சண்பையிற் கவுசிகன்மகனே
மாருதவேகனோ டிந்நகர்புகுந்து
தாரைதவ்வை தன்னொடுகூடிய
வீரையாகிய நினக்கிளையாள்வந்
தஞ்சலென்றுரைத்த வவ்வுரைகேட்டு
நெஞ்சுநடுக்குறூஉ நேரிழைநல்லாள்

காவலாளர் கண்டுயில்கொள்ளத்
தூமென்சேக்கைத் துயில்கண்விழிப்ப
வலம்புரிச்சங்கம் வறிதெழுந்தார்ப்பப்
புலம்புரிச்சங்கம் பொருளொடுமுழங்கப்
புகர்முகவாரண நெடுங்கூவிளிப்பப்
பொறிமயிர்வாரணங் குறுங்கூவிளிப்பப்
பணைநிலைப்புரவி பலவெழுந்தார்ப்ப
பணைநிலைப்புள்ளும் பலவெழுந்தார்ப்பப்
பூம்பொழிலார்கைப் புள்ளொலிசிறப்பப்
பூங்கொடியார்கைப் புள்ளொலிசிறப்பக்
கடவுட்பீடிகை பூப்பலிகடிகொளக்
கலம்பகர்பீடிகை பூப்பலிகடிகொளக்
குயிலுவர்கடைதொறும் பண்ணியம்பரந்தெழக்
கொடும்போர்க்கடைதொறும் பண்ணியம்பரந்தெழ
வூர்துயிலெடுப்ப வுரவுநீரழுவத்துக்
காரிருள்சீத்துக் கதிரவன்முளைத்தலு
மேவுறுமஞ்ஞையி னினைந்தடிவருந்த
மாநகர்வீதி மருங்கிற்போகிப்
போகியகங்குலிற் புகுந்ததையெல்லா
மாதவிதனக்கு வழுவின்றுரைத்தலு
நன்மணியிழந்த நாகம்போன்றவ
டன்மகள்வாராத் தனித்துயருழப்ப
வின்னுயிரிழந்த யாக்கையினிருந்த
னண்ணியதுரைத்த சுதமதிதானெனை.

துயிலெழுப்பியகாதை முற்றிற்று.

---

எட்டாவது

## மணிப்பல்லவத்துத்துயருற்ற காதை.

ஈங்கிவரின்னண மாகவிருங்கடல்
வாங்குதிரையுடுத்த மணிப்பல்லவத்திடைத்
தத்துநீரடைகரை சங்குழுதெடுப்பின்
முத்துவிளைகழனி முரிசெம்பவளமொடு
விரைமலருருட்டுந் திரையுலாப்பரப்பின்
ஞாழலோங்கிய தாழ்கண்ணசும்பி
னம்பலுங்குவளையுந் தாம்புணர்ந்துமயங்கி

வண்டுணமலர்ந்த குண்டுநீரிலஞ்சி
முடக்காற்புன்னையு மடற்பூந்தாழையும்
வெயில்வரவொழித்த பயிர்பூம்பந்த
ரறல்விளங்குநிலாமண னறுமலர்ப்பள்ளித்
துஞ்சுதுயிலெழூஉ மஞ்சிலோதி
காதற்சுற்ற மறந்துகடைகொள
வேறிடத்துப்பிறந்த வுயிரேபோன்று
பண்டறிகிளையொடு பதியங்காணாள்
கண்டறியாதன கண்ணிற்காணா
நீலமாகட னெட்டிடையன்றியுங்
காலைஞாயிறு கதிர்விரித்துமுளைப்ப
வுவவனமருங்கினி லோரிடங்கொல்லிது
சுதமதியொளித்தாய் துயரஞ்செய்தனை
நனவோகனவோ வென்பதையறியேன்
மனநடுக்குறூஉ மாற்றந்தாராய்
வல்லிருள்கழிந்தது மாதவிமயங்கு
மெல்வளைவாராய் விட்டகன்றனையோ
விஞ்சையிற்றோன்றிய விளங்கிழைமடவாள்
வஞ்சஞ்செய்தனள் கொல்லோவறியே
னொருதனியஞ்சுவன் றிருவேவாவெனத்
திரைதவழ்பறவையும் விரிசிறைப்பறவையு
மெழுந்துவீழ்சில்லையு மொடுங்குசிறைறமூயு
முழுவலுமன்னச் சேவலரசனைப்
பன்னிறப்புள்ளும் பரந்தொருங்கீண்டிப்
பாசறைமன்னர் பாடிபோல்வீசு
நிரப்பினெதிரெதிர் நிற்குந்துறையுஞ்
சிந்துறைநெடுமணற் குன்றமும்யாங்கணுந்
திரிவோள் பாங்கினங்காணாள்
குரத்தலைக்கூந்தல் குலைந்துபின்வீழ
வரத்தினள்கூஉ யழுதனளேங்கி
வீழ்துயரெய்திய விழுமக்கிளவியிற்
றாழ்துயருறுவோள் தந்தையையுள்ளி
யெம்மிற்படுத்து வெவ்வினையுருப்பக்
கோற்றொடிமாதரொடு வேற்றுநாடடைந்து
வைவாளுழந்த மணிப்பூணகலத்
தையவோவென் றழுவோண்முன்னர்
விரிந்திலங்கவிரொளி சிறந்துகதிர்பரப்பி

யுரைபெறுமும்முழ நிலமிசையோங்கித்
திசைதொறுமொன்பான் முழநிலமகன்று
விதிமாணுடியின் வட்டங்குயின்று
பதுமசதுர மீமிசைவிளங்கி
யறவோர்க்கமைந்த வாதனமென்றே
நறுமலரல்லது பிறமரஞ்சொரியாது
பறவையுமுதிர்சிறை பாங்குசென்றதிராது
தேவர்கோனிட்ட மாமணிப்பீடிகை
பிறப்புவிளங்கவிரொளி யறத்தகையாதனங்
கீணிலமருங்கி னாகநாடாளு
மிருவர்மன்னவ ரொருவழித்தோன்றி
யெமதீதென்றே யெடுக்கலாற்றார்
தம்பெரும்பற்றி னீங்கலுநீங்கார்
செங்கண்சிவந்து நெஞ்சுபுகையுயிர்த்துத்
தம்பெருஞ்சேனையொடு வெஞ்சினம்புரிஞான்
றிருஞ்செருவொழிமி னெமதீதென்றே
பெருந்தவமுனிவ னிருந்தறனுரைக்கும்
பொருவருசிறப்பினற் புரையோரேத்துந்
தருமபீடிகை தோன்றியதாங்கென.

மணிப்பல்லவத்துத்துயருற்றகாதை முற்றிற்று.

---

ஒன்பதாவது

## மணிப்பீடிகைகண்டுபிறப்புணர்ந்த காதை.

ஆங்கதுகண்ட வாயிழையறியாள்
காந்தளஞ்செங்கை தலைமேற்குவிந்தன
தலைமேற்குவிந்த கையாள்செங்கண்
முலைமேற்கலுழ்ந்தமுத் தத்திரளுகுத்தத
னிடமுறைமும்முறை வலமுறைவாராக்
கொடிமின்முகிலொடு நிலஞ்சேர்ந்தென்ன
விறுநுசுப்பலைய வெறுநிலஞ்சேர்ந்தாங்
கெழுவோள்பிறப்பு வழுவின்றுணராத்
தொழுதகைமாதவத் துணிபொருளுணர்ந்தோய்
காயங்கரையநீ யுரைத்ததையெல்லாம்
வாயேயாகுதன் மயக்கறவுணர்ந்தேன்
காந்தாரமென்னுங் கழிபெருநாட்டுப்

பூருவதேயம் பொறைகெடவாழு
மத்திபதியெனு மரசாள்வேந்தன்
மைத்துனனாகிய பிரமதருமன்
ஆங்கவன்றன்பா லணைந்தறனுரைப்போய்
தீங்கனிநாவ லோங்குமத்தீவிடை
யின்றேழ்நாளி னிருநிலமாக்கள்
நின்றுநடுக்கெய்த நீணிலவேந்தே
பூமிநடுக்குறூஉம் போழ்தத்தந்நகர்
நாகநன்னாட்டு நானூறியோசனை
வியன்பாதலத்து வீழ்ந்துகேடெய்து
மிதன்பாலொழிகென விருநிலவேந்தனு
மாபெரும்பேரூர் மக்கட்கெல்லா
மாவுமாவுங் கொண்டுகழிகென்றே
பறையிற்சாற்றி நிறையிருந்தானையோ
டிடவயமென்னு மிரும்பதிநீங்கி
வடவயின்வந்தி மாநகர்ச்செல்வோன்
காயங்கரையெனும் பேரியாற்றடைகரைச்
சேயுயர்பூம்பொழிற் பாடிசெய்திருந்தோ
னெங்கோனீயாங் குரைத்தவந்நாளிடைத்
தங்காதந்நகர் வீழ்ந்துகேடெய்தலு
மருளறுபுலவநின் மலரடியதனை
வணங்கியரசொடு மக்களெல்லா
மீண்டிச்சூழ்ந்து வணங்கத்தாழ்ந்து
பலரோத்தியருளறம் பூண்டபேரின்பத்
தல்குதுயர்கொடுக்க வருளியவஞ்ஞான்
றரவக்கடலொலி யரசர்தாமாளு
மிரவிவன்ம னொருபெருந்தேவி
யலத்தகச்சீறடி யமுதபதிவயிற்
றிலக்குமியென்னும் பெயர்பெறப்பிறந்தே
னத்திபதியெனு மரசன்பெருந்தேவி
சித்தபுரமாளுஞ் சீதரன்றிருமக
ணீலபதியெனு நேரிழைவயிற்றிற்
காலஞாயிற்றுக் கதிர்போற்றோன்றிய
விராகுலன்றனக்குப் புக்கேனவனொடு
பராவருமரபினன் பாதம்பணிதலு
மெட்டிருநாளிவ் விராகுலன்றன்னைத்
திட்டிவிடமுணுஞ் செல்லுயிர்போனாற்

தீயழலவனொடு சேயிழைமூழ்குவை
யேதுநிகழ்ச்சி யீங்கின்றாதலிற்
கவேரகன்னிப் பெயரொடுவிளங்கிய
தவாக்களிமூதூர் சென்றுபிறப்பெய்துதி
மணியிழைநினக்கோ ரருந்துயர்வருநாண்
மணிமேகலாதெய்வம் வந்துதோன்றி
யன்றப்பதியி னாரிருளெடுத்துத்
தென்றிசைமருங்கிலோர் தீவிடைவைத்தலும்
வேகவெந்திறனாக நன்னாட்டரசர்
சினமாசொழித்து மனமாசுதீர்த்தாங்
கறச்செவிதிறந்து மறச்செவியடைத்துப்
பிறவிப்பிணிமருத்துவ னிருந்தறனுரைக்குந்
திருந்தொளியாசனஞ் சென்றுகைதொழு
தன்றைப்பகலே யுன்பிறப்புணருதி
யின்றுநானுரைத்த வுரைதெளிவாயெனச்
சாதுயர்கேட்டுத் தளர்ந்தகுமனத்தோன்
காதலன்பிறப்புக் காட்டாயோவென
வீங்குனைக்கொணர்ந்த விரும்பெருந்தெய்வம்
பாங்கிற்றோன்றிப் பைந்தொடிக்கணவனை
யீங்கிவனென்னு மென்றெடுத்தோதின
ளாங்கத்தெய்வதம் வாராதோவென
வேங்கினளழூஉ மிளங்கொடிதானென.

மணிப்பீடிகைகண்டு பிறப்புணர்ந்தகாதை முற்றிற்று.

---

## பத்தாவது

## மந்திரங்கொடுத்த காதை.

அறவோனாசனத் தாயிழையறிந்த
பிறவியளாயினள் பெற்றியுமஃதென
விரைமலரேந்தி விசும்பூடிழிந்து
பொருவறுபூங்கொடி பூமியிற்பொலிந்தென
வந்துதோன்றிய மணிமேகலாதெய்வ
முந்தைப்பிறப்பெய்தி நின்றோள்கேட்ப
வுயிர்களெல்லா முணர்வுபாழாகிப்
பொருள்வழங்குசெவித் தொளைதூர்ந்தறிவழிந்

தறந்தலையுலகத் தறம்பாடுசிறப்பச்
சுடர்வழக்கற்றுத் தடுமாறுகாலையோ
ரிளவளஞாயிறு தோன்றியதென்ன
நீயோதோன்றினை நின்னடிதொழுதே
னீயேயாகிநிற் கமைந்தவிவ்வாதன
நாமிசைவைத்தென் றலைமிசைக்கொண்டேன்
பூமிசையேற்றினென் புலம்பறச்சென்று
வலங்கொண்டாதனம் வணங்குவோன்முன்னர்ப்
பொலங்கொடிநிலமிசைச் சேர்ந்தெனப்பொருந்தி
யுன்றிருவருளா லென்பிறப்புணர்ந்தே
னென்பெருங்கணவன் யாங்குளனென்றலு
மிலக்குமிகேளிவ் விராகுலன்றன்னொடு
புலத்தகையெய்தினை பூம்பொழிலகவயி
னிடங்கழிகாமமொட் டங்கானாயவன்
மடந்தைமெல்லியன் மலரடிவணங்குழிச்
சாதுசக்கரன்மீ விசும்புதிரிவோன்
றெருமரலொழித்தாங் கிரத்தினதீபத்துத்
தருமசக்கரமுருட் டியவருவோன்
வெங்கதிரமையத்து வியன்பொழிலகவயின்
வந்துதோன்றலு மயங்கினைகலங்கி
மெல்லியல்கண்டனை மெய்ந்நடுக்குற்றனை
நல்கூர்நுசுப்பினை நாணினையிறைஞ்ச
விராகுலன்வந்தீர் யாரெனவெகுளலும்
விராய்மலர்க்கூந்த லவன்வாய்புதையா
வானாடிழிந்தோன் மலரடிவணங்காது
நாநல்கூர்ந்தனை யென்றவன்றன்னொடு
பகையறுபார்த்திவன் பாதம்பணிந்தீங்
கமரகேணின் றமரலமாயினு
மந்தீந்தண்ணீ ரமுதொடுகொணர்கே
முண்டியான்குறிப்பின மென்றலுமெம்மனை
யுண்கேனீங்குக் கொணர்கெனவன்று
ளவனுண்டருளிய வவ்வறவமுத
னின்றுங்கொழியா நின்பிறப்படுத்திடு
முன்வவனமருங்கி னுன்பாற்றோன்றிய
வுதயகுமரனவ னின்னிராகுல
னங்கவனன்றியு மவன்பாலுள்ள
நீங்காத்தன்மை நினக்குமுண்டாகலிற்

கந்தசாலியின் கழிபெருவித்தோர்
வெந்துகுவெண்களா வீழ்வதுபோன்மென
வறத்தின்வித்தாங் காகியவுன்னையோர்
திறப்படற்கேதுவாச் சேயிழைவந்தே
னின்னங்கேளா யிலக்குமியுன்றன்
றவ்வையாகிய தாரையும்வீரையும்
ஆங்கவர்தம்மை யங்கநாட்டகவயிற்
கச்சயமாளுங் கழற்கால்வேந்தன்
றுச்சயனென்பா னொருவன்கொண்டன
னவனுடனாங்கவர் தனமலையாடிக்
கங்கைப்பேரியாற் றடைகரையிருந்துழீஇ
மறவணநீத்த மாசறுகேள்வி
யறவணனாங்கவர் பாற்சென்றோனை
யீங்குவந்தீர்யா ரென்றெழுந்தவரன்
பாங்குளிமாதவன் பாதம்பணிதலு
மாதிமுதல்வ னறவாழியாள்வோன்
மாதுயரெவ்வ மக்களைநீக்கி
விலங்குந்தம்முள் வெரூஉப்பகைநீக்கி
யுடன்றுயிர்வாழ்கென் றுள்ளங்கசிந்து
தோன்றுகாலத்து நின்றறமுரைத்த
குன்றமருங்கிற் குற்றங்கெடுக்கும்
பாதபங்கயங் கெடுத்தவினீங்கிது
பாதபங்கய மெனும்பெயர்த்தாயது
தொழுதுவலங்கொள்ள வந்தேநீங்கிப்
பழுதில்காட்சியீர் நீருந்தொழுமி
னென்றவனுரைத்த வறவுரைபிழையாது
சென்றுகைதொழுது சிறப்புச்செய்தலின்
மாதவியாகியுஞ் சுதமதியாகியுங்
கோதையஞ்சாய னின்னொடுகூடின
ரறிபிறப்புற்றனை யறம்பாடறிந்தனை
பிறவறமுரைப்போர் பெற்றியுங்கேட்குவை
பல்வேறுசமயப் படிற்றுரையெல்லா
மல்லியங்கோதை கேட்குறுநாளி
னிளையளவளையோ னென்றுனக்கியாவரும்
விளைபொருளுரையார் வேற்றுருவெய்தவு
மந்தரந்திரியவு மாக்குமிவ்வருந்திறன்
மந்திரங்கொள்கென வாய்மையினோதி

மதிநாண்முற்றிய மங்கலத்திருநாள்
பொதுவறிவிகழ்ந்து புலம்பறுமாதவன்
றிருவறமெய்துதல் சித்தமென்றுணர்நீ
மன்பெரும்பீடிகை வணங்கினையேத்தி
நின்பதிபுகுவா யென்றெழுந்தோங்கி
மறந்ததுமுண்டென மறித்தாங்கிழிந்து
சிறந்தகொள்கைச் சேயிழைகேளாய்
மக்கள்யாக்கை யுணவின்பிண்ட
மிப்பெருமந்திர மிரும்பசியறுக்குமென்
றாங்கதுகொடுத்தாங் கந்தரமெழுந்து
நீங்கியதாங்கு நெடுந்தெய்வந்தானென.

மணிமேகலைக்கு மந்திரங்கொடுத்தகாதை முற்றிற்று.

---

## பதினொன்றாவது
## பாத்திரம்பெற்ற காதை.

மணிமேகலாதெய்வ நீங்கியபின்னர்
மணிப்பல்லவத்திடை மணிமேகலைதான்
வெண்மணற்குன்றமும் விரிபூஞ்சோலையுந்
தண்புனற்பொய்கையுந் தாழ்ந்தனணோக்கிக்
காவதந்திரியக் கடவுட்கோலத்துத்
தீவதிலகை வந்துதோன்றிக்
கலங்கவிண்மகளிரின் வந்தீங்கெய்திய
விலங்குகொடியன்ன யார்நீயென்ன
வெப்பிறப்பகத்துள்ள யார்நீயென்றது
பொற்கொடியன்னாய் பொருந்திக்கேளாய்
போயபிறவியிற் பூமியங்கிழவ
னிராகுலமனையா ளிலக்குமியென்பே
ராயபிறவியி னாடலங்கணிகை
மாதவியீன்ற மணிமேகலையா
னென்பெயர்த்தெய்வத மீங்கெனைக்கொணரவிம்
மன்பெரும்பீடிகை யென்பிறப்புணர்ந்தே
னீங்கென்வரலங் கெய்தியபயனிது
பூங்கொடியன்னாய் நீயாரென்றலு
மாயிழைதன்பிறப் பறிந்தமையறிந்த
தீவதிலகை செவ்வனமுரைக்கு

ஈங்கிதனயலகத் திரத்தினதீவகத்
தோங்குயர்சிமயத் துச்சிமீமிசை
யறவியங்கிழவோ னடியிணையாகிய
பிறவியென்னும் பெருங்கடல்விடூஉ
மறவிநாவா யாங்குளதாதலிற்
றொழுதுவலங்கொண்டு வந்தேனிந்தப்
பழுதில்காட்சி நன்மணிப்பீடிகை
தேவர்கோனேவலிற் காவல்பூண்ட
தீவதிலகை யென்பெயரிதுகேள்
தருமதலைவன் றலைமையினுரைத்த
பெருமைசானல்லறன் பிறழாநோன்பினர்
கண்டுகைதொழுவோர் கண்டதற்பின்னர்
பண்டைப்பிறவி யருவோர்பைந்தொடி
யரியருலகத் தாங்கவற்கறமொழி
யுரியதுலகத் தொருதலையாக
வாங்கனமாகிய வாயிழையிதுகே
ளீங்கிப்பெரும்பெயர்ப் பீடிகைமுன்னது
மாமலர்க்குவளையு நெய்தலுமயங்கிக்
கோமுகியென்னுமிக் கொழுநீரிலஞ்சி
யிருதிளவேனிலி லெறிகதிரிடபத்
தொருபதின்மேலு மொருமூன்றுசென்ற
மீனத்திடைநிலை மீனத்தகவையிற்
போதித்தலைவரொடு பொருந்தித்தோன்று
மாபுத்திரன்கை யமுதசுரபியெனு
மாபெரும்பாத்திர மடக்கொடிகேளா
யந்நாளிந்நா ளப்பொழுதிப்பொழுது
நின்னுங்குவருவது போலுநேரிழை
யாங்கதிற்பெய்த வாருயிர்மருந்து
வாங்குநர்கையகம் வருத்துதலல்லது
தான்றொலைவில்லாத் தகைமையதாகு
நறுமலர்க்கோதை நின்னூராங்க
ணறவணன்றன்பாற் கேட்குவையதன்றிற
னென்றவளுரைத்தலு மிளங்கொடிவிரும்பி
மன்பெரும்பீடிகை தொழுதனள்வணங்கித்
தீவதிலகை தன்னொடுங்கூடிக்
கோமுகிவலங் கொள்கையினிற்றலு
மெழுந்துவலம்புரிந்த விளங்கொடிசெங்கையிற்

றொழுதகைமரபிற் பாத்திரம்புகுதலும்
பாத்திரம்பெற்ற பைந்தொடிமடவாள்
மாத்திரையின்றி மனமகிழ்வெய்தி
மாரனைவெல்லும் வீரநின்னடி
தீநெறிக்கடும்பகை கடப்போய்நின்னடி
பிறர்க்கறமுயறலும் பெரியோய்நின்னடி
துறக்கம்வேண்டாத் தொல்லோய்நின்னடி
யெண்பிறப்பொழிய விருந்தோய்நின்னடி
கண்பிறர்க்களிக்குங் கண்ணோய்நின்னடி
தீமொழிக்கடைத்த செவியோய்நின்னடி
வாய்மொழிசிறந்த நாவோய்நின்னடி
நரகர்துயர்கெட நடப்போய்நின்னடி
யுரகர்துயர மொழிப்போய்நின்னடி
வணங்குதலல்லது வாழ்த்துதலென்று
வடங்காதென்ற வாயிழைமுன்னர்ப்
போதிநீழற் பொருந்தித்தோன்றும்
நாதன்பாத நவைகெடவேத்தத்
தீவதிலகை சேயிழைக்குரைக்குங்
குடிப்பிறப்பழிக்கும் விழுப்பங்கொல்லும்
பிடித்தகலவிப் பெரும்புணைவிடூஉ
நாணங்களையு மாணெழில்சிதைக்கு
பூண்முலைமாதரொடு புறங்கடைநிறுத்தும்
பசிப்பிணியென்னும் பாவியதுதீர்த்தோ
ரிசைச்சொல்லளவைக் கென்னாநிமிராது
புன்மரம்புகையப் புகையழற்பொங்கி
மன்னுயிர்மடிய மழைவளங்கரப்ப
வரசியனீங்கிய வருமறையந்தண
னிருநிலமருங்கின் யாங்கணுந்திரிவோ
னரும்பசிகளைய வாற்றுவதுகாணான்
திருந்தாநாயூன் றின்னுதலுறுவோ
னிந்திரசிறப்புச் செய்வோன்முன்னர்
வந்துதோன்றிய வானவர்பெருந்தகை
மழைவளந்தருதலின் மன்னுயிரோம்பிப்
பிழையாவிளையுளும் பெருகியதன்றோ
வாற்றுநர்க்களிப்போ ரறவிலைபகர்வோ
ராற்றுமாக்க ளரும்பசிகளைவோர்
மேற்றேயுலகின் மெய்ந்நெறிவழக்க

மண்டிணிஞாலத்து வாழ்வோர்க்கெல்லா
முண்டிகொடுத்தோ ருயிர்கொடுத்தோரே
யுயிர்க்கொடைபூண்ட வுரவோயாகிக்
கயக்கறுநல்லறங் கண்டனையென்றலும்
விட்டபிறப்பின்யான் விரும்பியகாதலன்
றிட்டிவிடமுணச் செல்லுயிர்போகுழி
யுயிரோடுவேவே னுணர்வொழிகாலத்து
வெயில்விளங்கமையத்து விளங்கித்தோன்றிய
சாதுசங்கன் றன்னையானூட்டிய
காலம்போல்வதோர் கனமையக்குற்றே
றாங்கதன்பயனே யாருயிர்மருந்தா
யீங்கிப்பாத்திர மென்கைப்புகுந்தது
நாவலொடுபெயரிய மாபெருந்தீவத்து
வித்தியநல்லறம் விளைந்ததன்பயன்
றுய்ப்போர்தம்மனைத் துணிச்சிதருடுத்து
வயிறுகாய்பெரும்பசி யலைத்தற்கிரங்கி
வெயிலெனமுனியாது புயலெனப்படியாது
புறங்கடைநின்று புன்கண்கூர்ந்துமுன்
னறங்கடைநில்லா தயர்வோர்பலரா
லீன்றகுழவி முகங்கண்டிரங்கித்
தீம்பால்சுரப்போ டனைமுலைபோன்றே
நெஞ்சுவழிப்படூஉம் விஞ்சைப்பாத்திர
மகன்சுரப்பெய்த வாருயிர்மருந்தவர்
முகங்கண்டுசுரத்தல் வேட்கையேனென
மறந்தோன்றன்றிற னீயெடுத்துரைத்தனை
யறங்கரியாக வருள்சுரந்தூட்டுஞ்
சிறந்தோர்க்கல்லது சிர்வளஞ்சுரவா
தாங்கணாயிழை யதன்பயனறிந்தனை
யீங்குநின்றெழுவா யென்றவளுரைப்பத்
தீவதிலகை தன்னடிவணங்கி
மாபெரும்பாத்திர மங்கையினேந்திக்
கோமகன்பீடிகை தொழுதுவலங்கொண்டு
வானூடெழுந்து மணிமேகலைதான்
வழுவறுதெய்வம் வாய்மையினுரைத்த
வெழுநாள்வந்த தென்மகள்வாராள்
வழுவாயுண்டென மயங்குவோண்முன்னர்
வந்துதோன்றி யவர்மயக்கங்களைந்

தாங்கிலவர்க்கோ ரற்புதங்கூறு
மிரவிவன்ம னொருபெருமகளே
துரகதத்தானைத் துச்சயன்றேவி
யமுதபதியிற் றரிதிற்றோன்றியென்
றவ்வையராகிய தாரையும்வீரையு
மவ்வையராயினி திருமடிதொழுதென
வாழ்வதாக மானிடயாக்கையிற்
றீவினையறுக்குஞ் செய்வதவநமக்கீங்
கறவணவடிக டம்பாற்பெறுமின்
சேங்கொடிநல்லீ ரும்பிறப்பீங்கி
தாபுத்திரன்கை யமுதசுரபியெனு
மாபெரும்பாத்திர நீருந்தொழுமெனத்
தொழுதனரேத்திய தூமொழியாரொடும்
பழுதறுமாதவன் பாதம்படாதே
யெழுமெனவெழுந்தன ளிளங்கொடிதானென.

பாத்திரம்பெற்றகாதை - முற்றிற்று.

---

பன்னிரண்டாவது

## அறவணர்த்தொழுதகாதை.

ஆங்கவர்தம்முட னறவணவடிகள்
யாங்குளரென்றே யிளங்கொடிவினைய
நரைமுதிர்யாக்கை நடுங்குநாவி
னுரைமூதாள னுறைவிடங்குறுகி
மைம்மலர்க்குழலியர் மாதவன்றிருந்தடி
மும்முறைவணங்கி முறையுளியேத்திப்
புதுமலர்ச்சோலை பொருந்தியவண்ணமு
முதயகுமரனுங் குற்றுரையேற்று
மணிமேகலாதெய்வ மணிப்பல்லவத்திடை
யணியிழைதன்னை யகற்றியவண்ணமு
மாங்கத்தீவகத் தறவோனாசா
னீங்கியபிறப்பு நேரிழைக்களித்தது
மளித்தபிறப்பி னுயிழைகணவனைக்
களிக்கயனெடுங்கட் கடவுளிற்பெற்றதுந்
தவ்வையராகிய தாரையும்வீரையும்
வெவ்வினையுருப்ப விளிந்துகேடெய்தி

மாதவியாகியுஞ் சுதமதியாகியுங்
கோதையஞ்சாய னின்றொடுங்கூடின
ராங்கவர்தந்திற னறவணன்றன்பாற்
பூங்கொடிநல்லாய் கேளென்றுரைத்தலும்
உரைத்தபூங்கொடி யொருமூன்றுமந்திரந்
தனக்குரைசெய்துதா னேகியவண்ணமுந்
தெய்வம்போயபின் றீவதிலகையு
மையெனத்தோன்றி யருளொடுமடைந்தது
மடைந்ததெய்வ மாபுத்திரன்கை
வணங்குறுபாத்திரம் வாய்மையினளித்தது
மாபுத்திரன்றிற னறவணன்றன்பாற்
கேளென்றுரைத்துக் கிளரொளிமாதெய்வம்
போகென்மடந்தை போந்தவண்ணமு
மாதவன்றன்னை வணங்கினளுரைத்தலு
மணிமேகலையுரை மாதவன்கேட்டுத்
தணியாவின்பந் தலைத்தலைமேவரப்
பொற்றொடிமாதர் நற்றிறன்சிறப்ப
வுற்றுணர்வாய்நீ யிவர்திறனுரைக்கென்ன
நின்னெடுந்தெய்வ நினக்கெடுத்துரைத்த
வந்நாளன்றி யும்மனைக்கழூஉ
மாதிமுதல்வ னடியிணையாகிய
பாதபங்கயமலர் பரவச்செல்கெனக்
கச்சையமாளுங் கழற்கால்வேந்தன்
துச்சயன்றன்னையோர் சூழ்பொழிற்கண்டேன்
மாபெருந்தானை மன்னநின்னெடுந்
தேவியர்தமக்குந் தீங்கின்றேயென
வழித்தகவுள்ளமொ டாற்றினனாகி
யொளியிழைமாதர்க் குற்றதையுரைப்போன்
புதுக்கோள்யானையைப் போற்றுதுசென்று
மதுக்களிமயக்கத்து வீரைமாய்ந்ததூஉ
மாங்கதுகேட்டோ ளரமியமேறித்
தாங்காதுவீழ்ந்து தாரைசாவுற்றதூஉங்
கழிபெருந்துன்பங் காவலனுரைப்பப்
பழவினைப்பயனீ பரியலென்றெழுந்தே
நாடகத்தி யரணியேபோல
வேறோரணியொடு வந்தீரோவென
மணிமேகலைமுன் மடக்கொடியார்திறன்

71690

துணிபொருண்மாதவன் சொல்லியுமமையான்
பிறவியுமறவியும் பெற்றியினுணர்ந்த
நறுமலர்க்கோதாய் நல்கினைகேளாய்
தருமத்தலைவன் றலைமையினுரைத்த
பெருமைசானல்லறம் பெருகாதாகி
யிறுதியினற்கதி செல்லும்பெருவழி
யறுகையுநெருஞ்சியும் படர்ந்துகண்ணடைந்தாங்குச்
செயிர்வழங்குதீக்கதி திறந்துகல்லென்
றுயிர்வழங்குபெருநெறி யொருதிறப்பட்டது
தண்பனிவிழுங்கிய செங்கதிர்மண்டில
முண்டெனவுணர்த்த லல்லதியாவதுங்
கண்டினிதுவிளங்காக் காட்சிபோன்றது
சலாகைநுழைந்த மணித்தொளையகவையி
னுலாநீர்ப்பெருங்கட லோடாதாயினு
மாங்கத்தொளைவழி யுகுநீர்போல
வீங்குநல்லற னெய்தலுமுண்டெனச்
சொல்லலுமுண்டியான் சொல்லுதறேற்றார்
மல்லன்மாஞாலத்து மக்களேயாதலிற்
சக்கரவாளத்துத் தேவரெல்லாந்
தொக்கொருங்கீண்டித் துடிதலோகத்து
மிக்கோன்பாதம் விழுந்தனரிரப்ப
விருள்பரந்துகிடந்த மலர்தலையுலகத்து
விரிகதிர்ச்செல்வன் றோன்றினனென்ன
வீரெண்ணூற்றோ டீரெட்டாண்டினிற்
பேரறிவாளன்றோன்று மதற்பிற்பாடு
பெருகுளமருங்கிற் சுருங்கைச்சிறுவழி
யிரும்பெருநீத்தம் புகுவதுபோல
வளவாச்சிறுசெவி யளப்பருநல்லற
னுளமலியுவகையொ டுயிர்கொளப்புகூஉங்
கதிரோன்றோன்றுங் காலையாங்கவ
னவிரொளிகாட்டு மதியேபோன்று
மைத்திருள்கூர்ந்த மனமாசுகழூஉம்
புத்தஞாயிறு தோன்றுங்காலைத்
திங்களுஞாயிறுந் தீங்குறுவிளங்கத்
தங்காநாண்மீன் றகைமையினடக்கும்
வானம்பொய்யாது மாநிலம்வளம்படு
மூனுடையுயிர்க ளுறுதுயர்காணு

வளிவலங்கொட்கு மாதிரம்வளம்படு
நளியிருமுந்நீர் நலம்பலதரூஉங்
கறவைகன்றூர்த்திக் கலனிறைபொழியும்
பறவைப்பயன்றுய்த் துறைபதிநீங்கா
விலங்குமக்களும் பெரும்பகைநீங்குங்
கலங்களுர்நாகரும் பேயுங்கைவிடுங்
கூனுங்குறளு மூமுஞ்செவிடு
மாவுமருளு மன்னுயிர்பெறூஉ
வந்நாட்பிறந்த வருளறங்கேட்டோ
ரிந்நாட்பிறவி யிகழ்வோராதலிற்
போதிமூலம் பொருந்தியசிறப்பி
ஞதன்பாத நவைகெடவேத்துதல்
பிறவிதொறுமதி மறவேன்யானு
மடக்கொடியாதலின் மாதர்நின்னல்வரு
மிவ்வூர்நிகழ்ச்சி யாவும்பலவுள
வாங்கதுநிகழ்ந்த பின்னரல்லது
பூங்கொடிமாதர் பொருளுரைபொருந்தா
வாதிமுதல்வ னருந்துயர்கெடுக்கும்
பாதபங்கயமலர் பரசினராதலி
னீங்கிவரிருவரு மிளங்கொடிநின்னோ
டோங்குயர்போதி யுரவோன்றிருந்தடி
தொழுதுவலங்கொண்டு தொடர்வினைநீங்கிப்
பழுதினன்னெறி படர்குவைகாணு
யாருயிர்மருந்தா மமுதசுரபியெனு
மாபெரும்பாத்திர மடக்கொடிபெற்றனை
மக்கடேவரென விருசாரார்க்கு
மொத்தமுடிவி னோறனுரைக்கேன்
பசிப்பிணிதீர்த்த லென்றேயாவருந்
தவப்பெருநல்லறன் சாற்றினராதலின்
மடுத்ததீக்கதி மன்னுயிர்பசிகெட
வெடுத்தபாத்திர மிளங்கொடிதானென

அறவணர்த்தொழுதகாதை - முற்றிற்று

## பதின்மூன்றாவது

# ஆபுத்திரன்றிறமறிவித்தகாதை.

மாபெரும்பாத்திர மடக்கொடிக்கருளிய
வாபுத்திரன்றிற மணியிழைகேளாய்
வாரணவாசியோர் மறைமேம்படுநுண்
ணாரணவாத்திக்ன் பஞ்சிகனென்போன்
பார்ப்பினிசாலி காப்புக்கடைகழிந்து
கொண்டோர்ப்பிழைத்த கண்டமஞ்சித்
தென்றிசைக்குமரி யாடியவருவோள்
சூன்முதிருய்க்கத் துஞ்சிருள்யாமத்
தீன்றகுழவிக் கிரங்காளாகித்
தோன்றாத்தொடைவயி னிட்டனணீங்கத்
தாயிறாவாக்குழ வித்துயர்கேட்டோர்.
ஆவந்தணைந்தாங் கதன்றுயர்கெடவே
நாவானக்கி நன்பாலூட்டிப்
போகாதெழுநாட் புறங்காத்தோம்ப
வயனங்கோட்டிலோர் மறையோம்பாள
னியவிடைவருவோ னிளம்பூதியென்போன்
குழவியேங்கிய கூக்குரல்கேட்டுக்
கழுவியதுன்பமொடு கண்ணீருகுத்தாங்
காமகனல்ல னென்மகனென்றே
காதறன்னொடு கைதொழுதெடுத்து
நம்பிபிறந்தான் பொலிகநங்கிளையெனத்
தம்பதிப்பெயர்ந்து தமரொடுங்கூடி
மார்பிடைமுந்நூல் வளையாமுன்னர்
நாவிடைநன்னூ னன்கனநவிற்றி
யோத்திடையந்தணர்க் கொப்புமையெல்லா
நாத்தொலைவின்றி நன்கனமறிந்தபி
னப்பதிதன்னுளோ ரந்தணன்மனைவயிற்
புக்கோனுங்குப் புலைசூழ்வேள்வியிற்
குரூஉத்தொடைமாலை கோட்டிடைச்சுற்றி
வெரூஉப்பகையஞ்சி வெய்துயிர்த்துப்புலம்பிக்
கொலைநவில்வேட்டுவர் கொடுமரமஞ்சி
வலையிடைப்பட்ட மானேபோன்றாங்
கஞ்சிநின்றழைக்கு மாதுயர்கண்டு

நெஞ்சுநடுக்குற்று நெடுங்கணீருகுத்துக்
களவினையாகிக் கடுந்துயர்பாழ்பட
நள்ளிருட்கொண்டு நடக்குவனென்னு
முள்ளங்கரந்தாங் கொருபுடையோங்கி
யல்லிடையாகொண் டப்பதியகன்றோன்
கல்லதரத்தங் கடவாநின்றுழி
யடர்க்குறுமாக்களோ டந்தணரொல்லாங்
கடத்திடைவரவொடு கையகப்படுத்தி
*யாகொண்டிறந்த வாரிடைகழிய
நீசமகனல னிகழ்ந்ததுரையாய்
புலைச்சிமகனே போகப்படுதியென்
றலைக்கோலதனு லறைந்தனர்கேட்ப
வாட்டிநின்றலைக்கு மந்தணருவாத்தியைக்
கோட்டினிற்குத்திக் குடர்புயத்தறுத்துக்
காட்டிடைநல்லாக் கழிந்துகிளர்ந்தோட
வாபுத்திரன்றா னங்கவர்க்குரைப்போ
னேவல்செய்யன்மின் னொடியதுகேண்மின்
விடுநிலமருங்கிற் படுபுல்லார்ந்து
நெடுநிலமருங்கின் மக்கட்கெல்லாம்
பிறந்தநாடொட்டுஞ் சிறந்ததன்றீம்பா
லறந்தருநெஞ்சமோ டருள்சுரந்தூட்டு
மிதனொடுவந்த செற்றமென்னெனின்
முதுமறைமாக்கள் முன்னியதுரையோ
பொன்னணிநேமி வலங்கொள்சக்கரக்கை
மன்னுயிர்முதல்வன் மகனெமக்களித்த
வருமறைநன்னூ லறியாதிகழ்ந்தனை
தெருமராலுள்ளத்துச் சிறியையீயவ்
வரமகனுதற் கொத்ததையறியா
நீமகனல்லாய் கேளெனவிகழ்தலு
மான்மகனசலன் மான்மகன்சிருங்கிப்
புலிமகன்விருஞ்சிப் புரையோர்ப்போற்று
நரிமகனல்லனோ கேசகம்பளனீங்
கிவர்நுங்குலத்து னிருடிகணங்களென்
றொருங்குயர்பெருஞ்சிறப் புரைத்தலுமுண்டா
லாவோவேந்த வழிகுலனுண்டோ
நான்மறைமாக்க ணன்னூலகத்தென

* "அரிகொண்டிருந்த" என்றும்பாடம்.

வாங்கவர்தம்முளோ ரந்தணனுரைக்கு
மீங்கிவன்றன்பிறப் பியானறிகுவனென
நடலைவருத்தமொடு நல்கூர்மேனியன்
வடமொழியாட்டி மறைமுறையெய்திக்
குமரிபாதங் கொள்கையின்வணங்கித்
தமரிற்றீர்ந்த சாலியென்பா
ளணையாதுநின்னூ ரீங்கென்வரவென
மாமறையாட்டி வருதிறனுரைக்கும்
வாரணசியோர் மாமறைமுதல்வ
னாரணவுவாத்தி யரும்பெறன்மனையாள்
பார்ப்பார்க்கொவ்வாப் பண்பினொழுகிக்
காப்புக்கடைகழிந்து கணவனையிகழ்ந்தே
னெற்பயமுடைமையி னிரியன்மாக்களொடு
தெற்கட்குமரி யாடியவருவேன்
பொற்றேர்ச்செழியன் கொற்கையம்பேரூர்
காவதங்கடந்து கோவலரிருக்கை
யீன்றகுழவிக் கிரங்கேனாகித்
தோன்றாத்துடைவையி னிட்டனன்பெயர்ந்தென்
செல்கதியுண்டோ தீவினையேற்கென்
றல்லலுற்றழு தவண்மகனீங்கிவன்
சொல்லுதறேற்றேன் சொற்பயமின்மையிற்
புல்லலோம்பன்மின் புலைமகனிவனென
வாபுத்திரன்பின் பமர்நகைசெய்து
மாமறைமாக்கள் வருங்குலங்கேண்மோ
முதுமறைமுதல்வன் முன்னர்த்தோன்றிய
கடவுட்கணிகை காதலஞ்சிறுவ
ரருமறைமுதல்வ ரந்தணரிருவரும்
புரிநூன்மார்பீர் பொய்யுரையாமோ
சாலிக்குண்டோ தவறெனவுரைத்து
நான்மறைமாக்களை நகுவனநிற்ப
வோதலந்தணர்க் கொவ்வாயென்றே
தாதைபூதியுந் தன்மனைகடிதா
வாங்கவர்கள்வனென் றந்தணருறைதரும்
கிராமமெங்கணுங் கடிஞையிற்கல்லிட
மிக்கசெல்வத்து விளங்கியோர்வாழுந்
தக்கணமதுரை தான்சென்றெய்திச்
சிந்தாவிளக்கின் செழுங்கலைநியமத்

தந்தின்முன்றி னம்பலப்பீடிகை
தங்கினன்வதிந்த தக்கணம்பேரு
றையக்கடிஞை கையினேந்தி
மையறுசிறப்பின் மனைதொறுமறுகிக்
காணார்கேளார் கான்முடப்பட்டோர்
பேணினரில்லோர் பிணிநடுக்குற்றோர்
யாவரும்வருகென் றிசைத்துடனூட்ட
வுண்டொழிமிச்சி லுண்டொடுதலையெடுத்துக்
கண்படைகொள்ளுங் காவலன்றானென

ஆபுத்திரன்றிறமறிவித்தகாதை - முற்றிற்று.

---

## பதினான்காவது
## பாத்திரமரபுகூறியகாதை.

ஆங்கவர்க்கொருநா ளம்பலப்பீடிகை
பூங்கொடிநல்லாய் புகுந்ததுகேளாய்
மாரிநாடுநாள் வல்லிருண்மயக்கத்
தாரிடையுழந்தோரம்பலமரீஇத்
துயில்வோன்றன்னைத் தொழுதனரேத்தி
வயிறுகாய்பெரும்பசி மலையுமென்றலு
மேற்றூணல்லது வேற்றூணில்லா
னாற்றுவதுகாணா னாரஞரெய்தக்
கேளிதுமாதோ கெடுகநின்றீத்துயர்
யாவருமேத்து மிருங்கலைநியமத்துத்
தேவிசிந்தா விளக்குத்தோன்றி
யேடாபரிய லெழுந்திதுகேளாய்
நாடுவறங்கூறினுமிவ் வோடுவறங்கூரா
வாங்குநர்கையகம் வருந்துவதல்லது
தான்றொலைவில்லாத் தகைமையஃதன்றெனத்
தன்கைப்பாத்திர மவன்கைக்கொடுத்தலுஞ்
சிந்தாதேவி செழுங்கலைநியமத்து
நந்தாவிளக்கே நாமிசைப்பாவாய்
வானோர்தலைவி மண்ணோர்முதல்வி
யேனோருற்ற விடர்களைவாயெனத்
தான்றொழுதேத்தித் தலைவியைவணங்கி

யாங்கவர்பசிதீர்த் தன்றுதொட்டு
வாங்குகைவருந்தலின் மன்னுயிரேம்பலின்
மக்களுமாவு மருஞ்சிறைப்பறவையுந்
தொக்குடனீண்டிச் சூழ்ந்தனவிடா
* பழுமரத்தீண்டிய பறவையினெழூஉ
மிழுமென்சும்மை விடையின்றொலிப்ப
வீண்டுநீர்ஞாலத் திவன்செயலிந்திரன்
பாண்டுகம்பவளந் துளக்கியதாதலிற்
றளர்ந்தநடையிற் றண்டுகோலூன்றி
வளைந்தயாக்கை மறையோனாகி
மாயிருஞாலத்து மன்னுயிரோம்பு
மாருயிர்முதல்வன் றன்முற்றோன்றி
யிந்திரன்வந்தே னியாதுநின்கருத்
துன்பெருந்தானத் துறுபயன்கொள்கென
வெள்ளைகள்போல விலாவிறநக்கீங்
கெள்ளினன்போன்மென் றெடுத்துரைசெய்வோ
னீண்டுச்செய்வினையா ண்டுநுகர்ந்திருத்தல்
காண்டகுசிறப்பினுங் கடவுளரல்ல
தறஞ்செய்மாக்கள் புறங்காத்தோம்புநர்
நற்றவஞ்செய்வோர் பற்றறமுயல்வோர்
யாவருமில்லாத் தேவர்நன்னாட்டுக்
கிறையவனாகிய பெருவிறல்வேந்தே
வருந்திவந்தோ ரரும்பசிகளைந்தவர்
திருந்துமுகங்காட்டுமென் றெய்வக்கடிஞை
யுண்டிகொல்லோ வுடுப்பனகொல்லோ
பெண்டிர்கொல்லோ பேணுநர்கொல்லோ
யாவையீங்களிப்பது தேவர்கோனென்றலும்
புரப்போன்பாத்திரம் பொழிந்தூண்சுரப்ப
விரப்போர்க்காணா தேமாந்திருப்ப
நிரம்பின்றெய்தி நீணிலனெய்தலும்
பரப்புநீராம் பல்வளஞ்சிறக்கென
வாங்கவன்பொருட்டா லாயிரங்கண்ணோ
னோங்குயர்பெருஞ்சிறப் புலகோர்க்களித்தலும்
பன்னீராண்டு பாண்டிநன்னாடு
மன்னுயிர்மடிய மழைவறங்கூரத்
துவசித்தொழிலு தவமாநிலங்கெழு

---

* "பழுமரத்தீண்டிய" என்றும்பாடம்.

மியவாருயிரோம் புநருமம்பலப்
பீடிகையூணொலி யாவமொடுங்கி
விடருந்தூர்த்தரு விட்டேற்றுளரு
நடவைமாக்களு நகையொடுவைகிப்
பசியுயிரறியாப் பான்மையதாக
வட்டுஞ்சூதும் வம்பக்கோட்டியு
முட்டாவாழ்க்கை முறைமையதாக
வாபுத்திரன்றா னம்பலநீங்கி
யூரூர்தோறு முண்போர்வினவ
யாரிவனென்றே யாவருமிகழ்ந்தாங்
கருந்தமாதந்த வாருயிர்முதல்வனை
யிருந்தாய்நீயோ வென்பாரின்மையிற்
றிருவின்செல்வம் பெருகடல்கொள்ள
வொருதனிவரூஉம் பெருமகன்போலத்
தானேதமியே வருவோன்றன்முன்
மாநீர்வங்கம் வந்தோர்வணங்கிச்
சாவகநன்னாட்டுத் தண்பெயன்மறுத்தலி
னூனுயிர்மடிந்த துரவோயென்றலு
மமரர்கோனாணையி னருந்துவோர்ப்பெறாது
குமரிமூத்தவென் பாத்திரமேந்தி
யங்கநாட்டுப் புகுவதுபொருளென
வங்கமாக்களொடு மகிழ்வுடனேறிக்
கால்விசைநடுக்கிக் கடல்கலக்குறுதலின்
மாலிகைமணிப்பல் லவத்திடைவீழ்ந்து
தாங்கியதொருநாட் டானுங்கழிந்தன
னிழிந்தோனேறின னென்றிதையெடுத்து
வழங்குநீர்வங்கம் வல்லிருட்போதலும்
வங்கம்போயபின் வருந்துயரெய்தி
யங்குவாழ்கிற்போர் யாவருமின்மையின்
மன்னுயிரோம்புமிம் மாபெரும்பாத்திர
மென்னுயிரோம்புதல் யானோபொறேனெனத்
தவந்திரமருங்கிற் றனித்துயருழந்தோன்
சுமந்தேன்பாத்திர மென்றனன்றொழுது
கோமுகியென்னுமிக் கொழுநீரிலஞ்சியி
னோர்யாண்டொருநாட் டோன்றனவிடுவோ
னருளறம்பூண்டாங் காருயிரோம்புந
ருளரொனிலவர்கைச் செல்வாயென்றாங்

குண்ணாநோன்போ டுயிர்பதிபெயர்ப்புழி
யந்நாளாங்கவன் றன்பாற்சென்றே
னென்னுற்றனையோ வென்றியான்கேட்பத்
தன்னுறுதுன்பந் தானெடுத்துரைத்தனன்
குணதிசைத்தோன்றிக் காரிருள்சீத்துக்
குடதிசைச்சென்ற ஞாயிறுபோல
மணிப்பல்லவத்திடை மன்னுடம்பிட்டுத்
தணியாமன்னுயிர் தாங்குங்கருத்தொடு
சாவகமாளுந் தலைத்தார்வேந்த
னாவயிற்றுதித்தன னாங்கவன்றானென

பாத்திரமரபுகூறியகாதை - முற்றிற்று.

---

## பதினைந்தாவது
## பாத்திரங்கொண்டுபிச்சைபுக்ககாதை.

இன்னுங்கேளா யிளங்கொடிமாதே
யந்நாளவனை யோம்பியநல்லாத்
தண்ணென்சாவகத் தவளமால்வரை
மண்முகனென்னு மாமுனியிடவயிற்
பொன்னின்கோட்டது பொற்குளம்புடையது
தன்னலம்பிறர்தொழத் தான்சென்றெய்தி
யீனுமுன்ன ரின்னுயிர்க்கெல்லா
நான்முலைசுரந்து நன்பாலூட்டலு
மூன்றுகாலமுந் தோன்றநன்குணர்ந்த
வான்றமுனிவ னறன்வயிற்றகத்து
மழைவளஞ்சுரப்பவு மன்னுயிரோம்பவு
முயிர்க்காவலன்வந் தொருவன்றோன்றுங்
குடர்த்தொடர்மாலை பூண்பானல்ல
னடற்பொன்முட்டை யாவயிற்றாகெனப்
பிணிநோயின்றியும் பிறந்தறஞ்செய்ய
மணிப்பல்லவத்திடை மன்னுயிர்நீத்தோன்
றற்காத்*தளித்த கையாவதனைப்
பொற்காவுள்ளத் தொழியானுதவி
னாங்கவரவ்வயிற் றமரர்கணுவப்பத்

---

* "அளித்ததனைக" எனவும்பாடம்.

திங்களிராவலோங்கு மித்தீவினுக்
கொருதாளுகி யுலகுதொழத்தோன்றினன்
பெரியோன்பிறந்த பெற்றியைக்கேணீ
யிருதிளவேனி லெறிகதிரிடபத்
தொருபதின்மேலு மொருமூன்றுசென்றபின்
மீனத்திடைநிலை மீனத்தகவையிற்
போதித்தலைவனே பொருந்தியபோழ்தத்து
மண்ணகமெல்லா மாரியின்றியும்
புண்ணியநன்னீர் போதொடுசொரிந்தது
போதிநாதன் பூமியிற்றோன்றுங்
காலமன்றியுங் கண்டனசிறப்பெனச்
சக்கரவாளக் கோட்டம்வாழு
மிக்கமாதவர் விரும்பினர்வியந்து
கந்துடனெடுநிலைக் கடவுளெழுதிய
* வந்திற்பாவை யருளுமாயிடி
னறிவாமென்றே செறியிருட்சேறலு
மணிப்பல்லவத்திடை மன்னுயிர்நீத்தோன்
றணியாதுயிருயச் சாவகத்துதித்தன
னுங்கவன்றன்றிற மறவணனறியுமென்
றீங்கென்னுளை வருத்தியதிதுகேள்
மண்ணாள்வேந்தன் மண்முகனென்னும்
புண்ணியமுதல்வன் றிருந்தடிபொருந்தி
மக்களையில்லென மாதவனருளாற்
பெற்றேன்புதல்வனை யென்றவன்வளர்ப்ப
வரைசால்செல்வம் வளமையினுண்மையி
னரைத்தார்வேந்த னாயினனவன்றான்
றுறக்கவேந்தன் றுய்ப்பிலன்கொல்லோ
வறக்கோல்வேந்த னருளிலன்கொல்லோ
சுரந்துகாவேரி புரந்தநீர்காக்கவு
நலத்தகையின்றி நல்லுயிர்க்கெல்லா
மலர்த்தற்காலை யாகியதாயிழை
வெண்டிரைதந்த வமுதைவானோ
ருண்டொழிமிச்சிலை யொழித்து ○ வைத்தாங்க
வறனோடுலகின் வான்றுயர்கெடுக்கு
மறனோடொழித்த வாயிழைதகர்தென

* 'வந்திற்றம்பாவை' என்றும், ○ 'வைத்தாங்க' என்றும் பாடம்.

மாதவனுரைத்தலு மணிமேகலைதான்
றாயர்தம்மொடு தாழ்ந்துபலவேத்திக்
கைக்கொண்டெடுத்த கடவுட்கடிஞையொடு
பிக்குணிக்கோலத்துப் பெருந்தெருவடைதலு
மொளித்தொருங்கீண்டிய வூர்க்குறுமாக்களு
மெலித்துகுநெஞ்சின் விடருந்தூர்த்தருங்
கொடிக்கோசம்பிக் கோமகனாகிப்
படித்தேர்த்தானை வைத்தவன்றன்னை
வஞ்சஞ்செய்து வான்றளையிடீஇய
வுஞ்சையிற்றோன்றிய * யூகியந்தண
னுருவிற்கொவ்வா வுறுநோய்கண்டு
பரிவுறுமாக்களிற் றாம்பரிவெய்தி
யுதயகுமர னுளங்கொண்டொளித்த
மதுமலர்க்குழலாள் வந்துதோன்றிப்
பிச்சைப்பாத்திரங் கையினேந்தியது
திப்பியமென்றே சிந்தைநோய்கூர
மணமனைக்குறுகி மாதவியீன்ற
வணிமலர்ப்பூங்கொம் பகமலியுவகையிற்
பத்தினிப்பெண்டிர் பண்புடனிடூஉம்
பிச்சையேற்றல் பெருந்தகையுடைத்தெனக்
குளனணிதாமரைக் கொழுமலர்நாப்ப
ணொருதனியொடுங்கிய திருமகள்போன்று
வான்றருகற்பின் மனையுறைமகளிரிற்
றான்றனிபோகிய தகையளன்றே
வாதிரைநல்லா ளகன்மனையிம்மனை
நீபுகவேண்டு நேரிழையென்றனள்
வடதிசைவிஞ்சை மாநகர்த்தோன்றித்
தென்றிசைப்பொதியிலோர் சிறியாற்றடைகரை
மாதவன்றன்னால் வல்வினையுருப்பச்
சாபம்பட்டுத் தனித்துயருழூஉம்
வீவில்வெம்பசி வேட்கையொடுதிரிதரூஉங்
காயசண்டிகையெனுங் காரிகைதானென.

பாத்திரங்கொண்டு பிச்சைபுக்ககாதை முற்றிற்று.

---

* 'யூகியந்தண' னென்றும் பாடம்.

## பதினாறாவது
# ஆதிரைபிச்சையிட்டகாதை.

ஈங்கென்செய்தி கேளெனவிஞ்சையர்
பூங்கொடிமாதர்க்குப் புகுந்ததையுரைப்போ
ளாதிரைகணவ னாயிழைகேளாய்
சாதுலனென்போன் றகவிலனாகி
யணியிழைதன்னை யகன்றனன்போகியக்
கணிகையொருத்தி கைத்தூணல்க
வட்டினுஞ்சூதினும் வான்பொருள்வழங்கிக்
கெட்டபொருளின் கிளைகேடுறுதலிற்
பேணியகணிகையும் பிறர்நலங்காட்டிக்
கான்மலியெனக்கை யுதிரக்கோடலும்
வங்கம்போகிய வணிகர்தம்முடன்
றங்காவேட்கையன் றானும்போவுழி
நளியிருமுந்நீர் களிகலன்வௌவ
வொடிமரம்பற்றி யூர்திரையுகைப்ப
நக்கசாரணர் நாகர்வாண்மலைப்
பக்கஞ்சார்ந்தவர் பான்மையனாயின
னுவாய்கேடுற நன்மரம்பற்றிப்
போயினன்றன்னோ டியருயப்போந்தோ
ரிடையிருள்யாமத் தெறிதிரைப்பெருங்கட
லுடைகலம்பட வொழிந்தோர்தம்முடன்
சாதுலன்றானுஞ் சாவுற்றானென
வாதிரைநல்லா ளாங்கதுதான்கேட்
டூரீரோயோ வொள்ளழலீமந்
தாரீரோவெனச் சாற்றினள்கழறிச்
சுடலைக்கண்ணிற் றொடுகுழிப்படுத்து
முடலைவிறகின் முளியெரிபொத்தி
மிக்கவென்கணவன் வினைப்பயனுய்ப்பப்
புக்குழிப்புகவே னென்றவள்புகுதலும்
படுத்துடனமைத்த பாவைப்பள்ளியு
முடுத்தகூறையு மொள்ளெரியுறா
தாடியசாந்தமு மசைந்தகூந்தலிற்
சூடியமாலையுந் தொன்னிறம்வழாஅது
விரைமலர்த்தாமரை யொருதனியிருந்த

திருவின்செய்யோள் போன்றினிதிருப்பத்
தீயுங்கொல்லாத் தீவினையாட்டியேன்
யாதுசெய்கே னென்றவளேங்கலு
மாதிரைகேணின் னரும்பெறல்கணவனை
யூர்திரைகொண்டாங் குயிருய்ப்போகி
நக்கசாரணர் நாகர்வாண்மலைப்
பக்கஞ்சார்ந்தனன் பல்லியாண்டிரான்
சந்திரதத்த னென்னும்வாணிகன்
வங்கந்தன்னொடு வந்தனன்றோன்று
நின்பெருந்துன்ப மொழிவாய்நீயென
வந்தரந்தோன்றி யசரீரியறைதலு
மையரியுண்கண் ணழியாதுநீங்கிப்
பொய்கைபுக்காடிப் போயினள்போன்று
மனங்கவல்வின்றி மனையகம்புகுந்தெனக்
கண்மணியான கடிதீங்குறுகெனப்
புண்ணியமுட்டாள் பொழிமழைதழூஉ
மரும்பெறன்மரபிற் பத்தினிப்பெண்டிர்
விரும்பினர்தொழூஉம் வியப்பினளாயின
ளாங்கவள்கணவனு மலைநீரடைகரை
யோங்குயிர்பிறங்க லொருமாநீழன்
மஞ்சுடைமாக்கட லுழந்தநோய்கூர்ந்து
துஞ்சுதுயில்கொள்ளவச் சூர்மலைவாழு
நக்கசாரணர் நயமிலர்தோன்றிப்
பக்கஞ்சார்ந்து பரிபுலம்பினனிவன்
றனேதமியன்வந் தனனிவனன்றா
னழியவூனுடையிவ் வுடம்புணவென்றெழுப்பலு
மற்றவர்பாடையின் மயக்குறுமரபிற்
கற்றனனாதலிற் கடுந்தொழின்மாக்கள்
சுற்றுநீங்கித் தொழுதுரையாடலு
மாங்கவருரைப்போ ரருந்திறல்கேளா
யீங்கெங்குருமக னிருந்தோனவன்பாற்
போந்தருணீயென வவருடன்போகிக்
கள்ளக்குழிசியுங் கழிமுடைநாற்றமும்
வெள்ளென்புணங்கலும் விரவியவிருக்கையி
லெண்குதன்பிணவோ டிருந்ததுபோலப்
பெண்டுடனிருந்த பெற்றியினோக்கிப்
பாடையிற்பணித்தவர் பான்மையனாகிக்

கோடியர்மானிழற் குளிர்ந்தவன்பின்னிவ
ணீங்குநீவந்த காரணமென்னென
வாங்கவனலைகட லுற்றதையுரைத்தலு
மருந்துதலின்றி யலைகடலுழந்தோன்
வருந்தினனளியன் வம்மின்மாக்களென
நம்பிக்கிளையா ணங்கையைக்கொடுமின்
வெங்களுமூனும் வேண்டுவகொடுமென
வவ்வுரைகேட்ட சாதுவனயர்ந்து
வெவ்வுரைகேட்டேன் வேண்டேனென்றலும்
பெண்டிருமுண்டியு மின்றெனின்மாக்கட்
குண்டோஞாலத் துறுபயனுண்டெனிற்
காண்கம்யாங்களுங் காட்டுவாயெனத்
தூண்டியசினத்தவன் சொல்லெனச்சொல்லு
மயக்குங்கள்ளு மன்னுயிர்கோறலும்
கயக்கறுமாக்கள் கடிந்ததுகேளாய்
பிறந்தவர்சாதலு மிறந்தவர்பிறத்தலு
முறங்கலும்விழித்தலும் போன்றதுண்மையி
னல்லறஞ்செய்வோ ரருநரகடைதலு
முண்டெனவுணர்தலி னுணர்வோர்களைந்தனர்
கண்டனையாகெனக் கடுநகையெய்தி
யுடம்புவிட்டோடு முயிருருக்கொண்டோ
ரிடம்புகுமென்றே யெமக்கீங்குரைத்தனை
யவ்வுயிரென்னணம் போய்ப்புகுமவ்வுரை
செவ்வணமுரைக்கெனச் சினவாதிதுகே
ளுற்றதையுணரு முடலுயிர்வாழ்வுழி
மற்றையவுடம்பே மன்னுயிர்நீங்கிடிற்
றடிந்தெரியூட்டினுந் தானுணராதெனி
னுடம்பிடைப்போயதொன் றுண்டெனவுணர்நீ
போனார்தமக்கோர் புக்கிலுண்டென்ப
தியானேவல்லே னியாவருமுணருடம்
பீண்டொழியுயிர்பல காவதங்கடந்து
சேறல்கனவினுங் காண்குவையாங்க
யானேபோகிய வவ்வுயிர்செய்வினை
பூண்டியாக்கையிற் புகுவதுதெளிநீ
யென்றவனுரைத்தலு மெரிவிழிநாகனு
நன்னெறிச்செட்டி தன்னடிவீழ்ந்து
கள்ளுமூனுங் கைவிடினிவ்வுடம்

புள்ளுறைவாழுயி ரோம்புதலாற்றேன்
நன்னெறிநல்லற மெடுத்துரையென்றலு
நன்றுசொன்னாய் நன்னெறிப்படர்குவை
யுன்றனக்காகு நல்லறமுரைக்கே
னுடைகலமாக்க ளுயிர்வந்துறினீ
யடுதொழிலொழிந்த வாருயிரோம்பி
யூத்துவிளிமா வொழித்துயிர்மாட்டுமத்
தீத்திறமொழிகெனச் சிறுமகனுரைப்போ
னீங்குமெக்காக விவ்வறஞ்செய்தே
யாங்குனக்காகு மரும்பொருள்கொள்கெனப்
பண்டுபெண்டிருக் கலங்கவிழ்மாக்களை
யுண்டேயவர்தரு முறுபொருளீங்கிவை
விரைமாமென்றுலகில் விழுநிதிக்குப்பையோ
டிவையிவைகொள்கென வெடுத்தனன்கொணர்ந்து
சந்திரதத்த னென்னும்வாணிகன்
வங்கஞ்சேர்ந்ததில் வந்துடனேறி
யிந்நகர்புகுந்தீங் கிவளொடும்வாழ்ந்து
தன்மனைநன்பல தானமுஞ்செய்தன
னுங்கனமாகிய வாயிழைகைவயிற்
பூங்கொடிநல்லாய் பிச்சைபெறுகென
மனையகம்புக்கு மணிமேகலைதான்
புனையாவோவியம் போலநிற்றலுந்
தொழுதுவலங்கொண்டு துயரறுகிளவியோ
டமுதசுரபியி னகன்சுரைநிறைதரப்
பாரகமடங்கலும் பசிப்பிணியறுகென
வாதிரையிட்டன ளாருயிர்மருந்தென.

ஆதிரைபிச்சையிட்டகாதை முற்றிற்று.

---

## பதினேழாவது
## உலகவறவிபுக்ககாதை.

பத்தினிப்பெண்டிர் பாத்தூணீத்த
பிச்சைப்பாத்திரப் பெருஞ்சோற்றமலை
றத்தினீட்டிய வொண்பொருளறவோன்
றிறத்துவழிப்படூஉஞ் சேவகைபோல

வாங்குகைவருந்த மன்னுயிர்க்களிக்கத்
தான்றொலைவில்லாத் தன்மைநோக்கி
யானைத்தீநோ யகவயிற்றடக்கிய
காயசண்டிகையெனுங் காரிகைவணங்கி
நெடுமால்மயங்கி நிலமிசைத்தோன்றி
யடலரு * முந்நீ ரடைத்தஞான்று
குரங்குகொணர்ந்தெறிந்த நெடுமலையெல்லா
மணங்குடையளக்கர் வயிறுபுக்காங்
கிட்டதாற்றாக் கட்டழற்கடும்பசி
பட்டேனென்றன் பழவினைப்பயத்தா
னன்னைகேணீ யாருயிர்மருத்துவீ
துன்னியவென்னோய் துடைப்பாயென்றலு
மெடுத்தபாத்திரத் தேந்தியவமுதம்
பிடித்தவள்கையிற் பேணினள்பெய்தலும்
வயிறுகாய்பெரும்பசி நீங்கிமற்றவ
ளொருநீங்கித் தொழுதனளுரைக்கு
மாசிலவாலொளி வடதிசைசேடிக்
காசில்காஞ்சன புரத்தொருநாளென்
விஞ்சையன்றன்னொடென் வெவ்வினையுருப்பத்
தென்றிசைப்பொதியில் காணியவருவேன்
கடுவாலருவிக் கடும்புனல்கொழித்த
விடுமணற்கானியாற் றிசைத்தொருங்கிருந்தேன்
புரிநூன்மார்பிற் றிரிபுரவார்சடை
மரவுரியாடையன் விருச்சிகனென்போன்
பெருங்குலைப்பெண்ணைக் கருங்கனியனையதோ
ரிருங்கனிநாவற் பழமொன்றேந்தித்
தேக்கிலைவைத்துச் சேணாற்றுப்பாப்பிற்
பூக்கமழ்பொய்கை யாடச்சென்றேன்
றீவினையுருத்தலிற் செருக்கொடுசென்றேன்
காலாலந்தக் கருங்கனிசிதைத்தே
னுண்டல்வேட்கையின் வரூஉம்விருச்சிகன்
கண்டனனென்னைக் கருங்கனிசிதைவுடன்
சீர்திகழ்நாவற் றிப்பியமாகிய
வீராறாண்டி லொருகனிதருவ
தக்கனியுண்டோ ராறீராண்டு

---

* 'முன்னீ' ரென்றும்பாடம்.

மக்களியாக்கையின் வரும்பசிநீங்குவர்
பன்னீராண்டி லொருநாளல்ல
துண்ணுநோன்பினெ னுண்கனிசிதைத்ததா
யந்தரஞ்செல்லு மந்திரமிழந்து
தந்தித்தீயாற் றனித்துயருழந்து
முன்னுலாண்டின் முதுகனிநானீங்
குண்ணுநாளின் னுறுதுயர்களைகென
வந்நாளாங்கவ னிட்டசாப
மிந்நாள்போலு மிளங்கொடியெடுத்தனை
வாடுபசியுழந்த மாமுனிபோயபின்
பாடுமிழருவிப் பயமலைபொழிந்தென
வவலக்கவலை செய்வினையஞ்சி
விலகொளிவிஞ்சையன் விழுமமொடெய்தி
யாரணங்காகிய வருந்தவன்றன்னாற்
காரணமின்றியுங் கடுநோயுழந்தனை
வானூடெழுந்தன மந்திரமறந்தே
னூனுயிர்நீங்கு முருப்பொடுத்தோன்றி
வயிறுகாய்பெரும்பசி வருத்துமென்றேற்கவன்
றீங்கனிகிழங்கு செழுங்காய்நல்லன
வாங்கவன்கொணரவு மாற்றேனாக
நீங்கலாற்றா நெடுந்துயரெய்தி
யாங்கவனுங்கெனக் கருளொடுமுரைப்போன்
சம்புத்தீவினுட் டமிழகமருங்கிற்
கம்பமில்லாக் கழிபெருஞ்செல்வ
ராற்றாமாக்கட் கருந்துணையாகி
நோற்றோருறைவதோர் நோனகருண்டாற்
பலநாளாயினு நிலைநாடுபோகி
யப்பதிபுக்குகென் றவனருள்செய்ய
விப்பதிபுகுந்தீங் கியானுறைகின்றே
னிந்திரகோடணை விழவணிவருநாள்
வந்துதோன்றியிம் மாநகர்மருங்கே
யென்னுயிர்ப்பெரும்பசி கண்டனனிரங்கிப்
பின்வரும்யாண்டவ னெண்ணினன்கழியுந்
தணிவிலேன்பசி தவிர்த்தனைவணங்கினேன்
மணிமேகலையென வான்பதிபடர்கெனத்
துக்கந்துடைக்குந் துகளறுமாதவர்
சக்கரவாளக் கோட்டமுண்டாதலிற்

பலர்புகத்துறந்த பகுவாய்வாயிலு
ளுலகவறவி யொன்றுண்டதனிடை
யூரூர்த்தங்க ளுறுபசியுழந்தோ
ராருமின்மையி னரும்பிணியுற்றோ
ரிடுவோரற்றோ ரிரப்போர்பலரால்
வடுவாழ்கூந்தல் தன்பாற்போகென்
றுங்கவன்போகிய பின்னராயிழை
யோங்கியவீதியி னொருபுடையொதுங்கி
வலமுறைமும்முறை வந்தனைசெய்த
வுலகவறவியி னொருதனியேறிப்
பதியோர்தம்மொடு பலர்தொழுதேத்து
முதியாள்கோட்ட முறைமையின்வணங்கிக்
கந்துடைநெடுநிலைக் காரணங்காட்டிய
தன்றுணைப்பாவையைத் தான்தொழுதேத்தி
வெயில்சுடவெம்பிய கரிகானத்துக்
கருவிமாமழை தோன்றியதென்னப்
பசிதினம்வருந்திய பைதன்மாக்கட்
கமுதசுரபியோ டாயிழைதோன்றி
யாபுத்திரன்கை யமுதசுரபியீ
தியாவரும்வருக வீரப்போர்தாமெனப்
பூனொலியாவத் தொலியெழுந்தன்றே
யாணர்ப்பேரூ ரம்பல்மருங்கென.

உலகவறவிபுக்ககாதை முற்றிற்று.

---

### பதினெட்டாவது

## உதையகுமரன் அம்பலம்புக்ககாதை.

ஆங்கதுகேட்டாங் கரும்புண்ணுக்கி-கையிற்
றீதுறுசெங்கோல் சென்றுசுட்டாங்குக்
கொதித்தவுள்ளமொடு குரம்புகொண்டேறி
விதுப்புறுநெஞ்சினன் வெய்துயிர்த்துக்கலங்கி
தீர்ப்பனிசித் திராதிபதிதான்
கூத்தியன்மடந்தையர்க் கெல்லாங்கூறும்
கோவலனிறந்தபின் கொடுந்துயரெய்திய
போதல்செல்லா மாதவிமாதவர்

பள்ளியுளடைந்துநகு கென்றோனன்னெடும்- பேருரிது
தக்கென்றவ கேளுனையாயது
காதலன்வீயக் கடுந்துயரெய்திப்
போதல்செல்லா வுயிரொடுபுலந்து
நளியிரும்பொய்கை யாடுநர்போல
முளியெரிபுகூஉ முதுக்குடிப்பிறந்த
பத்தினிப்பெண்டி ரல்லேம்பலர்தங்
கைத்தூண்வாழ்க்கை கடவியமன்றே
பாண்மகன்பட்டுழிஇப் படூஉம்பான்மையின்
யாழினம்போலு மியல்பினமன்றியு
நறுந்தாதுண்டு நயனில்காலை
வறும்பூத்துறக்கும் வண்டுபோல்குவம்
விலையொழிகாலைத் திருவின்செல்வி
யனையேமாகி யாடவர்த்துறப்பேர்
தாபதக்கோலந் தாங்கினமென்ப
தியாவருங்கூஉ மியல்பினதன்றே
மாதவியீன்றமணி மேகலைவல்லி
போதவிழ்செல்வி பொருந்துதல்விரும்பிய
உதயகுமரனா முலகாள்வண்டுஞ்
சிதையாவுள்ளஞ் செவ்வியினருந்தக்
கைக்கொண்டாங்கவ ளேந்தியகடிஞை
பிச்சைமாக்கள் பிறர்கைக்காட்டி
மற்றவன்றன்னான் மணிமேகலைதனைப்
பொற்றேர்கொண்டு போதேனாகிற்
சுடுமணேற்றியாங்கு சூளுற்றேகி
வடுவொடுவாழு மடந்தையர்தம்மோ
டனையேனாக வாடற்கூத்தியர்
மனையகம்புகா மரபினளென்றே
வஞ்சினஞ்சாற்றி நெஞ்சுபுகையுயிர்த்து
வஞ்சக்கிளவி மாண்பொடுதேர்ந்து
செறிவளைநல்லார் சிலர்புறஞ்சூழக்
குறுவியர்பொடித்த கோலவாண்முகத்தள்
கடுந்தேர்வீதி காலிற்போகி
யிளங்கோவேந்த னிருப்பிடங்குறுகி
யாவயின்வண்டொடு தேனினமார்க்குந்
திருமண்ணுமரிய திருநாறொருசிறைப்
பவளத்தூணத்துப் பசும்பொற்செஞ்சுவர்த்

திகழொளிநித்திலச் சித்திரவிதானத்து
விளங்கொளிவிரிந்த பளிக்குமண்டபத்
துளங்குமானூர்தித் தூமலர்ப்பள்ளி
வெண்டிரைவிரிந்த வெண்ணிறச்சாமரை
கொண்டிருமருங்குங் கோதையர்வீச
விருந்தோன்றிருந்தடி பொருந்திநின்றேத்தித்
திருந்தெயிறிலங்கச் செவ்வியனக்கவன்
மாதவிமணிமேகலையுடனெய்திய
தாபதக்கோலந் தவறின்றோவென
வரிதுபெறுசிறப்பிற் குருகுகருவுயிர்ப்ப
வொருதனியோங்கிய திருமணிக்காஞ்சி
பாடல்சால்சிறப்பிற் பரதத்தோங்கிய
நாடகம்விரும்பிய நன்னயங்கவினக்
காமர்செவ்விக் கடிமலர்வீழும்
உதயகுமர னெனுமொருவண்டுநீ
விரைவொடுவந்தேன் வியன்பெருமூதூர்ப்
பாழம்பறந்தலை யம்பலத்தாயது
வாழ்கநின்கண்ணி வாய்வாள்வேந்தென
வேங்கியபவ்வத் துடைகலம்பட்டோர்
வான்புணைபெற்றென மற்றவற்குரைப்போன்
மேவியபளிங்கின் விருந்திற்பாவையிஃ
தோவியச்செய்தி யென்றொழிவேன்முன்னர்க்
காந்தளஞ்செங்கை தளைப்பிணிவிடாஅ
வேந்திளவனமுலை யிறநெறித்தூஉ
மொத்தொளிபவளத் துள்ளொளிசிறந்த
முத்துக்கூர்த்தன முள்ளெயிறமுத
மருந்தவேமாந்த ராருயிர்தளிர்ப்ப
விருந்தின்மூர லரும்பியதூஉ
மாயிதழ்க்குவளை மலர்புறக்கோட்டிக்
காய்வேல்வென்ற கருங்கயனெடுங்கணென்
னறிவுபிறிதாய தாயிழைதனக்கெனச்
செவிகுறுக்குறூஉச் சென்றசெல்வியும்
பளிங்குபுறத்தெறிந்த பவளப்பாவையென்
னுளங்கொண்டொளித்தா ளுயிர்க்காப்பிட்டென்
றிடையிருள்யாமத் திருந்தேன்முன்னர்ப்
பொன்றிகழ்மேனி யொருத்திதோன்றிச்
செங்கோல்காட்டிச் செய்தவம்புரிந்த

வங்கவடன்றிறம் யாப்பாயென்றனள்
தெய்வங்கொல்லோ திப்பியங்கொல்லோ
வெய்யாமையலென் யானென்றவன்சொலச்
சித்திராபதிதான் சிறுநகையெய்தி
யத்திறம்விடுவா யரசிளங்குரிசில்
காமக்கள்ளாட் டிடைமயக்குற்றன
டேவர்க்காயினுஞ் சிலவோசெப்புவன்
மாதவன்மடந்தைக்கு வருந்துதுயரெய்தி
யாயிரஞ்செங்க ணமரர்கோன்பெற்றது
மேருக்குன்றத் தூறுநீர்ச்சரவணத்
தருந்திறன்முனிவர்க் காரணங்காகிய
பெரும்பெயர்ப்பெண்டிர் பின்புளம்போக்கிய
வங்கிமனையா ளவரவர்வடிவாய்
தங்காவேட்கைதனை யவடவன்றணிந்ததூங்
கேட்டுமறிதியோ வாட்டிறற்குரிசில்
கன்னிக்காவலுங் கடியிற்காவலுந்
தன்னுறுகணவன் சாவுறிற்காவலு
நிறையிற்காத்துப் பிறர்பிறர்க்காணாது
கொண்டேனல்லது தெய்வம்பேணாப்
பெண்டிர்தங்குடிபாற் பிறந்தாளல்லள்
நாடவர்காண நல்லரங்கேறி
யாடலும்பாடலு மழகுங்காட்டிச்
சுரும்புநாண்கருப்புவி லருப்புக்கணைதூவச்
செருக்கயனெடுங்கட் சுருக்குவலைப்படுத்துக்
கண்டோர்நெஞ்சங் கொண்டகம்புக்குப்
பண்டொடர்மொழியிற் பயன்பலவாங்கி
வண்டிற்றுறக்குங் கொண்டிமகளிரைப்
பான்மையிற்பிணித்துப் படிற்றுரையடக்குதல்
கோமுறையன்றோ குமரற்கென்றலு
முதையகுமர னுள்ளகம்பிறழ்ந்து
விரைபரிநெடுந்தேர் மேற்சென்றேறி
யாயிழையிருந்த வம்பலமெய்திக்
காடமர்செல்வி கடிப்பசிகளைஇய
வோடுகைக்கொண்டுநின் றூட்டுனள்போலத்
தீப்பலிமாக்கட்குச் செழுஞ்சோறீத்துப்
பாத்திரமேந்திய பாவையைக்கண்டலு
மிட்டங்கழிகாமமோ டடங்கானாகி

யுடம்போடென்றவ னுள்ளகம்புகுந்தென்
னெஞ்சங்கவர்ந்த வஞ்சகக்கள்வி
னோற்றூண்வாழ்க்கையி னொசிதவந்தாங்கி
யேற்றூண்விரும்பிய காரணமியாதெனத்
தானேதமிய ணின்றோண்முன்னர்
யானேகேட்ட லியல்பெனச்சென்று
நல்லாயென்கோ நற்றவம்புரிந்தது
சொல்லாயென்று நைந்துடன்செப்ப
வென்னமர்காதல னிராகுலனீங்கிவன்
றன்னடிதொழுதலுந் தகவெனவணங்கி
யறைபோயநெஞ்ச மவன்பாலணுகி
யிறைவளைமுன்கை யீங்கிவன்பற்றினுந்
தோன்றுகாதலன் சொல்லெதிர்மறுத்தல்
நன்றியன்றென நடுங்கினண்மயங்கிக்
கேட்டதுமொழிவேன் கேள்வியாளதிற்
றோட்டசெவியைநீ யாகுவையாமெனிற்
பிறத்தலுமூத்தலும் பிணிபட்டிரங்கலு
மிறத்தலுமுடைய திடும்பைக்கொள்கல
மக்கள்யாக்கை யிதுவெனவுணர்ந்து
மிக்கநல்லறம் விரும்புதல்புரிந்தென்
மண்டலமாளுங் களிறனையாற்குப்
பெண்டிர்கூறும் பேரறிவுண்டோ
கேட்டனையாயின் வேட்டதுசெய்கென
வாட்டிறற்குரிசிலை மடக்கொடி * நீவி
முந்தைமுதல்வி முதியாளிருந்த
குச்சரக்குடிகை தன்னகம்புக்காங்
காடவர்செய்தி யறிகுநர்யாரெனத்
தோடலர்கோதையைத் தொழுதனளேத்தி
மாயவிஞ்சை மந்திரமோதி
காயசண்டிகையெனுங் காரிகைவடிவாய்
மணிமேகலைதான் வந்துதோன்ற
வணிமலர்த்தாரோ னவள்வயிற்புக்குக்
குச்சரக்குடிகைக் குடுமியைமரீஇப்
பிச்சைப்பாத்திரம் பெரும்பசியுழந்த
காயசண்டிகைதன் கையிற்காட்டி

---

* நீங்கி என்றும் பாடம்.

மாயையி னொளித்த மணிமேகலைதனை
யீங்கமண் ணீட்டி யாரெனவுணர்கே
னாங்கவளிவளென் றருளாயாயிற்
பன்னாளாயினும் பாடுகிடப்பே
னின்னுங்கேளா யிமையோர்பரவாப்
பவளச்செவ்வாய்த் தவளவாணகையு
மஞ்சனஞ்சேராச் செங்கயனெடுங்கணு
முரிந்துகடைநெரிய வரிந்தசிலைப்புருவமுங்
கவைமுட்கருவியு மாகக்கடிகொள்
கலவிப்பரதரிற் காப்புவலையோட்டி
வல்வாயாமின் மெல்லிதின்விளங்க
முதுக்குறைமுதுமொழி யெடுத்துக்காட்டிப்
புதுக்கோட்டியானை வேட்டம்வாய்த்தெனை
முதியாளுன்றன் கோட்டம்புகுந்த
மதிவண்முகத்து மணிமேகலையை
யொழியப்போகே னுன்னடிதொட்டே
னிதுகுறையென்றன னிறைமகன்றானென

உதையகுமரன் அம்பலம்புக்ககாதை - முற்றிற்று.

---

பத்தொன்பதாவது

## சிறைக்கோட்டமறக்கோட்டமாக்கியகாதை.

முதியாள்திருந்தடி முறைமையின்வணங்கி
மதிமலர்த்தாரோன் வஞ்சினங்கூற
வேடவிழ்தாரோ யெங்கோமகன்மு
னாடாதுதுணிந்துநா நல்கூர்ந்தனையென
வித்தகரியற்றிய விளங்கியகவினைச்
சித்திரமென்று தெய்வங்கூறலு
முதையகுமர னுள்ளங்கலங்கிப்
பொதியறைப்பட்டோர் போன்றுமெய்வருந்தி
யங்கவடன்றிறம் யாப்பாயென்றே
செங்கோல்காட்டிய தெய்வமுந்திப்பியம்
பையரவல்குல் பலர்பசிகளையக்
கையினேந்திய பாத்திரந்திப்பிய
முங்கைதீமுதல்வி யடிபிழைத்தாயெனச்

சித்திரமுரைத்ததுந் திப்பியமுன்னிலை
யெல்லாமிளங்கொடி செய்தியாயிற்
பின்னறிவாமெனப் பெயர்வோன்றன்னை
யகன்வாய்ஞால மாரிருளுண்ணப்
பகலாசொட்டிப் பணையெழுந்தார்ப்ப
மாலைநெற்றி வான்பிறைக்கோட்டு
நீலயானை மேலோரின்றிக்
காமர்செங்கை நீட்டிவண்டுபடு
பூநாறுகடாஞ் செருக்கிக்கால்கிளர்ந்து
நிறையமர்தோற்றமொடு தொடரமுறைமையி
னகரம்பரியா வினையோர்தம்முடன்
மகரவீணையின் கிளைநரம்பிடித்த
விளிபுணரின்சீ ரெஃகுளங்கிழிப்பப்
பெருஅநெஞ்சிற் புகையெரிபொத்திப்
பருஅக்குருகி னுயர்த்தனன்போயபி
னுறையுட்குடிகை யுள்வரிக்கொண்டிட்
மறுவில்செய்கை மணிமேகலைதான்
மாதவிமகளாய் மன்றந்திரிதலிற்
காவலன்மகனோ கைவிடலீயான்
காய்பசியாட்டி காயசண்டிகையென்
றூர்முழுதறியு முருவங்கொண்டே
ஞற்றாமாக்கட் காற்றுந்துணையாகி
யேற்றலுமிடுதலு மிரப்போர்கடனவர்
மேற்சென்றளித்தல் விழுத்தகைத்தென்றே
நூற்பொருளுணர்ந்தோர் நுனித்தனராமென
முதியாள்கோட்டத் தகவயினிருந்த
வமுதசுரபி யங்கையின்வாங்கிப்
பதியகந்திரிதரும் பைந்தொடிமடந்தை
யதிர்கழல்வேந்த னடிபிழைத்தாரை
யொறுக்குந்தண்டத் துறுசிறைக்கோட்டம்
விருப்பொடும்புகுந்து வெய்துயிர்த்துப்புலம்பி
யாங்குபசியுறு மாருயிர்மாக்களை
வாங்குகையகம் வருந்தநின்றூட்டலு
முட்டியபாத்திர மொன்றெனவியந்து
கோட்டங்காவலர் கோமகன்றனக்கிப்
பாத்திரதானமும் பைந்தொடிசெய்தியும்

யாப்புடைத்தாக விசைத்துமென்றேகி
நெடியோன்குறளுரு வாகிநிமிர்ந்து
தன்னடியிற்படி யடக்கியவந்நா
ணீரிற்பெய்த மூரிவார்சிலை
மாவலிமருமான் சீர்கெழுதிருமகள்
சிதாதகையென்னுந் திருத்தகுதேவியொடும்
போதவிழ்பூம்பொழில் புகுந்தனன்புக்குக்
கொம்பரத்தும்பி குழலிசைகாட்டப்
பொங்கர்வண்டின நல்லியாழ்செய்ய
வரிக்குயில்பாட மாமயிலாடும்
விரைப்பூம்பந்தர் கண்டுளஞ்சிறந்து
புணர்துணைநீங்கிய பொய்கையன்னமொடு
மடமயிற்பெடையுஞ் சேவலுங்கூடி
யிருஞ்சிறைவிரித்தாங் கெழுந்துடன்கொட்பன
வொருசிறைகண்டாங் குளமகிழ்வெய்தி
மாமணிவண்ணனுந் தம்முனும்பின்னையு
மாடியகுரவையி தாமெனநோக்கியுங்
கோங்கலர்சேர்ந்த மாங்கனிதன்னைப்
பாங்குறவிருந்த பல்பொறிமஞ்ஞையைச்
செம்பொற்றட்டிற் றீம்பாலேந்திப்
பைங்கிளியூட்டுமோர் பாவையாமென்று
மணிப்பூம்பெரும்பொழி லகவையினிருந்த
பிணவுக்குரங்கேற்றிப் பெருந்தாமரைக்கண்
மடவோர்க்கியற்றிய மாமணியூசல்
கடுவனூக்குவது கண்டுமகிழ்வெய்தியும்
பாசிலைசெறிந்த பசுங்காலிற்றழைக்
கணையொடுவால்வீ செறிந்தமராஅங்கண்டு
நெடியோன்முன்னொடு நின்றனனாமெனத்
தொடிசேர்செங்கையிற் றொழுதுநின்றேத்தியு
மாடல்வினைநா டவினயந்தெரிவோர்
நாடகக்காப்பிய நன்குநுனிப்போர்
பண்ணியாழ்நரம்பிற் பண்ணுமுறைநிறுப்போர்
தண்ணுமைக்கருவி கண்ணெறிதெரிவோர்
குழலொடுகண்டங் கொள்சீர்நிறுப்போர்
பழகியபாடல் பலவொடுமகிழ்வோ
ரார்ம்புரிந்த முத்தங்கோப்போ

நீரம்புலர்ந்த சாந்தந்திமிர்வோர்
குங்குமவருணங் கொங்கையினிழைப்போர்
செங்கழுநீராற் சேயிதழ்பிணைப்போர்
நன்னெடுங்கூந்த னறுவிரைகுடைவோர்
பொன்னணியாடையிற் பொருந்துபுநிற்போ
ராங்கவர்தம்மோ டகலிருவானத்து
வேந்தனிற்சென்று விளையாட்டயர்ந்து
குருகுந்தளவுந் திருமலர்சொரிந்து
முருகுவிரிமுல்லையுங் கருவிளம்பொங்கரும்
பொருந்துபுநின்று திருந்துநகைசெய்து
குலுங்கான்குலமு நெடுஞ்செவிமுயலும்
பிறழ்ந்துபாய்மானு மிறும்பகலாவெறியும்
வம்மெனக்கூஉய் மகிழ்துணையோடுதன்
செம்மலர்செங்கை காட்டுபுநின்று
மன்னவன்றானு மலர்க்கணைமைந்தனு
மின்னிளவேனிலு மிளங்காற்செல்வனு
மெந்திரக்கிணறு மிடுங்கற்குன்றமும்
வந்துவீழருவியு மலர்ப்பூம்பந்தரும்
பரப்புநீர்ப்பொய்கையுங் கரப்புநீர்க்கேணியு
மொளித்துறையிடங்களும் பளிக்கறைப்பள்ளியு
மாங்கணுந்திரிந்து தாழ்ந்துவிளையாடி
மகதவினைஞரு மராட்டக்கம்மரு
மவந்திக்கொல்லரும் யவனத்தச்சருந்
தண்டமிழ்வினைஞர் தம்மொடுங்கூடிக்
கொண்டினிதியற்றிய கண்கவர்செய்வினைப்
பவளத்திரள்காற் பன்மணிப்போதிகை
தவளநித்திலத் தாமந்தாழ்ந்த
கோணச்சந்திமாண் வினைவிதானத்துத்
தமனியம்வேய்ந்த வகைபெறுவனப்பிற்
பைஞ்செறுமெழுகாச் செம்பொன்மண்டபத்
திந்திரசிறுவ னேறினனென்றலும்
வாயிலுக்கிசைந்தது மன்னவனருளாற்
சேய்நிலத்தன்றியுஞ் செவ்வியின்வணங்கி
யெஞ்சாமண்ணசை மேலுளந்துரப்ப
வஞ்சியினிருந்து வஞ்சிசூடி
முறஞ்செவியானை யுந்தருமாவு

மறங்கெழுநெடுவாள் வயவருமடைந்த
தலைத்தார்ச்சேனையொடு மலைத்துத்தலைவந்தோர்
சிலைக்கைநெடுங்கொடி செருவேற்றடக்கை
யார்புனைத்தெரிய லிளங்கோன்றன்னாற்
கான்யாற்றுக்கொண்ட காவல்வெண்குடை
வலிகெழுதடக்கை மாவண்கிள்ளி
யொலியொடுவழா தூழிதோறூழி
வாழியெங்கோ மன்னவர்பெருந்தகை
கேளிதுமன்னோ கெடுகநின்பகைஞர்
யானைத்தீநோய்க் கயர்ந்துமெய்வாடியிம்
மாநகர்த்திரியுமோர் வம்பமாதருஞ்
சிறைக்கோட்டத் தகவயிற்புகுந்து
பெரும்பெயர்மன்ன நின்பெயர்வாழ்த்தி
யையப்பாத்திர மொன்றுகொண்டாங்கு
மெய்கொண்மாக்கள் மூசிக்கவூண் * தந்தன
வாழிவாழிகோ மன்னவவென்றனு
மூழிதோறூழி யுலகங்காத்து
வருகவருக மடக்கொடிதானென்
றருள்புரிநெஞ்சமொ டரசன்கூறலும்
வாயிலாளர்நின் மடக்கொடிதான்சென்
றாய்கழல்வேந்த னருள்வாழியவெனத்
தாராநன்மையைத் தவத்தீர்நீர்யா
ரியாங்காகியதிவ் வேந்தியகுடிஞையென்
றரசன்கூறலு மாயிழையாயிடை
விளைத்தார்வேந்துநீ நீடுவாழி
விஞ்சைமகள்யான் விழாவணிமூதூர்
வஞ்சந்திரிந்தேன் வாழியபெருந்தகை
வானம்வாய்க்க மண்வளம்பெருகுக
தீதின்றாக கோமகன்றனக்கிங்
கையக்கடிஞை யம்பலமருங்கோர்
தெய்வந்தந்தது திப்பியமாயது
யானைத்தீநோ யரும்பசிகெடுத்தது
மானிடமாக்க ளுயிர்மருந்திதுவென
யான்செயற்பாலதே னிளங்கொடிக்கென்று
வேந்தன்கூற மெல்லியலுரைக்குஞ்
சிறையோர்கோட்டஞ் சிதைதருநெஞ்சத்

* 'சுரந்தனள்' என்றும் பாடம்.

தறவோர்காக்கு மதிவாழியவென
வருஞ்சிறைவிடுத்த தாயிழைதானெனப்
பெருந்தவர்தம்மாற் பெரும்பொருளெய்தக்
கறையோரில்லாச் சிறையோர்கோட்ட
மறவோர்க்காக்கின னரசாள்வேந்தென
சிறைக்கோட்டமறக்கோட்டமாக்கியகாதை - முற்றிற்று.

## இருபதாவது
## உதயகுமரனைக்காஞ்சனன்வாளாலெறிந்தகாதை.

அரசனாணையி னாயிழையருளா
னிரயக்கொடுஞ்சிறை நீக்கியகோட்டம்
தீப்பிறப்பிழந்தோர் செய்தவப்பயத்தான்
யாப்புடைநற்பிறப் பெய்தினர்போலப்
பொருள்புரிநெஞ்சிற் புலவோன்கோயிலு
மருள்புரிநெஞ்சத் தறவோர்பள்ளியு
மட்டிற்சாலையு மருந்தினர்சாலையுங்
கட்டுடைச்சேவகக் காப்புடைத்தாக
வாயிழைசென்றதூஉ மாங்கவடனக்கு
வீயாவிழுச்சீர் வேந்தன்பணித்ததூஉஞ்
சிறையோர்நீங்கிச் சிறையோர்கோட்ட
மறவோர்கோட்ட மாக்கியவண்ணமுங்
கேட்டனனாகியத் தோடார்குழலியை
மதியோரெள்ளினு மன்னவள்காயினும்
பொதியினீங்கிய பொழுதத்திற்சென்று
பற்றினன்கொண்டென் பொற்றேரேற்றிக்
கற்றறிவிஞ்சையுங் கேட்டவளுரைக்கு
முதுக்குறைமொழியுங் கேட்குவனென்றே
மதுக்கமழ்தாரோன் மனங்கொண்டெழுந்து
பலர்பசிகளைஇய பாவைதானொடுங்கிய
வுலகவறவியி னூடுசென்றேற்றலு
மழைசூழ்குடுமிப் பொதியிற்குன்றத்துக்
கழைவளர்கான்யாற்றுப் பழவினைப்பயத்தான்
மாதவன் மாதர்க்கிட்டசாப
மீராறாண்டு வெந்ததுவாராள்
காயசண்டிகையெனக் கையறவெய்திக்

காஞ்சனனென்னு மவடன்கணவ
னேங்கியமூதா ருள்வந்துபுகுந்து
பூதசதுக்கமும் பூமரச்சோலையு
மாதவரிடங்களு மன்றமும்பொதியினுந்
தேர்ந்தனன்றிரிவோ னேந்திளவனமுலை
மாந்தர்பசிநோய் மாற்றுங்கண்டாங்
கின்றுகையினேந்தியபாத்திர
மொன்றேயாயினு முண்போர்பல்லோர்
லானைத்தீநோ யரும்பசிகளைய
வானவாழ்க்கைய ரருளினர்கொல்லெனப்
பழமைக்கட்டுரை பலர்பாராட்டவும்
விழையாவுள்ளமொ டவன்பானீங்கி
யுதயகுமரன் றன்பாற்சென்று
நரைமூதாட்டி யொருத்தியைக்காட்டித்
தண்ணறல்வண்ணந் திரிந்துவேறாகி
வெண்மணலாகிய கூந்தலுங்காணாய்
பிறைநுதல்வண்ணங் காணாயோநீர்த்
* தறைமற்றிரைபோற் றகைகயினாயது
விறல்விற்புருவ மிவையுங்காணா
யிறவினுணங்கல் போன்றுவேறாயின
கழுநீர்க்கண்காண் வழுநீர்சுமந்தன
குமிழ்மூக்கிதுகாண் உமிழ்சீயொழுகுவ
நிரைமுத்தனைய நகையுங்காணாய்
சுரைவித்தேய்ப்பப் பிறழ்ந்துவேறாயின
இலவிதழ்ச்செவ்வாய் காணாயோநீ
புலவுப்புண்போற் புலால்புறத்திடுவது
வள்ளைத்தாள்போல் வடிகாதிவைகா
ணுள்ளூன்வாடிய வுணங்கல்போன்றன
விறும்பூதுசான்ற முலையிவைகாப்ப
வெறும்பைபோல வீழ்ந்துவேறாயின
தாழ்ந்தொசிதெங்கின் மடல்போற்றிரங்கி
வீழ்ந்தனவிளவேய்த் தோளிவைகாணாய்
நரம்பொடுவிடுதோ லுகிர்த்தொடர்கழன்று
திரங்கியவிரல்கள் யாவையுங்காணாய்
வாழைத்தண்டே போன்றகுறங்கினைத்
தாழைத்தண்டி னுணங்கல்காணாய்

* 'திரை' என்றும் பாடம்.

யாவக்கணைக்கா லிவையுங்காணாய்
மெலியநரம்போ டென்புபுறங்காட்டுவ
தளிரடிவண்ணங் காணாயோநீ
முளிமுதிர்தெங்கி னுதிர்காயுணங்கல்
பூவினுஞ்சாந்தினும் புலான்மறுத்தியாத்துத்
தூசினுமணியினுந் தொல்லோர்வகுத்த
வஞ்சந்தெரியாய் மன்னவன்மகனென
விஞ்சைமகளாய் மெல்லியலுரைக்கத்
தற்பாராட்டுமென் சொற்பயன்கொள்ளான்
பிறர்பின்சொல்லினும் பிறர்போறலுக்கு
மதுக்கமழலங்கன் மன்னவன்மகற்கு
முதுக்குறைமுதுமொழி யெடுத்துக்காட்டிப்
பவளக்கடிகையிற் றவளவாணகையுங்
குவளைச்செங்கணுங் குறிப்பொடுவழா
ளீங்கிவள்காதல் லுதலினேந்திழை
யீங்கொழிந்தனளென வகையெரிபொத்தி
மற்றவளிருந்த மன்றப்பொதியிற்
புற்றடங்காவிற்புக் கொளித்தடங்கினன்
காஞ்சனனென்னுங் கதிர்வாள்விஞ்சைய
னாங்கவனுரைத்தவ லாதாரவெங்
கனையாவேட்கையிற் கைவிதிர்க்கொள்ளா
வளைசேர்செங்கை மணிமேகலைதான்
காயசண்டிகையாய்க் கடிஞையேந்தி
மாயவிஞ்சையின் மனமயக்குறுத்தன
ளம்பலமருங்கி னயர்ந்தறிவுரைத்த
வம்பலன்றன்னொடிவ் வைகிருளொளியா
ளிங்கிவள்செய்தி யிடையிருள்யாமத்து
வந்தறிகுவனென மனங்கொண்டெழுந்து
மான்றேர்ப்பாகன் மின்றிகழ்கொடியனைக்
கருப்புவில்லியை யருப்புக்கணைமைந்தனை
யுயிருயத்துணையாக வயர்வொடும்போகி
யூர்துஞ்சியாமத் தொருதனியெழுந்து
வேழம்வேட்டெழும் வெம்புலிபோலக்
கோயில்கழிந்து வாயினீங்கி
யாயிழையிருந்த வம்பலமணைந்து
வேகவெந்தீ நாகங்கிடந்த

போகுயர்புற்றளை புகுவான்போல
வாகந்தோய்ந்த சாந்தலருறுத்த
வாழடியிட்டதன் னுள்ளகம்புகுதலு
மாங்கமுன்னிருந்த வலர்தார்விஞ்சைய
னீங்கிவன்வந்தன னிவள்பாலென்றே
வெஞ்சினவரவ நஞ்செயிறரும்பத்
தன்பெருவெகுளியி னெழுந்துபைவிரித்தென
விருந்தோனெழுந்து பொருமிச்சென்றவன்
சுரும்பறைமணித் தோடுணியவீசிக்
காயசண்டிகையைக் கைக்கொண்டந்தரம்
போகுவலென்றே யவள்பாற்புகுதலு
நெடுநிலைக்கந்தி னிடவயின்விளங்கிக்
கடவுளெழுதிய பாவையாங்குரைக்கு
மணுகலகல விஞ்சைக்காஞ்சன
மணிமேகலையவள் மற்றுருவெய்தினள்
காயசண்டிகைதன் கடும்பசிநீங்கி
வானம்போவழி வந்ததுகேளா
யந்தரஞ்செல்வோ ரந்தரியிருந்த
விந்தமால்வரை மீமிசைச்செல்லார்
போவாருளரெனிற் பொங்கியசினத்துச்
சாய்கையின்வாங்கித் தன்வயிற்றடூஉம்
விந்தங்காக்கும் விந்தாகடிகை
யம்மலைமிசைப்போ யவள்வயிற்றடங்கினள்
கைம்மைகொள்ளேற் காஞ்சனவினிதுகே
ளூழ்வினைவந்திங் குதையகுமரனை
யாருயிருண்ட தாயினுமறியாய்
வெவ்வினைசெய்தாய் விஞ்சைக்காஞ்சன
வவ்வினைநின்னையு மகலாதாங்குறு
மென்றிவைதெய்வங் கூறலுமெழுந்து
கன்றியநெஞ்சிற் கடுவினையுருத்தெழ
விஞ்சையன்போயினன் மிகுவிண்படர்ந்தென.

உதையகுமரனைக்காஞ்சனன் வாளாலெறிந்தகாதை

முற்றிற்று.

## இருபத்தோன்றாவது
## கந்திற்பாவைவருவதுரைத்தகாதை

---

கடவுளெழுதிய நெடுநிலைக்கந்தின்
குடவயினமைந்த நெடுநிலைவாயின்
முதியாள்கோட்டத் தரிவையிற்கிடந்த
மதுமலர்க்குழலி மயங்கினளெழுந்து
விஞ்சையன்செய்தியும் வெல்வேல்வேந்தன்
மைந்தற்குற்றது மன்றப்பொதியிற்
கந்துடைநெடுநிலை கடவுட்பாவை
யங்கவற்குரைத்த வற்புதக்கிளவியுங்
கேட்டனளெழுந்து கெடுகவிவ்வுருவெனத்
தோட்டார்குழலி யுளவரிநீங்கித்
திட்டிவிடமுண்டு நின்னுயிர்போநாட்
கட்டழல்வீமத் தென்னுயிர்சுட்டே
னுவவனமருங்கி னின்பாலுள்ளந்
தவிர்விலனாதலிற் றலைமகடோன்றி
மணிப்பல்லவத்திடை யென்னையாங்குய்த்துப்
பிணியறுமாதவன் பீடிகைகாட்டி
யென்பிறப்புணர்த்த வென்முற்றோன்றி
யூன்பிறப்பெல்லா மொழிவின்றுரைத்தலிற்
பிறந்தோரிறத்தலு மிறந்தோர்பிறத்தலு
மறந்தருசால்பு மறந்தருதுன்பமும்
யானினக்குரைத்துநின் னிடர்வினையொழிக்க
காயசண்டிகைவடி வானென்காதல்
வைவாள்விஞ்சையன் மயக்குறுவெகுளியின்
வெவ்வினையுருப்ப விளிந்தனையோவென
விழுமக்கிளவியின் வெய்துயிர்த்துப்புலம்பி
யழுதனளேங்கி யயர்வுயிர்த்தெழுதலுஞ்
செல்லல்செல்லல் சேயரிநெடுங்க
ணல்லியந்தாரோன் றன்பாற்செல்லல்
நினக்கவன்றலைமக னாய்த்தோன்றியதூஉ
மனக்கினியாற்குநீ மகளாயதூஉம்
பண்டும்பண்டும் பல்பிறப்புளவாற்
கண்டபிறவே யெல்லாங்காரிகை
தடுமாறுபிறவித் தாழ்தருதோற்றம்

விடுமாறுமுயல்வோய் விழுமங்கொள்ளே
லென்றிவைசொல்லி யிருந்தெய்வமுரைத்தலும்
பொன்றிகழ்மேனிப் பூங்கொடிபொருந்திப்
பொய்யாநாவொடிப் பொதியிற்சென்றிய
தெய்வநீயோ திருவடிதொழுதேன்
விட்டபிறப்பின் வெய்துயிர்த்தீங்கிவன்
றிட்டிவிடமுணச் செல்லுயிர்போயது
நெஞ்சுநடுங்கி நெடுந்துயர்கூறயான்
விஞ்சையன்வாளி னிவன்விளிந்ததூஉ
மறிதலுமறிதியோ வறிந்தனையாயிற்
பெறுவேனல்லனின் பேரருளிங்கென
வையரிநெடுங்க ணாயிழைகேளென
இளவியிற்றெய்வங்கூறுங்
காயங்கரையெனும் பேரியாற்றடைகரை
மாயமின்மாதவன் வருபொருளுரைத்து
மருளுடைமாக்கள் மனமாசுகழூஉம்
பிரமதருமனைப் பேணினராகி
யடிசிற்சிறப்பி யடிகளுக்காதல்
விடியல்வேலை வேண்டினமென்ற
மாலைநீங்க மனமகிழ்வெய்திக்
காலைதோன்ற வேலையின்வரூஉ
நடைத்திறத்திழுக்கி நல்லடிதளர்ந்து
மடைக்கலஞ்சிதைய வீழ்ந்தமடையனைச்
சீலநீங்காச் செய்தவத்தோர்க்கு
வேலைபிழைத்த வெகுளிதோன்றத்
தோளுந்தலையுந் துணிந்துவேறாக
வாளிற்றப்பிய வல்வினையன்றே
விராய்மலர்க்கூந்தன் மெல்லியனின்னோ
டிராகுல னிட்டகாலத்துத்
தலைவன்காக்குந் தன்பொருட்டாகி
யவ்வல்வெவ்வினை யென்போரறியா
ரறஞ்செய்காதலன் பின்னராயினு
மறஞ்செய்துளனெனில் வல்வினையொழியா
தாங்கவெவ்வினைவந் துண்ணுங்காலைத்
தீங்குறுமுயிரே செய்வினைமருங்கின்
மீண்டுவருபிறப்பின் மீளினுமீளு

மாங்கவ்வினைகா ணுயிழைகணவனை
யீங்குவந்திவ் விடர்செய்தொழிந்த
தின்னுங்கேளா யிளங்கொடிநல்லாய்
நன்னூலுறூஉ நற்றவமப்பலம்
யானவன்மகற்கு வருதுயரெய்தி
மாதவருணாத்த வாய்மொழிகேட்டுக்
காதலிநின்னையுங் காவல்செய்தாங்கிடு
விடுசிறைநீக்கி யிராசமாதேவி
கூடவைக்குங் கொட்பினளாகி
மாதவிமாதவன் மலரடிவணங்கித்
தீதுகூறவவ டன்னொடுஞ்சேர்ந்து
மாதவனுரைத்த வாய்மொழிகேட்டுக்
காதலிநின்னையுங் காவனீக்குவ
ளரசாள்செல்வத் தாபுத்திரன்பாற்
புரையோர்ப்பேணிப் போக்கிலும்போக்கும்
போனலவனொடும் பொருளுரைபொருந்தி
மாநீர்வங்க மவனொடுமேறி
மாயமில்செய்தி மணிப்பல்லவமெனுந்
தீபத்தின்கணுஞ் சேர்தலுமுண்டாற்
றீவதிலகையின் றன்றிறங்கேட்டுச்
சாவகமன்னன் றன்னாடடைந்தபின்
னத்தீவம்விட் டருந்தவன்படிவாய்ப்
பூங்கொடிவஞ்சி மாநகர்புகுவை
யாங்கணிங்கா தறிபொருள்வினவு
மோங்கியகேள்வி யுயர்ந்தோர்பலரா
விறைவனெங்கோ னெவ்வுயிரனைத்து
முறைமையிற்படைத்த முதல்வனென்பாருந்
தன்னுருவில்லோன் பிறவுருப்படைப்போ
னன்னோனிறைவ னாகுமென்பாருந்
துன்பநோன்பிற் றொடர்பாடறுத்தாங்
கின்பவுலகுச்சி யிருத்துமென்பாரும்
பூதவிகாரப் புணர்ப்பென்பாரும்
பல்வேறுசமையப் படிற்றுரையெல்லா
மல்லியங்கோதை கேட்குறுமஞ்ஞான்
றிறைவனுமில்லை யிறந்தோர்பிறவா
ரறனேவன்னையென் றறைந்தோன்றன்னைப்
பிறவியுமறவியும் பெற்றியினுணர்ந்த

நறுமலர்க்கோதை யெள்ளினைநகுதி
யெள்ளினைபோலுமென் னுயிரோகேட்டிங்
கொள்ளியதுரையென வுன்பிறப்புணர்குவை
யாங்குநிற்கொணர்ந்த வருந்தெய்வமயக்கக்
காம்பிணைத்தோளி கனாமயக்குற்றனை
யென்றவனுரைக்கு மிளங்கொடிநல்லா
யன்றனன்முன்னையர் தொழிவாயல்லை
தீவினையுறுதலுஞ் செத்தோர்பிறத்தலும்
வாயேயென்று மயக்கொழிமடவாய்
வழுவறுமானு மண்ணுங்கல்லு
மெழுதியயாவையும் பேசாதென்ப
சறிதலுமறிதியோ வறியாய்கொல்லோ
வறியாயாயி னிங்கதுகேளாய்
முடித்துவருசிறப்பின் மூதூர்யாங்கணுங்
கொடித்தேர்வீதியுந் தேவர்கோட்டமு
முதுமரவிடங்களு முதுநீர்த்துறைகளும்
பொதியிலுமன்றமும் பொருந்துபுநாடிக்
காப்புடைமாநகர்க் காவலுங்கண்ணி
யாப்புடைத்தாக வறிந்தோரியற்றிய
மண்ணினுங்கல்லினு மரத்தினுஞ்சுவரினுங்
கண்ணியவுருவங் காட்டுநர்வகுக்க
வாங்கத்தெய்வத மவ்விடநீங்கா
வூன்கண்ணினர்கட் குற்றதையுரைக்கு
மென்றிறங்கேட்டியோ விளங்கொடிநல்லாய்
மன்பெருந்தெய்வ கணங்களினுள்ளேன்
றுன்பேயின்றே றுமுதிர்கந்தின்
மயனெனக்கொப்ப வகுத்தபாவையை
நீங்கேன்யானு நிலையதுகேளாய்
மாந்தரறிவது வானவரறியா
ரோவியச்சேன னுறுதுணைத்தோழ
னவ்வைதயிந்நகர்க் காருரைத்தனரோ
வவனுடன்யான்சென் றுடிடமெல்லா
முடனுறைந்தார்போ லொழியாதேற்றிய
பூவும்புகையும் பொருந்துபுகொணர்ந்து
நாநணிவருந்தவே நலம்பாராட்டலின்
மணிமேகலைக்கு வருபொருளெல்லாந்
துணிவுடனுரைத்தே னெனச்சொற்றேனெனத்

தேறேனல்லேன் றெய்வக்கிளவிக
ளீறுயிர் கடைகொ ளெனக்குரையென்றலுங்
துவதிசனுரைக்குஞ் சொல்லுஞ்சொற்சொல்லுவன்
வருவதுகேளாய் மடக்கொடிநல்லாய்
மன்னுயிர்நீங்க மழைவளங்கரந்து
பொன்னெயிற்காஞ்சி நாடுகவினழிய
வாங்கதுகேட்டே யாருயிர்மருந்தா
மீங்கிம்முதியா ளிடைவயின்வைத்த
தெய்வப்பாத்திரஞ் செவ்விதின்வாங்கித்
தையனிற்பயந்தோர் தம்மொடுபோகி
யறவணன்றானு மாங்குளனதலிற்
செறிதொடிகாஞ்சி மாநகர்சேர்குவை
யறவணனருள வாய்தொடிக்கவ்வூ
ரறனொடுதோன்று
மேதுநிகழ்ச்சி யாதும்பலவுள
பிறவறமுரைத்தோர் பெற்றிமையெல்லா
மறவணன்றனக்கு நீயுரைத்தவநா
டவமுந்தருமமுஞ் சாற்பிற்றேற்றமும்
பவமறுமாக்கமும் பான்மையினுரைத்தவன்
மறவிருளிரிய மன்னுயிரேமுற
வறவெயில்விரித்தாங் களப்பிலருத்தியொடு
புத்தஞாயிறு தோன்றுங்காறுஞ்
செத்தும்பிறந்துஞ் செம்பொருள்காவா
வித்திறநீங்கே னிளங்கொடியானுந்
தாயருநீயுந் தவறின்றாக
வாய்வதாகவென் மனப்பாட்டறமென
வாங்கவனுரைத்தலு மவன்மொழிபிழையாய்
வாங்கியநல்லறம் பலவுஞ்செய்தபின்
காஞ்சிமுற்றத்து நின்னுயிர்கடைகொள
வுத்தமருறுமத் ததுவல்லகத்
துன்பிறப்பெல்லா மாண்பிறப்பாகி
யருளறமொழியாய் மனமொடுதோன்றி
மருண்மறயாவும் வயக்கமின்றிப்
பிறர்க்கறமொழியும் பெரியோன்றனக்குத்
தலைச்சாவகனாய்ச் சார்வறுத்துயர்தி
யின்னுங்கேட்டியோ நன்னுதன்மடந்தை
பூங்கணோங்கிய வுரவோன்றன்னை

வாங்குதலையெடுத்த மணிமேகலாதெய்வ
மஞ்சாதுசக்கரற் காரமுதீந்த
நீதுநின்பிறப் பென்பதுதெளிந்தே
யுவவனமருங்கி னின்பாற்றோன்றி
மணிப்பல்லவத்திடைக் கொணர்ந்ததுகேளெனத்
துவதிகனுரைத்தலுந் துயர்க்கடனீங்கிய
விதிபதறிந்த வணியிழைநல்லாள்
வலையொழிமஞ்ஞையின் மனமயக்கொழிதலு
முலகுதுயிலெழுப்பினன் மலர்கதிரோனென.

கந்திற்பாவைவருவதுரைத்தகாதை முற்றிற்று.

---

## இருபத்திரண்டாவது
# சிறைசெய்தகாதை.

கடவுண்மண்டிலங் காரிருள்சீப்ப
நெடுநிலைக்கந்தி னின்றபாவையொடு
முதியோள்கோட்டம் வழிபடல்புரிந்தோ
ருதயகுமரற் குற்றதையுரைப்பச்
சாதுயர்கேட்டுச் சக்கரவாளத்து
மாதவரொல்லா மணிமேகலையை
யிளங்கொடியறிவது முண்டோவிதுவெனத்
துளங்காதாங்கவளுற் றதையுரைத்தலு
மாங்கவடன்னை யாருயிர்நீங்கிய
வேந்தன்சிறுவனொடு வேறிடத்தொளித்து
மாபெருங்கோயில் வாயிலுக்கிசைத்துக்
கோயின்மன்னனைக் குறுகினர்சென்றீங்
குயர்ந்தோங்குச்சி யுவாமதிபோல
நிவந்தோங்குவெண்குடை மன்னகநிழற்செய்க
வேலுங்கோலு மருட்கண்ணகலா
தீதின்றுருள்கநீ யேந்தியதிகிரி
நினக்கெனவரைந்த வாண்டுகளெல்லா
மனக்கினிதாக வாழியவேந்தே
யின்றேயல்ல விப்பதிமருங்கிற்
கன்றியகாமக் கள்ளாட்டயர்ந்த
பத்தினிப்பெண்டிர் பாற்சென்றணுகியு
நற்றவப்பெண்டிர் பின்னும்போக்க

ணையுருப்பவுயி ரீறுசெய்தோர்
பாராள்வேந்தே பண்டும்பலரால்
மன்மருங்கறுத்த மழுவாணெடியோன்
றன்முன்றோன்ற றகாதொழிநீயெனக்
கன்னியேவலிற் காந்தமன்னவ
னின்னகர்காப்போர் யாரெனநினைஇக்
காவலந்தண்பொழி னண்ணார்நடுக்குறக்
காவற்கணிகை தனக்காங்காதல
னிகந்தோர்க்காயினு மெஞ்சுதலில்லோன்
ககந்தனுமெனக் காதலிற்கூஉ
யரசாளுரிமை நின்பாலின்மையிற்
பரசுராமனின் பால்வந்தணையான்
மாரமுனிவ னகத்தியன்றனாது
துயர்நீங்குகிளவியின் யான்வருகாறுங்
கந்தற்காத்தற் காகந்தியென்றே
யியைந்தநாம மிப்பதிக்கிட்டீங்
குளவரிக்கொண்ட வுரவோன்பெயர்நா
டெள்ளுநீர்க்காவிரி யாடினள்வரூஉம்
பார்ப்பினிமருதியைப் பாங்கோரின்மையி
னியாப்பறையென்றே யெள்ளினனுகிக்
காவிரிவாயிற் கந்தன்சிறுவ
னீவாவென்ன நேரிழைகலங்கி
மண்டிணிஞாலத்து மழைவளந்தரூஉம்
பெண்டிராயிற் பிறர்நெஞ்சுபுகார்
புக்கேன்பிறனுளம் புரிநூன்மார்பன்
முத்தீப்பேணு முறையெனக்கில்லேன்
மாதுயரொவ்வமொடு மனையகம்புகாஅள்
பூதசதுக்கம் புக்கனண்மயங்கிக்
கொண்டோர்ப்பிழைத்த குற்றம் யானிலென்
கண்டோர்நெஞ்சங் காப்பெளிதாயினென்
வான்றருகற்பின் மனையறம்பட்டேன்
யான்செய்குற்றம் யானறிகல்லேன்
போயினைகொல்லோ பூதசதுக்கத்துத்
தெய்வநீயெனச் சேயிழையரற்றலு
மாபெருந்தெய்வந் தோன்றிமடக்கொடி
நீகேளென்றே நேரிழைக்குரைக்குந்
*தெய்வந்தொழாஅள் கொழுநற்றொழுமவள்

*திருக்குறள் செ - ௫௫.

பெய்யெனப்பெய்யும் பெருமழையென்றவப்
பொய்யில்புலவன் பொருளுரைதேறாய்
பிசியுநொடியும் பிறர்வாய்க்கேட்டும்
விசிபிணிமுழவின் விழாக்கோள்விரும்பியுங்
கடவுட்பேணல் கடவியையாகலின்
மடவரலேவ மழையும்பெய்யாது
நிறையுடைப்பெண்டிரகமேபோலப்
பிறர்நெஞ்சுசுடூஉம் பெற்றியுமில்லை
யாங்கவையொழிகுவை யாயினுயிழை
யோங்கிருவானத்து மழையுநின்மொழியது
பெட்டாங்கொழுகும் பெண்டிரைப்போலக்
கட்டாதுன்னையென் கடுந்தொழிற்பாச
மன்முறையெழுநாள் வைத்தவன்வரூஉம்
பின்முறையல்ல தென்முறையில்லை
யீங்கெழுநாளி லிளங்கொடிநின்பால்
வாங்காநெஞ்சின் மயரியைவாளாற்
கந்தன்கேட்டுக் கடிதலுமுண்டென
விகந்தபூத மெடுத்துரைசெய்ததப்
பூதமுரைத்தநா ளாலாங்கவன்
றுலைதவாளாற் றடியவும்பட்டனன்
இன்னுங்கேளா யிருங்கடலுடுத்த
மண்ணாள்செல்வத்து மன்னவரோடே
தருமதத்தனுந் தன்மாமன்மகள்
பெருமதர்மழைக்கண் விசாகையும்பேணித்
தெய்வங்காட்டுந் திப்பியவோவியக்
கைவினைகடந்த கண்கவர்வனப்பினன்
மைத்துனமுறைமையா யாழோர்மணவினைக்
கொத்தனனென்றே யூர்முழுதலரெழப்
புனையாவோவியம் புறம்போந்தென்ன
மனையகநீங்கி வாணுதல்விசாகை
யுலகவறவியி னூடுவந்தேறி
யிலகொளிக்கந்தி னெழுதியபாவா
யுலவாப்பெரும்பழி பாயநீயென
மாநகருள்ளீர் மழைதருமிவளென
நாவுடைப்பாவை நங்கையையேத்தலுந்
தெய்வங்காட்டித் தெளித்திலேனாயின்
மையலூரோ மனமாசொழியாது

மைத்துனன்மனையாள் மறுபிறப்பாகுவ
ளிப்பிறப்பிவளொடுங் கூடேனென்றே
நற்றாய்தனக்கு நற்றிறஞ்சாற்றி
மற்றவள்கன்னி மாதத்தடைந்தபின்
தருமதத்தனுந் தாதையுந்தாயரும்
பெருநகர்தன்னைப் பிறகிட்டேகித்
தாழ்தருதுன்பந் தலையெடுத்தாயென
நாவுடைப்பாவையை நலம்பலவேத்தி
மிக்கோருறையும் விழுப்பெருஞ்செல்வத்துத்
தக்கணமதுரை தான்சென்றடைந்தபின்
தருமதத்தன் றன்மாமன்மகள்
விரிதருபூங்குழல் விசாகையையல்லது
பெண்டிராப்பேணிப் பிறப்பொழிகென்னக்
கொண்டவிரதந் தன்னுட்கூறி
வாணிகமரபின் வருபொருளீட்டி
நீணிதிச்செல்வனாய் நீணிலவேந்தனி
னெட்டிப்பழுப்புற் றிருமுப்பதிற்றியாண்
டொட்டியசெலக்கோ ளாயினந்நா
ளொருவன்சென்றீங் கென்செய்தனையோ
விருநிதிச் செல்வப்பத
மில்லார்பலவறஞ் செய்யினும்
புத்தேளுலகம் புகாஅரென்பது
கேட்டுமறிதியோ கேட்டனையாயி
னீட்டித்திராது நின்னகரடைகெனத்
தக்கணமதுரை தான்வறிதாக
விப்பதிபுகுந்தன னிருநிலவேந்தே
மற்றவனிவ்வூர் வந்தமைகேட்டுப்
பொற்றொடிவிசாகையு மனைப்புறம்போந்து
நல்லாணாணாள் பல்லோர்நாப்ப
ணல்லவைகடிந்த வவன்பாற்சென்று
நம்மூருமறிந்தில நம்மைமுன்னைநாண்
மம்மர்செய்த வனப்பியாங்கொளித்த
தாறைந்திரட்டி யாண்டுநென்காயதே
ளுறைங்கூந்தலு நரைவிராயுற்றன
விளமையுங்காமமும் யாங்குருத்தனவோ
வுளவில்லாத வெனக்கீங்குறையா
யிப்பிறப்பியாமினி யானின்னையனையே

னப்பிறப்பியானின் னடித்தொழில்கேட்குவ
விளைமையுநில்லா யாக்கையுநில்லா
வளவியவான்பெருஞ் செல்வமுநில்லா
புத்தேளுலகம் புதல்வருந்தாரார்
மிக்கவறனே விழுத்துணையாவது
தானஞ்செய்யெனத் தருமதத்தனு
மாமன்மகள்போல் வான்பொருள்காட்டி
யாங்கவனவளுடன் செய்தநல்லற
ஞேங்கிருவானத்து மீனினும்பலவாற்
குமரிமூத்தவக் கொடுங்குழைநல்லா
ளமரனருளா லன்னகிரிமேப்
படுபழிநீங்கிப் பல்லோர்நாப்பட்
கொடிமிடைவீதியின் வருவாள்குழன்மேல்
மருதிபொருட்டான் மடிந்தோயமுன்ன
ருருகியநெஞ்சினங் காமங்காற்கொளச்
சுரியிரும்பித்தை சூழ்ந்துபுறந்தாழ்ந்த
விரிபூமாலை விரும்பினன்வாங்கிக்
கொல்வோர்கூறிய மணந்தாமென்ன
மெல்லவிழ்தாரோ னிடுவான்வேண்டி
மாலைவாங்கச் செங்கைநீலக்
குஞ்சிநீங்கா தாகலினேறிய
செங்கை யிழிந்திலதிருத்தகு
காரிகைபொருட் டெனக்கவ
ருரைத்தன ரதைக்கேட்டுக்
கடுஞ்சினந்திருகி மகன்றுயர்சேர
னோக்கான் வாளாலெறிந்தன
னூழிதோறூழி யுலகங்காத்து
வாழியவெங்கோ மன்னவவென்று
மாதவர்தம்முளோர் மாதவன்கூறலும்
வீயாவிழுச்சீர் வேந்தன்கேட்டன
னின்றேயல்ல வென்றெடுத்துரைத்து
நன்றறிமாதவர் நலம்பலகாட்டின
ரின்றுமுளதோ விவ்வினையுரையென
வென்றிநெடுவேல் வேந்தன்கேட்பத்
தீதன்றாக செங்கோல்வேந்தென
மற்றவர்தம்முளோர் மாதவனுரைக்கு
முடிபொருளுணர்ந்தோர் முதுநீருலகிற்

கடியப்பட்டன வைந்துளவற்றிற்
கள்ளும்பொய்யுங் களவுங்கொலையுந்
தள்ளாதாக்குங் காமந்தன்போலாங்
கடிந்தோ ரல்லவைகடிந்தோரால்
நீங்கினரன்றே நிறைதவமாக்கள்
நீங்காரன்றே நீணிலவேந்தே
தாங்காநாகந் தன்னிடையுழப்போர்
சேயரிநெடுங்கட் சித்திராபதிமகள்
காதலனுற்ற கடுந்துயர்பொறாஅள்
மாதவிமாதவர் பள்ளியுளடைதலு
மற்றவள்பெற்ற மணிமேகலைதான்
முற்றாமுலையினள் முதிராக்கிளவியள்
செய்குன்றமென்னச் சிற்றிலும்பேரிலு
மையங்கொண்டுண் டம்பலமடைந்தன
ளாங்கவளவ்வியல் பினளேயாயினு
நீங்கானவளை நிழல்போல்யாங்களுங்
காரிகைபொருட்டாற் காமங்காழ்க்கொள
வாரிருளஞ்சா னம்பலமடைதலுங்
காயசண்டிகைவடி வாயினள்காரிகை
காயசண்டிகைதன் கணவனாகிய
மாயவள்விஞ்சைய னொருவன்றோன்றி
யீங்கிவள்பொருட்டால் வந்தனிவனென
வாங்கவன்றீவினை யுருத்ததாகலின்
மதிமருணெடுங்குடை மன்னநின்மக
னுதயகுமர னொழியானாக
வாங்கவடன்னை யம்பலத்தேற்றி
யேங்கிருள்யாமத் திவளையாங்குய்த்துக்
காயசண்டிகைதன் கணவனாகிய
மாயவள்விஞ்சையன் றன்னையுங்கூஉய்
விஞ்சையன்மகள்பா லிவன்வந்தானென
வஞ்சவிஞ்சையன் மனத்தையுங்கலக்கி
யாங்கவன்றன்கை வாளாலம்பலத்
தீங்கிவன்றன்னை யெறிந்ததன்றேத்தி
மாதவர்தம்முளோர் மாதவனுரைத்தலு
நெஞ்சொழிகவென் றிதன்முகநோக்கி
யாஞ்செயற்பால திளங்கோன்றன்னைத்
தான்செய்ததனாற் றகவிலன்விஞ்சையன்

*மாதவர்நோன்பும் மடவார்கற்புங்
காவலன்காவலின் றெனினின்றாம்
மகனைமுறைசெய்த மன்னவன்வழியோர்
துயர்வினையாளன் றோன்றினனென்பது
வேந்தர்தஞ்செவி யுறுவதன்முன்ன
மீங்கிவன்றன்னையு மீமத்தேற்றிக்
கணிகைமகளையுங் காவல்செய்கென்றன
னணிகிளர்நெடுமுடி யரசாள்வேந்தென.

சிறைசெய்தகாதை முற்றிற்று.

---

## இருபத்துமூன்றாவது
## சிறைவிடுகாதை.

மன்னவனருளால் வாசந்தவையெனு
நன்னெடுங்கூந்த னரைமூதாட்டி
யரசர்க்காயினுங் குமரர்க்காயினுந்
திருநிலக்கிழமைத் தேவியர்க்காயினுங்
கட்டுரைவிரித்துக் கற்றவைபகர்ந்து
பட்டவைதுடைக்கும் பயங்கெழுமொழியி
னிலங்கரிநெடுங்க ணிராசமாதேவி
கலங்கஞரொழியக் கடிதுசென்றெய்தி
யழுதடிவீழா தாயிழைதன்னைத்
தொழுதுமுன்னின்று தோன்றவாழ்த்திக்
கொற்றங்கொண்டு குடிப்புறங்காத்துச்
செற்றதெவ்வர்தே யந்தமதாக்கியுந்
தருப்பையிற்கிடத்தி வாளினிற்போழ்ந்து
செருப்புகன்மன்னர் செல்வுழிச்செல்கென
மூத்துவிளிதலிக் குடிப்பிறந்தோர்க்கு
நாப்புடைபெயராது நாணுத்தகவுடைத்தெனத்
தன்மண்காத்தன்று பிறர்மண்கொண்டன்
றென்னெனப்படுமோ நின்மகன்மடிந்தது
மன்பதைகாக்கு மன்னவன்றன்முன்

---

* இதனை 'அந்தணர்நூற்கும்' என்னுந் திருக்குறளில்
“மாதவநோன்புமடவார்கற்புங்
காவலன்காவலின்றித்தங்கா” எனப் பாடங்கொண்டார்
பரிமேலழகரும்.

றுன்பங்கொள்ளே லென்றவள்போயபின்
கையறவள்ளங் கரந்தகத்தடக்கிப்
பொய்யாற்றொழுக்கங் கொண்டுபுறமறைத்து
வஞ்சஞ்செய்குவன் மணிமேகலையையென்
றஞ்சிலோதி யரசனுக்கொருநாள்
பிறர்பின்செல்லாப் பிணிக்கோலத்தி
னறிவுதிரிந்தோ னரசியறுனிலன்
கருப்புடைத்தடக்கைக் காமன்கையற
வரும்பெறலறிவு பெரும்பிறிதாக்கு
மறிவுதலைப்பட்ட தாயிழைதனக்குச்
சிறைக்கன்றுசெங்கோல் வேந்தெனச்சிறப்பின்
பாலார்மக்க ளல்லார்மறப்பன
பாலார்மன்னர்க் கென்பதறிந்தனை
யாயினீண்டவ் வாயிழைதன்னைச்
செறிந்தசிறைநோய் தீர்க்கென்றிறைசொல
வென்னோடிருப்பினு மிருக்கவிவ்விளங்கொடி
தன்னோடிருப்பினுந் தகைக்குநரில்லென்
றங்கவடன்னைக் கூஉயவடன்னொடு
கொங்கவிழ்குழலாள் கோயிலுட்புக்காங்
கறிவுதிரித்தலுறு கணிதமொல்லா
மெறிதருகோலம்யான் செய்குவலென்றே
மயற்பகையூட்டி மறுபிறப்புணர்ந்தா
ளயர்ப்பதுசெய்யா வறிவினளாகக்
கல்லாவிளைஞ ரொருவனைக்கூஉய்
வல்லாங்குச்செய்து மணிமேகலைதன்
இழைவளரிளமுலை யேந்தெழிலாகத்துப்
புணர்குறச்செய்து பொருந்தினளென்னும்
பான்மைக்கட்டுரை பலர்க்குரையென்றே
காணம்பலவுங் கைந்நிறைகொடுப்ப
வாங்கவன்சென்ற வாயிழையிருப்பக்
காணப்பெற்றேன் கடுந்துயரெய்தி
யரசருரிமை யாடவரணுகார்
நிலையக்கொடுமகள் நினைப்பறியேனென்
றகனகர்கைவிட் டாங்கவன்போக
மகனைநோய்செய்தாள் வைப்பதென்னென்
றுய்யாநோயினு ளொழிந்தனளெனப்
பொய்ந்நோய்காட்டிப் புழுக்கறையடைப்ப

லூணொழிமந்திர முடைமையினந்த
வானுறுதன்மேனி வருந்தாதிருப்ப
வையெனவிம்மி யாயிழைநடுங்கிச்
செய்தவத்தாட்டியைச் சிறுமைசெய்தே
னென்மகற்குற்ற விடுக்கண்பொறாது
பொன்னேரனையாய் பொறுக்கென்றவடொழ
நீலபதிதன் வயிற்றிற்றோன்றி
யேலங்கமழ்தா ரிராகுலன்றன்னை
யழற்கணாக மாருயிர்கொள்ள
விழுத்தலாற்றே னென்னுயிர்சுடுநா
ளாங்கிருந்தழுதனை யிளங்கோன்றனக்குப்
பூங்கொடிநல்லாய் நீயென்செய்தனை
யுடற்கழுதனையோ வுயிர்க்கழுதனையோ
யுடற்கழுதனையே யுன்மகன்றன்னை
யெடுத்துப்புறங்காட் டிட்டனர்யாரே
யுயிர்க்கழுதனையே யுயிர்புகும்புக்கில்
செயப்பாட்டுவினையாற் றெரிந்துணர்வரிய
வவ்வுயிர்க்கன்பினை யாயினைகொடியே
யெவ்வுயிர்க்காயினு மிரங்கல்வேண்டு
மற்றுன்மகனை மாபெருந்தேவி
செற்றகள்வன் செய்ததுகேளாய்
மடைக்கலஞ்சிதைய வீழ்ந்தமடையனை
யுடற்றுணிசெய்தாங் குருத்தெழுமவ்வினை
நஞ்சுவிழியரவி னல்லுயிர்வாங்கி
விஞ்சையன்வாள்வாய் வீட்டியதன்றே
யாங்கதினைந்தனையோ வீங்கிதுநீயெனிற்
பூங்கொடிநல்லாய் புகுந்ததிதுவென
மொய்ம்மலர்ப்பூம்பொழில் புக்கதுமுதலாத்
தெய்வக்கட்டுரை தெளிந்ததற்று
ணுற்றதையெல்லா மொழிவின்றுரைத்து
மற்றதுமுறைசெய் மணிமேகலைதான்
மயற்பகையூட்டினை மறுப்பிறப்புணர்ந்தே
னயர்ப்பதுசெய்யா வறிவினேனாயினேன்
கல்லாக்கயவன் காரிருட்டானவர்
நல்லாயானுரு நான்கொண்டிருந்தே
னூணொழிமந்திர முடைமையினன்றே
மாணிழைசெய்த வஞ்சம்பிழைத்தத
தந்திரஞ்சேறலு மயலுருக்கோடலுஞ்

றையாகின்றன் றடுமாற்றவலத்
தெய்யாமையறிந் தின்னுரைகேளாய்
ஆள்பவர்கலக்குற மயங்கியநன்னாட்டுக்
காருகமடந்தை கணவன்கைவிட
வீன்றகுழவியொடு தான்வேறாகி
மான்றோர்திசைபோய் வரையாவாழ்வுழிப்
புதல்வன்றன்னையோர் புரிநூன்மார்பன்
பதியோரறியாப் பான்மையின்வளர்க்க
வாங்கப்புதல்வ னவடிறமறியான்
றான்புணர்ந்தறிந்தபின் றன்னுயிர்நீத்து
நீர்நசைவேட்கையி னெடுங்கடமுழலுஞ்
சூன்முதிர்மடமான் வயிறுகிழித்தோடக்
கானவேட்டுவன் கடுங்கணைதுரப்ப
மான்மறிவிழுந்தது கண்டுமனமயங்கி
மயில்குரல்கேட்டதன் பான்மையனாகி
யுயிர்ப்பொடுசெங்க ணுகுத்தநீராட்டி
யெய்தோனுருயிர் துறந்ததுங்கேட்டு
மறிதியோவாட்டடங் கண்ணி
கடாஅயானைமுன் கட்காமுற்றோன்
விடாஅதுசென்றதன் வெண்கோட்டுவீழ்வ
துண்டதுகள்ளி னுறுசெருக்காவது
கண்டுமறிதியோ காரிகைநல்லாய்
பொய்யாற்றொழுக்கம் பொருளெனக்கொண்டோர்
கையாற்றவலங் கடந்ததுமுண்டோ
களவேய்வாழ்க்கைய ருறூஉங்கடுந்துய
ரிளவேய்த்தோளாய்க் கிதுவெனவேண்டா
மன்பேருலகத்து வாழ்வோர்க்கிங்கிவை
துன்பந்தருவன துறக்கல்வேண்டுங்
கற்றகல்வி யின்றாற்காரிகை
செற்றஞ்செறுத்தோர் முற்றவுணர்ந்தோர்
மல்லன்மாஞாலத்து வாழ்வோரென்போ
ரல்லன்மாக்கட் கில்லது நிரப்புநர்
இருந்தேசெல்வனா செல்லுலகறிந்தோ
ரருந்திவந்தோ ரரும்பசிகளைந்தோர்
மன்பதைக்கெல்லா மன்பொழியாரென
ஞானநன்னீர் நன்கனந்தெளித்துத்

தேனுரோதி செவிமுதல்வார்த்து
மகன்றுயர்நெருப்பா மனம்விறகாக
வகஞ்சுடுதவவெந்தீயாயிழையவிப்பத்
தேறுபடுசின்னீர் போலத்தெளிந்து
மாறுகொண்டோர் மனத்தளாகி
யாங்கவடொழுதலு மாயிழைபொரூஅ
டான்றொழுதெழுந்து தகுதிசெய்திலை
காதலற்பயந்தோ யன்றியுங்காவன்
மாபெருந்தேவியென் றெதிர்வணங்கினளென.

சிறைவிடுகாதை முற்றிற்று.

---

## இருபத்துநான்காவது
## ஆபுத்திரநாடடைந்தகாதை.

---

மன்னகுமரனை வஞ்சம்புணர்த்த
தொன்முதுக்கணிகைதன் சூழ்ச்சியிற்போயவன்
விஞ்சையன்வாளால் விளிந்தோனென்பது
நெஞ்சுசுடுக்குறக் கேட்டுமெய்வருந்தி
மாதவிமகடனை வான்சிறைதவிர்த்த
காவலன்றேவி காற்கீழ்வீழ்ந்தாங்
கரவேரல்கு லருந்தவமடவா
ருரவோர்க்களித்த வொருபத்தொருவரு
மாயிரங்கண்ணோ னவிநயம்வழுக்கொள
மாயிருஞாலத்துத் தோன்றியவைவரு
மாங்கவன்புதல்வனோ டருந்தவன்முனிந்த
வோங்கியசிறப் பினூ ருற்றுநால்வருந்
திருக்கிளர்மணிமுடித் தேவர்கோன்றன்மு
னுருப்பசிமுனிந்த வென்குலத்தொருத்தியு
மொன்றுகடையிட்ட வாறிருபதின்மரிற்
றொன்றுபடுமாநகர்த் தோன்றியநாண்முதல்
யானுறுதுன்ப மியாவரும்பட்டிலர்
மாபெருந்தேவி மாதவராயினும்
பூவிலையீத்தவன் பொன்றினனென்று
மாதவிமாதவர் பள்ளியுளடைதலும்
பரந்துபடுமனைதொறும் பாத்திரமேந்தி

யாங்கக்கூத்திசென் றையங்கொண்டது
நகுவதல்லது நாடகக்கணிகையர்
தகுதியென்னார் தன்மையன்மையின்
மன்னவன்மகனே யன்றியுமாதரா
விந்நகருறாஉ மிடுக்கணுமுண்டா
னும்பனந்தழீஇ யுயர்மணநெடுங்கோட்டுப்
பொங்குதிரையுலவும் புன்னையங்கானற்
கிளர்மணிநெடுமுடிக் கிள்ளிமுன்னா
ளிளவேனிலிறுப்ப விறும்பூதுசான்ற
பூநாறுசோலை யாருமிலொருசிறைத்
தானேதமிய ளொருத்திதோன்ற
வின்னளார்கொ லீங்கிவளென்று
மன்னவனறியான் மயக்கமெய்தக்
கண்டகண்ணினுங் கேட்டசெவியினு
முண்டவாயினு முயிர்த்தமூக்கினு
முற்றுணருடம்பினும் வெற்றிச்சிலைக்காமன்
மயிலையுஞ்செயலையு மாவுங்குவளையும்
பயிலிதழ்க்கமலமும் பருவத்தலர்ந்த
மலர்வாயம்பின் வாசங்கமழப்
பலர்புறங்கண்டோன் பணிந்துதொழில்கேட்ப
வொருமதியெல்லை கழிப்பினுமுரையாள்
பொருவரும்பூங்கொடி போயினவந்நாள்
யாங்கொளித்தனளவ ளிளங்கொடியென்றே
வேந்தரைப்பட்டோன் மெல்லியற்றேர்வுழி
நிலத்திற்குழித்து நெடுவிசும்பேறிச்
சலத்திற்றிரியுமோர் சாரணன்றோன்ற
மன்னவனவனை வணங்கிமுன்சென்
றென்னுயிரனையா ளிங்கொளித்தாளுள
ளன்னளொருத்தியைக் காணிரோவடிகேள்
சொல்லுமினென்று தொழவவனுரைப்பான்
கண்டிலனாயினுங் காரிகைதன்னைப்
பண்டறிவுடையேன் பார்த்திவகேளாய்
நாகநாடு நடுக்கின்றாள்பவன்
வாகைவேலோன் வளைவணன்றேவி
வாசமயிலை வயிற்றுட்டோன்றிய
பீலிவளையென்பாள் பிறந்தவந்நா

ளிவர்குலத்தொருவ னிணைமுலைதோயக்
கருவொடுவருமெனக் கணியெடுத்துரைத்தன
ருங்கப்புதல்வன் வரூஉமல்லது
பூங்கொடிவாராள் புலம்பலிதுகேட்
டவதுசாந்தி செய்யாநாளுன்
காவன்மாநகர் கடல்வயிறுபுகூஉ
மணிமேகலைதன் வாய்மொழியல்லது
தணியாதிந்திர சாபமுண்டாகலி
னுங்குப்பதியழிதலு மீங்குப்பதிகெடுதலும்
வேந்தரையட்டோய் மெய்யெனக்கொண்டிக்
காசின்மாநகர் கடல்வயிறுபுகாமல்
வாசவன்விழாக்கோள் மறவேலென்று
மாதவனுரைத்த வந்நாடொட்டுமிக்
காவன்மாநகர் கலக்கொழியாதாற்
றன்பெயர்மடந்தை துயருறுமாயின்
மன்பெருந்தெய்வம் வருதலுமுண்டென
வஞ்சினனரசன் றேவியென்றேத்தி
நன்மனம்பிறந்த நாடகக்கணிகையை
யென்மனைத்தருகென விராசமாதேவி
கள்ளும்பொய்யுங் காமமுங்கொலையு
முள்ளக்களவுமென் றுரவோர்த்துறந்தவை
தலைமையாக் கொண்டநின் றலைமையில்வாழ்க்கை
புல்மையென்றஞ்சிப் போந்தபூங்கொடிநிற்
போந்துநின்மனைபுகுதாளென்றே
டிருக்குமென்றேயீங்கிவைசொல்வுழி
மணிமேகலைத்திற மாதவிகேட்டுத்
துணிகயந்துகள்படத் துளங்கியவதுபோற்
றெளியாச்சிந்தையள் சுதமதிக்குரைத்து
வளியெறிகொம்பின் வருந்திமெய்ந்நடுங்கி
யறவணனடிவீழ்ந் தாங்கவர்தம்முடன்
மறவேன்மன்னவன் றேவிதன்பால்வரத்
தேவியுமாயமுஞ் சித்திராபதியு
மாதவிமகளு மாதவர்க்காண்டலு
மெழுந்தெதிர்சென்றாங் கிணைவளைக்கையாற்
றொழுந்தகைமாதவன் றுணையடிவணங்க

வறிவுண்டாகவென் றுங்கவன்கூறலு
மிணைவளைநல்லா ளிராசமாதேவி
யருந்தவர்க்கமைந்த வாசனங்காட்டித்
திருந்தடிவிளக்கிச் சிறப்புச்செய்தபின்
யாண்டுபலபுக்கநும் மிணையடிவருந்தக்
காண்டகுநல்வினை நும்மையீங்கழைத்தது
நாத்தொலைவில்லை யாயினுந்தளர்ந்து
மூத்தயாக்கை வாழ்க்கைபல்லாண்டெனத்
தேவிகேளாய் செய்தவயாக்கையின்
மேவினையாயினும் வீழ்கதிர்போல்வேன்
பிறந்தார் மூத்தார்பிணிநோயுற்றார்
இறந்தாரென்கை யியல்பேயிதுகேடப்
பேதைமைசெய்கை யுணர்வேயருவுரு
வாயிலூறே நுகர்வேவேட்கை
பற்றேபவமே தோற்றம்வினைப்பய
னிற்றெனவகுத்த வவ்வீராறும்
பிறந்தாரறியிற் பெரும்பேறறிகுவ
ரறியாராயி னாழ்நரகடைவர்
பேதைமையென்ப தியாதெனவினவி
னோதியவிற்றை யுணராதுமயங்கி
யியற்படுபொருளாற் கண்டதுமறிந்து
முயற்கோடுண்டெனக் கேட்டதுதெளித
லுலகமூன்றினு முயராகுலம
தலகில்பல்லுயி ரறுவகைத்தாகி
மக்களுந்தேவரும் பிரமருநாகருந்
தொக்கவிலங்கும் பேயுமன்றே
நல்வினைதீவினை யென்றிருபயத்தாற்
சொல்லப்பட்ட பிறப்பினுட்டோன்றி
வினைப்பயன்விளையுங் காலையுயிர்கட்கு
மனப்பேரின்பமுங் கவலையுங்காட்டுந்
தீவினையென்ப தியாதெனவினவி
னாய்தொடிநல்லா யாங்கதுகேளாய்
கொலையேகளவே காமத்தீவினை
யுலையாதுடம்பிற் றோன்றுவமூன்றும்
பொய்யேகுறளை கடுஞ்சொல்பயனில்
சொல்லேசொல்லிற் றோன்றுவநான்கும்
வெஃகல்வெகுளல் பொல்லாக்காட்சி

யென்றாளந்தணி னுருப்பனமூன்றுமெனப்
பத்துவகையாற் பயன்றெரிபுலவ
ரித்திறம்படார் படர்குவராயின்
விலங்கும்பேயும் நரகருமாகிக்
கலங்கியவுள்ளக் கவலையிற்றோன்றுவர்
நல்வினையென்பது யாதெனவினவிற்
சொல்லியபத்தின் றொகுதியினீங்கிச்
சீலந்தாங்கித் தானந்தலைநின்று
மேலெனவகுத்த வொருமூன்றுதிறத்துத்
தேவருமக்களும் பிரமருமாகி
மேவியமகிழ்ச்சி வினைப்பயனுகர்குவர்
அரசன்றேவியொ டாயிழைநல்லீர்
புரைதீர்நல்வினை போற்றிக்கேண்மின்
மறுபிறப்புணர்ந்த மணிமேகலைநீ
பிறவறங்கேட்ட பின்னாளவர்தனக்
கித்திறம்பலவு மிவற்றின்பகுதியு
முத்தேர்நகையாய் முன்னர்க்கூறுவ
லென்றவனெழுதலு மிணங்கொடியெழுந்து
நன்றறிமாதவ னல்லடிவணங்கித்
தேவியுமாயமுஞ் சித்திராபதியு
மாதவன்மொழி மறவாதெம்மி
னிந்நகர்மருங்கின்யா னுறைவேனாயின்
மன்னவன்மகற்கிவள் கூற்றெனவுரைகுவ
ராபுத்திரனா டடைந்தபின்னவன்
மாசிலாமணிப் பல்லவந்தொழுதே
வஞ்சியுட்புக்கு மாபத்தினிதனக்
கெஞ்சாநல்லறம் யாங்கணுஞ்செய்குவ
னெனக்கிடருண்டென் றிரங்கல்வேண்டா
மனக்கினியீரென் றவரையும்வணங்கி
வெந்துறுபொன்போல் வீழ்கதிர்மறைந்த
வந்திமாலை யாயிழைபோகி
யுலகவறவியு முதியாள்கோட்டமு
மிலகொளிக்கந்தமு மேத்திவலங்கொண்
டந்தரமாறாப் பறந்துசென்றாயிழை
யிந்திரன்மருமா னிரும்பதிப்புறத்தோர்

பூம்பொழிலகவயி னிருந்துபொறையுயிர்த்
தாங்குவாழ்மாதவ னடியிணைவணங்கி
யிந்நகர்ப்பேர்யாதி யிந்நகராளு
மன்னவன்யாரென மாதவன்கூறும்
நாகபுரமிது நன்னகராள்வோன்
பூமிசந்திரன்மகன் புண்ணியராச
னீங்கிவன்பிறந்தநாடொட்டு
மோங்குயர்வானத்துப் பெயல்பிழைப்பறியாது
மண்ணுமரனும் வளம்பலதரூஉ
முண்ணின்றுருக்கு நோயுயிர்க்கில்லெனத்
தகைமலர்த்தாரோன் றன்றிறங்கூறின
னறுமலர்ப்பூம்பொழிலருந்தவன்றானென
ஆபுத்திரநாடடைந்தகாதை முற்றிற்று.

## இருபத்தைந்தாவது
## ஆபுத்திரன்மணிப்பல்லவமடைந்தகாதை.

அரசனுரிமையோ டப்பொழில்புக்குத்
தருமசாவகன் றன்னடிவணங்கி
யறனுமறனு மநித்தமுநித்தியத்
திறனுந்துக்கமுஞ் செல்லுயிர்புக்கிலுஞ்
சார்பிற்றோற்றமுஞ் சார்பறுத்துய்தியு
மாரியனமைதியு மமைவுறக்கேட்டுப்
பெண்ணிணையில்லாப் பெருவனப்புற்றாள்
கண்ணிணையியக்கமுங் காமனொடியங்கா
வங்கையிற்பாத்திரங் கொண்டறங்கேட்கு
மிங்கிணையில்லா ளிவள்யாரென்னக்
காவலற்றொழுது கஞ்சுகனுரைப்பா
னாவலந்தீவினி னங்கையையொப்பார்
யாவருமில்லை யிவடிறமெல்லாங்
கிள்ளிவளவனொடு கெழுதகைவேண்டிக்
கள்ளவிழ்தாரோய் கலத்தொடும்போகக்
காவிரிப்படப்பை நன்னகர்புக்கென
மாதவனறவண னிவள்பிறப்புணர்ந்தாங்
கோதினனென்றியா னன்றேயுரைத்தே

ஞுங்கவளிவளவ் வகனகர்நீங்கி
யீங்குவந்தன ளென்றலுமிளங்கொடி
நின்கைப்பாத்திர மென்கைப்புக்கது
மன்பெருஞ்செல்வத்து மயங்கினையறியாய்
அப்பிறப்பறிந்திலை யாயினுமாவயிற்
றிப்பிறப்பறிந்திலை யென்செய்தனையோ
மணிப்பல்லவம்வலங் கொண்டாலல்லது
பிணிப்புறுபிறவியின் பெற்றிமையுணரா
யாங்குவருவா யரசநீயென்றப்
பூங்கமழ்தாரோன் முன்னர்ப்புகன்று
மையறுவிசும்பின் மடக்கொடியெழுந்து
வெய்யவன்குடபால் வீழாமுன்னர்
வானின்றிழிந்து மறிதிரையுலாவும்
பூநாறடைகரை யெங்கணும்போகி
மணிப்பல்லவம்வலங் கொண்டுமடக்கொடி
பிணிப்பறுமாதவன் பீடிகைகாண்டலுந்
தொழுதுவலங்கொள்ளத் தூமணிப்பீடிகை
பழுதில்காட்சித் தன்பிறப்புணர்த்தக்
காயங்கரையெனும் பேரியாற்றடைகரை
மாயமின்மாதவன் றன்னடிபணிந்து
தருமங்கேட்டுத் தாடொழுதேத்திப்
பெருமகன்றன்னொடும் பெயர்வோர்க்கெல்லாம்
விலங்குநரகரும் பேய்களுமாக்குங்
கலங்கஞர்தீவினை கடிமின்கடிந்தாற்
றேவருமக்களும் பிரமருமாகுதி
ராகலினல்வினை யயராதோம்புமின்
புலவன்முழுதும் பொய்யின்றுணர்ந்தோ
னுலகுயக்கோடற் கொருவன்றோன்று
மஞ்ஞான்றவன்றிறங் கேட்டாலல்ல
தின்னாப்பிறவி யிழுக்குநரில்லை
மாற்றருங்கூற்றம் வருவதன்முன்னம்
போற்றுமினறமெனச் சாற்றிக்காட்டி
நாக்கடிப்பாக வாய்ப்பறையறைந்தீர்
அவ்வுரைகேட்டுநும் மடிதொழுதேத்தப்
பெரியவன்றோன்றி முன்னரிப்பீடிகை
கரியவனிட்ட காரணந்தானு

மன்பெரும்பீடிகை மாய்ந்துயிர்நீங்கிய
வென்பிறப்புணர்த்தலு மென்னென் றியான்றொழ
முற்றவுணர்ந்த முதல்வனையல்லது
மற்றைப்பீடிகை தன்மிசைபொறாஅ
பீடிகைபொறுத்த பின்னரல்லது
வானவன்வணங்கான் மற்றவ்வானவன்
பெருமகற்கமைந்து பிறந்தார்பிறவியைத்
தருமபீடிகை சாற்றுகவென்றே
யருளினனாதலி னாயிழைபிறவியு
மருளறக்காட்டுது மென்றெடுத்துரைத்த
வன்றேபோன்ற தருந்தவர்வாய்மொழி
யின்றெனக்கென்றே யேத்திவலங்கொண்
டீங்கவ ணின்னண மாகவிறைவனு
மாங்கப்பொழில்விட் டகனகர்புக்கபின்
றந்தைமுனியத் தாய்பசுவாக
வந்தபிறவியு மாமுனியருளாற்
குடர்த்தொடர்மாலை சூழாதாங்கோ
ரடற்பொன்முட்டையு ளடங்கியவண்ணமு
மாமுனியருளான் மக்களையில்லான்
பூமிசந்திரன்கொடு போந்தவண்ணமு
மாய்தொடியரிவை யமர்சுந்தரியெனுந்
தாய்வாய்க்கேட்டுத் தாழ்துயரெய்தி
யிறந்தபிறவியின் யாய்செய்ததூஉம்
பிறந்தபிறவியின் பெற்றியுநினைந்து
செருவேன்மன்னர் செவ்விபார்த்துணங்க
வரசுவீற்றிருந்து புரையோர்ப்பேணி
நாடகங்கண்டு பாடல்சால்கேள்வி
யின்னிசைகேட்டுத் தேவியரூடலிற்
செவ்விபார்த்து நீடாதுபாடகத்
தாமரைச்சீறடி பிடித்துத்தேமரு
கொங்கையிற்குங்கும மெழுதியங்கையிற்
றுறுமலர்ச்சுரிகுழல் சூட்டிநறுமுகை
யமிழ்துறாஉந்திருநகை யருந்திமதிமுகக்
கருங்கட்செங்கடைக் கலக்கமருங்குவளை
கருப்புவிலனங்க னருப்புக்கணைதூஉய்
தருக்கியகாமக் கள்ளாட்டிகழ்ந்து

துறத்தனன்றெனச் சிறப்பத்தெளிந்தநின்
றென்செவிமுதலிட்டவித் தேதமின்றினி
விளைந்தது மணிமேகலைதன்காரணமா
வென்றணிநீண்முடி யரசன்கூற
மனம்வேறாயினன் மன்னெனமந்திரி
சன்மித்திரனவன் றொழுதேத்தி
யெங்கோவாழி யென்சொற்கேண்மதி
நுங்கோனுன்னைப் பெறுவதன்முன்னாள்
பன்னீராண்டுப் பதிகெழுநன்னாடு
மன்னுயிர்மடிய மழைவளங்கரந்த
தீன்றாள்குழவிக் கிரங்காளாகித்
தான்றனிதின்னுந் தகைமையதாயது
காய்வெங்கோடையிற் கார்தோன்றியதென
நீதோன்றினையே நிரைதாரண்ண
றோன்றியபின்னர்த் தோன்றியவுயிர்க்கு
வான்பொய்யாது மண்வளம்பிழையா
தூனுடையுயிர்களுறுபசியறியா
நீபொழிகாலை நின்னொடெல்லாந்
தாயொழிகுழவி போலக்கூஉந்
துயர்நிலையுலகங் காக்கவென்றுநீ
யுயிர்நிலையுலகம் வேட்டனையாயி
னிறுதியுலக மெய்தவுமிறைவன்
பெறுதிவிரும்பினை யாகுவையன்றே
தன்னுயிர்க்கிரங்கான் பிறவுயிரோம்பு
மன்னுயிர்முதல்வ னறமுமிதன்றா
மதிமாறொத்தனை மன்னவவென்றே
தொழுதுமொழிகூற முதல்வன்கேட்டு
மணிப்பல்லவம்வலங் கொள்வதற்கெழூஉந்
தணியாவேட்கை தணிதற்கரிதா
லரசுமுரிமையு மாநகர்ச்சுற்றமு
மொருமதியெல்லைக் காத்தனின்கடனெனக்
கலஞ்செய்கம்மியர் வருகெனக்கூஉ
யிலங்குநீர்ப்புணரி யெறிகரையெய்தி
வங்கமேறினன் மணிப்பல்லவத்திடைத்
தங்காதக்கலஞ் சென்றுசார்ந்திறுத்தலும்
புரைதீர்காட்சிப் பூங்கொடிபொருந்தி

யரசன்கலமென் றகமகிழ்வெய்திக்
காவலன்றன்னொடுங் கடற்றிரையுலாவுந்
தேமலர்ச்சோலைத் தீவகம்வலஞ்செய்து
பெருமகன்காணாய் பிறப்புணர்விக்குந்
தருமபீடிகை யதுவெனக்காட்ட
வலங்கொண்டேத்தினன் மன்னவன்மன்னவர்க்
குலந்தபிறவியையுயர்மணிப்பீடிகைக்
கையகத்தெடுத்துக் காண்போர்முகத்தை
மையறுமண்டிலம் போலக்காட்ட
வென்பிறப்பறிந்தே னென்னிடர்தீர்த்த
தென்றமிழ்மதுரைச் செழுங்கலைப்பாவாய்
மாரிநடுநாள் வயிறுகாய்பசியா
லாரிருளஞ்சா தம்பலமடைந்தாங்
கிரந்தூண்வாழ்க்கை யென்பால்வந்தோர்க்
கருந்தூண்காணா தழுவென்கையி
னாடுவறங்கூரினு மிவ்வோடுவறங்கூரா
தொடர்பரியலெழுந் திதுகொள்கென
வமுதசுரபி யங்கையிற்றந்தென்
பவமறுவித்த வானோர்பாவா
யுணர்விற்றோன்றி யுரைப்பொருளுணர்த்து
மணிதிகழவிரொளி மடந்தைநின்னடி
தேவராயினு மமரராயினு
நாமரசூஉ நலங்கிளர்திருந்தடி
பிறந்தபிறந்தை பேணுவதல்லது
மறந்துவாழேன் மடந்தையென்றேத்தி
மன்னவன்மணி மேகலையுடனெழுந்து
தென்மேற்காகச் சென்றுதிரையுலாங்
கோமுகியென்னும் பொய்கையின்கரையோர்
தூமலர்ப்புன்னைத் துறைநிழலிருப்ப
வாபுத்திரனோ டாயிழைதன்னைக்
காவற்றெய்வதங் கண்டுவந்தெய்தி
யருந்துயர்மருந்து னங்கையிற்கொண்டு
வருந்துயர்தீர்த்த மறையோன்வந்தனை
யந்நாணின்னை யயர்த்துப்போனார்
பின்னாள்வந்துநின் பெற்றிமைநோக்கி
நின்குறியிருந்து தம்முயிர்நீத்தார்

ஞங்கவளிவளவ் வகனகர்நீங்கி
யீங்குவந்தன ளென்றலுமிளங்கொடி
நின்கைப்பாத்திர மென்கைப்புக்கது
மன்பெருஞ்செல்வத்து மயங்கினையறியாய்
அப்பிறப்பறிந்திலை யாயினுமாவயிற்
றிப்பிறப்பறிந்திலை யென்செய்தனையோ
மணிப்பல்லவம்வலங் கொண்டாலல்லது
பிணிப்புறுபிறவியின் பெற்றிமையுணரா
யாங்குவருவா யரசநீயென்றப்
பூங்கமழ்தாரோன் முன்னர்ப்புகன்று
மையறுவிசும்பின் மடக்கொடியெழுந்து
வெய்யவன்குடபால் வீழாமுன்னர்
வானின்றிழிந்து மறிதிரையுலாவும்
பூநாறடைகரை யெங்கணும்போகி
மணிப்பல்லவம்வலங் கொண்டுமடக்கொடி
பிணிப்பறுமாதவன் பீடிகைகாண்டலுந்
தொழுதுவலங்கொள்ளத் தூமணிப்பீடிகை
பழுதில்காட்சித் தன்பிறப்புணர்த்தக்
காயங்கரையெனும் பேரியாற்றடைக்கரை
மாயமின்மாதவன் றன்னடிபணிந்து
தருமங்கேட்டுத் தாடொழுதேத்திப்
பெருமகன்றன்னொடும் பெயர்வோர்க்கெல்லாம்
விலங்குநரகரும் பேய்களுமாக்குங்
கலங்களுர்தீவினை கடிமின்கடிந்தாற்
றேவருமக்களும் பிரமருமாகுதி
ராகவினல்வினை யயராதோம்புமின்
புலவன்முழுதும் பொய்யின்றுணர்ந்தோ
னுலகுயக்கோடற் கொருவன்றோன்று
மஞ்ஞான்றவன்றிறங் கேட்டாலல்ல
தின்னாப்பிறவி யிழுக்குநரில்லை
மாற்றருங்கூற்றம் வருவதன்முன்னம்
போற்றுமினறமெனச் சாற்றிக்காட்டி
நாக்கடிப்பாக வாய்ப்பறையறைந்தீர்
அவ்வுரைகேட்டுநும் மடிதொழுதேத்தப்
பெரியவன்றோன்றி முன்னரிப்பீடிகை
கரியவனிட்ட காரணந்தானு

மன்பெரும்பீடிகை மாய்ந்துயிர்நீங்கிய
வென்பிறப்புணர்த்தலு மென்னென்றியான்றொழூஉ
முற்றவுணர்ந்த முதல்வனையல்லது
மற்றைப்பீடிகை தன்மிசைபொறாஅ
பீடிகைபொறுத்த பின்னரல்லது
வானவன்வணங்கான் மற்றவ்வானவன்
பெருமகற்கமைந்து பிறந்தார்பிறவியைத்
தருமபீடிகை சாற்றுகவன்றே
யருளினனாதலி னாயிழைபிறவியு
மருளறக்காட்டுது மென்றெடுத்துரைத்த
வன்றேபோன்ற தருந்தவர்வாய்மொழி
யின்றெனக்கென்றே யேத்திவலங்கொண்
டிங்கிவ ளின்னண மாகவிறைவனு
மாங்கப்பொழில்விட் டகனகர்புக்கபின்
றந்தைமுனியத் தாய்பசுவாக
வந்தபிறவியு மாமுனியருளாற்
குடர்த்தொடர்மாலை சூழாதாங்கோ
ரடற்பொன்முட்டையு ளடங்கியவண்ணமு
மாமுனியருளான் மக்களையில்லான்
பூமிசந்திரன்கொடு போந்தவண்ணமு
மாய்தொடியரிவை யமர்சுந்தரியெனுந்
தாய்வாய்க்கேட்டுத் தாழ்துயரெய்தி
யிறந்தபிறவியின் யாய்செய்ததூஉம்
பிறந்தபிறவியின் பெற்றியுநினைந்து
செருவேன்மன்னர் செவ்விபார்த்துணங்க
வரசுவீற்றிருந்து புரையோர்ப்பேணி
நாடகங்கண்டு பாடல்சால்கேள்வி
யின்னிசைகேட்டுத் தேவியருடலிற்
செவ்விபார்த்து நீடாதுபாடகத்
தாமரைச்சீறடி பிடித்துத்தேமரு
கொங்கையிற்குங்கும மெழுதியங்கையிற்
றுறுமலர்ச்சுரிகுழல் சூட்டிநறுமுகை
யமிழ்துறூஉந்திருநகை யருந்திமதிமுகக்
கருங்கட்செங்கடைக் கலக்கமருங்குவளை
கருப்புவிலனங்க னருப்புக்கணைதூஉய்
தருக்கியகாமக் கள்ளாட்டிகழ்ந்து

துறத்தனன்றெனச் சிறப்பத்தெளிந்தநின்
றென்செவிமுதவிட்டவித் தேதமின்றின்று
விளைந்தது மணிமேகலை தன்காரணமா
வென்றணிநீண்முடி யரசன்கூற
மனம்வேறாயினன் மன்னெனமந்திரி
சன்மித்திரனவன் றொழுதேத்தி
யெங்கோவாழி யென்சொற்கேண்மதி
நுங்கோனுன்னைப் பெறுவதன்முன்னாள்
பன்னீராண்டிப் பதிகெழுநன்னாடு
மன்னுயிர்மடிய மழைவளங்கரந்து
ஈன்றாள்குழவிக் கிரங்காளாகித்
தான்றனிதின்னுந் தகைமையதாயது
காய்வெங்கோடையிற் கார்தோன்றியதென
நீதோன்றினையே நிரைதாரண்ண
றோன்றியபின்னர்த் தோன்றியவுயிர்க்கு
வான்பொய்யாது மண்வளம்பிழையா
தூனுடையுயிர்களுறுபசியறியாது
நீபொழிகாலை நின்னொடெல்லாந்
தாயொழிகுழவி போலக்கூஉந்
துயர்நிலையுலகங் காக்கவென்றுநீ
யுயிர்நிலையுலகம் வேட்டனையாயி
னிறுதியுலக மெய்தவுமிறைவன்
பெறுதிவிரும்பினை யாகுவையன்றே
தன்னுயிர்க்கிரங்கான் பிறவுயிரோம்பு
மன்னுயிர்முதல்வ னறமுமிதன்றான்
மதிமாறொத்தனை மன்னவவென்றே
தொழுதுமொழிகூற முதல்வன்கேட்டு
மணிப்பல்லவம்வலங் கொள்வதற்கெழூஉந்
துணியாவேட்கை தணிதற்கரிதா
லரசுமுரிமையு மாநகர்ச்சுற்றமு
மொருமதியெல்லைக் காத்தனின்கடனெனக்
கலஞ்செய்கம்மியர் வருகெனக்கூஉ
யிலங்குநீர்ப்புணரி யெறிகரையெய்தி
வங்கமேறினன் மணிப்பல்லவத்திடைத்
தங்காதக்கலஞ் சென்றுசார்ந்திறுத்தலும்
புரைதீர்காட்சிப் பூங்கொடிபொருந்தி

யரசன்கல்மென் றகமகிழ்வெய்திக்
காவலன்றன்னொடுங் கடற்றிரையுலாவுந்
தேமலர்ச்சோலைத் தீவகம்வலஞ்செய்து
பெருமகன்காணாய் பிறப்புணர்விக்குந்
தருமபீடிகை யதுவெனக்காட்ட
வலங்கொண்டேத்தினன் மன்னவன்மன்னவர்க்
குலந்தபிறவியையுயர்மணிப்பீடிகைக்
கையகத்தெடுத்துக் காண்போர்முகத்தை
மையறுமண்டிலம் போலக்காட்ட
வென்பிறப்பறிந்தே னென்னிடர்தீர்த்த
தென்றமிழ்மதுரைச் செழுங்கலைப்பாவாய்
மாரிநடுநாள் வயிறுகாய்பசியா
லாரிருளஞ்சா தம்பலமடைந்தாங்
கிரந்தூண்வாழ்க்கை யென்பால்வந்தோர்க்
கருந்தூண்காணா தழுவென்கையி
னுவெறங்கூறினு மிவ்வோடுவெறங்கூரா
தொடர்பரியவெழுந் திருகொள்கென
வமுதசுரபி யங்கையிற்றந்தென்
பவமறுவித்த வானோர்பாவா
யுணர்விற்றோன்றி யுரைப்பொருளுணர்த்து
மணிதிகழவிரொளி மடந்தைநின்னடி
தேவராயினு மமரராயினு
நாமசுழூஉ நலங்கிளர்திருந்தடி
பிறந்தபிறந்தை பேணுவதல்லது
மறந்துவாழேன் மடந்தையென்றேத்தி
மன்னவன்மணி மேகலையுடனெழுந்து
தென்மேற்காகச் சென்றுதிரையுலாங்
கோமுகியென்னும் பொய்கையின்கரையோர்
தூமலர்ப்புன்னைத் துறைநிழலிருப்ப
வாபுத்திரனோ டாயிழைதன்னைக்
காவற்றெய்வதங் கண்டுவந்தெய்தி
யருந்துயர்மருந்து வங்கையிற்கொண்டு
வருந்துயர்தீர்த்த மறையோன்வந்தனை
யந்நாணின்னை யயர்த்துப்போனார்
பின்னாள்வந்துநின் பெற்றிமைநோக்கி
நின்குறியிருந்து தம்முயிர்நீத்தார்

ஒன்பதுசெட்டிக ளுடலென்பிவைகா
ணுங்கவர்மடவா ரவருடன்வந்தா
ரேங்கிமெய்வைத்தா ரென்புமிவைகா
ணூதையீட்டிய வுயர்மணல்புதைப்ப
வாய்மலர்ப்புன்னை யணிநிழற்கீழா
லன்புடையாருயி ரரசற்கருளிய
வென்புடையாக்கை யிருந்ததுகாணாய்
நின்னுயிர்கொன்றாய் நின்னுயிர்க்கிரங்கிப்
பின்னைநாள்வந்த பிறவுயிர்கொன்றாய்
கொலைவனல்லையோ கொற்றவனாயினை
பலர்தொழுபாத்திரங் கையினேந்திய
மடவரனல்லாய் நின்றன்மாநகர்
கடல்வயிறுபுக்கது காரணங்கேளாய்
நாகநன்னா டாள்வோன்றன்மகள்
பீலிவளையென்பாள் பெண்டிரின்மிக்காள்
பனிப்பகைவானவன் வழிவயிற்றோன்றிய
புனிற்றிளங்குழவியொடு பூங்கொடிபொருந்தித்
தீவகம்வலஞ்செய்து தேவர்கோனிட்ட
மாபெரும்பீடிகை வலங்கொண்டேத்துழிக்
கம்பளச்செட்டி கலம்வந்திறுப்ப
வங்கவன்பாற்சென் றவன்றிறனறிந்து
கொற்றவன்மகனிவன் கொள்கெனக்கொடுத்தலும்
பெற்றவுவகையன் பெருமகிழ்வெய்திப்
பழுதில்காட்சிப் பைந்தொடிபுதல்வனைத்
தொழுதனன்வணங்கியுந் துறைபிறக்கொழியக்
கலங்கொண்டுபோய வன்றேகாரிருள்
இலங்குநீரிடைகரை யக்கலங்கெட்டது
கெடுகலமாக்கள் புதல்வனைக்கெடுத்து
வடிவேற்கிள்ளி மன்னனுக்குரைப்ப
மன்னவன்மகனுக் குற்றதுபொறாஅ
னன்மணியிழந்த நாகம்போன்று
கானலுங்கடலுங் கரையுந்தேர்வுழி
வானவன்விழாக்கோள் மாநகரொழிந்தது
மணிமேகலாதெய்வ மற்றதுபொறாஅ
ளகனகர்தன்னை யலைகடல்கொள்கென
விட்டனசாபம் பட்டதிதுவாற்

கடவுண்மாநகர் கடல்கொளப்பெயர்ந்த
வடிவேற்றடக்கை வானவன்போல
விரிதிரைவந்து வியனகர்விழுங்க
வொருதனிபோயின் றுலகமன்னவ
னருந்தவன்றன்னுட னாயிழைதாயரும்
வருந்தாதேகி வஞ்சியுட்புக்கனர்
பரப்புநீர்ப்பௌவம் பலர்தொழக்காப்பா
னுரைத்தனைகேட்க விருகுவையாயினின்
மன்னுயிர்முதல்வனை மணிமேகலாதெய்வ
முன்னாளெடுத்தது மந்நாளாங்கவ
னறவரசாண்டது மறவணன்றன்பால்
மறுபிறப்பாட்டி வஞ்சியுட்கேட்குவையெஞ்
ஞந்தரத்தீவகத் தருந்தெய்வம்போயபின்
மன்னவன்வணங்கி மணிமேகலையுடன்
றுன்னியதுடர் மணலகழத்தோன்றின
வூன்பிணியவிழவு முடலென்பொடுங்கித்
தான்பிணியவிழாத் தகைமையதாகி
வெண்சுதைவேய்ந்தவ ரிருக்கையினிருந்த
பண்புகொள்யாக்கையின் படிவநோக்க
மன்னவன்மயங்க மணிமேகலையெழுந்
தென்னுற்றனையோ விலங்கிதழ்த்தாரோய்
நின்னுடைந்தியா னின்னையீங்கழைத்தது
மன்னநின்றன் மறுபிறப்புணர்த்தி
யந்தரத்தீவினு மகன்பெருந்தீவினு
நின்பெயர்நிறுத்த நீணிலமாளு
மரசர்தாமே யருளறம்பூண்டாற்
பொருளுமுண்டோ புரைதீர்தற்கென
வறமெனப்படுவ தியாதுகேட்பின்
மறவாதிதுகேள் மன்னுயிர்க்கெல்லா
முண்டியுமுடையு முறையுளுமல்லது
கண்டதில்லெனக் காவலனுரைக்கு
மென்னாட்டாயினும் பிறநாட்டாயினு
நன்னுதலுரைத்த நல்லறஞ்செய்கென
என்பிறப்புணர்த்தி யென்னைநீபடைத்தனை
நின்றிறனீங்க லாற்றேன்யானெனப்

புன்கண்கொள்ளநீ போந்ததற்கிரங்கிநின்
மன்பெருநன்னாடு வாயெடுத்தழைக்கும்
வங்கத்தேகுதி வஞ்சியுட்செல்வனென்
றந்தரத்தெழுந்தன னணியிழைதானென.

ஆபுத்திரனோடுமணிப்பல்லவமடைந்தகாதை.

முற்றிற்று.

## இருபத்தாறவது
## வஞ்சிமாநகர்புக்க காதை.

அணியிழையந்தர மாறாதெழுந்து
தணியாக்காதற் றாய்கண்ணகியையுங்
கொடைகெழுதாதை கோவலன்றன்னையுங்
கடவுளெழுதிய படிவங்காணிய
வேட்கைதுரப்பக் கோட்டம்புக்கு
வணங்கிநின்று குணம்பலவேத்தி
யற்புக்கடனில்லாது நற்றவஞ்சிறப்பக்
கற்புக்கடன்பூண்டு நுங்கடன்முடித்த
தருளவேண்டுமென் றழுதனணிற்ப
வொருபெரும்பத்தினிக் கடவுளங்குரைப்பா
ளெம்மிறைக்குற்ற விடுக்கண்பொறாது
வெம்மையின்மதுரை வெவ்வழற்படுநாண்
மதுராபதியெனு மாபெருந்தெய்வ
மதுநீர்முன்செய் வினையின்பயனாற்
காசில்பூம்பொழிற் கலிங்கநன்னாட்டுத்
தாயமன்னவர் வசுவுங்குமரனுஞ்
சிங்கபுரமுஞ் செழுநீர்க்கபிலையு
மங்காள்கின்றோ ரடற்செருவுறுநா
ளூவிருகாவத முன்னுநரின்றி
யாவரும்வழங்கா விடத்திற்பொருள்வேட்டுப்
பல்கலன்கொண்டு பலரறியாம
லெல்வளையாளோ டரிபுரமெய்திப்
பண்டக்கலம்பகர் சங்கமன்றன்னைக்
கண்டனர்கூறத் தையனின்கணவன்
பார்த்திபன்றொழில் செயும்பரதனென்னும்

தீத்தொழிலாளன் றெற்றெனப்பற்றி
யொற்றனிவனென வுரைத்துமன்னவனாற்
குற்றமிலோனைக் கொலைபுரிந்திட்டன
னாங்கவன்மனைவி யழுதனளரற்றி
யேங்கிமெய்பெயர்ப்போ ளிறுவரையேறி
யிட்டசாபங் கட்டியதாகு
மூழ்வினையுருத்த லொழியாதென்னு
மெய்ம்மைக்கிளவி விளம்பியபின்னுஞ்
சீற்றங்கொண்டு திருநகர்சிதைத்தேன்
மேற்செய்நல்வினையின் விண்ணவர்ச்சென்றே
மவ்வினையிறுதியி னடுசினப்பாய
மெவ்வகையாறு மெய்துதலொழியா
தும்பரில்வழியிம் பரிற்பல்பிறப்
பியாங்கணுமிருவினை யுய்த்துமைப்போல
நீங்கரும்பிறவிக் கடலிடைநீந்திப்
பிறந்துமிறந்து முழல்வோம்பின்னர்
மறந்துமழைமறா மகதநன்னாட்டுக்
கொருபெருந்திலகமென் றுரவோருரைக்குங்
கரவரும்பெருமைக் கயிலைப்பதியி
னளப்பரும்பார்மிசை யளவின்றுநிறைந்து
துளக்கமில்புத்த ஞாயிறுதோன்றிப்
போதிமூலம் பொருந்திவந்தருளித்
தீதறுநால்வகை வாய்மையுந்தெரிந்து
பன்னிருசார்பின் பகுதித்தோற்றமு
மந்நிலையெல்லா மழிவுறுவகையு
மிற்றெனவியம்பக் குற்றவீடெய்
திருஞ்சக்கரவாள மெங்கணு
மண்ணலறக்கதிர் விரிக்குங்காலைப்
பைந்தொடிதந்தை யுடனேபகவ
னிந்திரவிகார மேழுமேத்துதலிற்
றுன்பக்கதியிற் றோற்றரவின்றி
யன்புறுமனத்தோ டறங்கேட்டுத்
துறவியுள்ளந் தோன்றித்தொடரும்
பிறவிநீத்த பெற்றியாகுவ
மத்திறமாயினு மநேககால

மித்திறத்தாக்கு மிருத்தியுஞ்செய்குவர்
நறைகமழ்கூந்த னங்கைநீயு
முறைமையினிந்த மூதூரகத்தே
யவ்வவர்சமயத் தறிபொருள்கேட்டு
மெய்வகையின்மை நினக்கேவிளங்கிய
பின்னர்ப்பெரியோன் பிடகநெறிகடவா
யின்னதிவணியல்பெனத் தாயெடுத்துரைக்கலு
மிளையளவளையாளென்று நச்சியாவரும்
விளைபொருளுரையார் வேற்றுருக்கொள்கென
மையறுசிறப்பிற் றெய்வதந்தந்த
மந்திரமோதியோர் மாதவன்படிவாய்த்
தேவகுலனுந் தெற்றியும்பள்ளியும்
பூமலர்ப்பொழிலும் பொய்கையுமிடைந்து
நற்றவமுனிவருங் கற்றடங்கினரு
நன்னெறிகாணிய தொன்னூற்புலவரு
மெங்கணும்விளங்கிய வெயிற்புறவிருக்கையிற்
செங்குட்டுவனெனுஞ் செங்கோல்வேந்தன்
பூத்தவஞ்சி பூவாவஞ்சியிற்
போர்த்தொழிற்றானை குஞ்சியிற்புனைந்து
நீர்நாடெல்லைதன் மலைநாடென்னக்
கைம்மலைக்களிற்றி னந்தமுண்மயங்கத்
தேருமாவுஞ் செறிகழன்மறவருங்
கார்மயங்குகடலிற் கலிகொளக்கடைஇக்
கங்கையம்பேர்யாற்றுத்தடங் கரைதங்கி
வங்கநாவாயி னதன்வடக்கிழிந்து
கனகவிசைய முதற்பலவேந்த
ரனைவரைவென்றவ ரம்பொன்முடிமிசைச்
சிமையமோங்கிய விமயமால்வரைத்
தெய்வக்கல்லுந் தன்றிருமுடிமிசைச்
செம்பொன்வாகை சேர்த்தியசேரன்
விற்றிறல்வெய்யோன் றன்புகழ்விளங்கப்
பொற்கொடிபேர்ப்படூஉம் பொன்னகர்பொலிந்தன
டிருந்துநல்லேது முதிர்ந்துளவாதலிற்
பொருந்துநல்வாய்மையும் புலப்படுதற்கென

வஞ்சிமாநகர்புக்க காதைமுற்றிற்று.

## இருபத்தேழாவது
## சமயக்கணக்கர் தந்திறங்கேட்டகாதை.

நவையறுநன்பொருளுரைமினோவெனச்
சமயக்கணக்கர்தந்திறஞ் சார்ந்து
வைதிகமார்க்கத்தளவை வாதியை
யெய்தினளெய்தினின் கடைப்பிடியியம்பென
வேதவியாதனுங் கிருதகோடியு
மேதமில்சயமுனியெனு மாசிரியனும்
பத்துமெட்டு மாறும்பண்புறத்
தத்தம்வகையாற் றாம்பகர்ந்திட்டனர்
காண்டல் கருதலுவமமாகம
மாண்டையருத்தா பத்தியோடியை
வைதிகம்பாவமீட்சி யொழிவறி
வெய்தியுண்டா நெறியென்றிவைதம்மாற்
பொருளினுண்மை புலங்கொளல்வேண்டும்
மருளில்காட்சி யையவகையாகுங்
கண்ணால்வண்ணமுஞ் செவியாலோசையு
மூக்கானாற்றமு நாக்காற்சுவையு
மெய்யாலூறுமென்னச் சொன்னவிவ்
வைவகைகண்டு கேட்டுண்டுயிர்த்துற்றுத்
துக்கசுகமெனத் துய்த்தறவறிந்
துயிரும்வாயினு மனமுமூன்றின்றிப்
பயிலொளியொடுபொருளிடம்பழுதின்றிச்
சுட்டறிரிதல்கவர் கோடறோன்றாது
கட்டியதேசநாமம்சாதி
குணக்கிரியையி னறிவிதாகுங்
கருதலளவாவது குறிகொளனுமானத்தினு
மெய்த்தகைமை யுணருந்தன்மையதாகு
மவ்வகையுற்றது பொதுவெச்சமுதலாம்
பொதுவெனப்புகல்வது சாதனசாத்திய
மிவைதமோடனுவய மின்றியிருந்து
கடந்திகழ்யானை கானவொலிகேட்டோ
னுடங்கெழில்யானையங் குண்டெனவுணர்த
லெச்சமென்பது மெள்ளவேதுவினி

னிச்சயித்தத்தலை மழைநிகழ்வுரைத்தல்
முதலெனமொழிவது கருக்கொண்முகில்கண்
டிதுமழைபெய்யு மெனவியம்பிடுத
லென்னுமேதுவி னென்றுமுக்காலந்
தன்னிலொன்றிற் சார்ந்துளதாகி
மாண்டவுயிர்முதன் மாசின்றாகிக்
காண்டற்பொருளாற் கண்டிலதுணர்த்துவ
துவமமாவதொப்புமையளவை
கவையமாமாப்போலுமெனக்கருத
லாகமவளவை யறிவனூலாற்
போகபுவன முண்டெனப்புலங்கொள
லருத்தாபத்தி யாய்க்குடிகங்கை
யிருக்குமென்றாற் கரையிலென்றெண்ணல்
இயைபியானைமே லிருந்தோன்றோட்டிக்
காலொன்றியாத்து வேருகொடுத்த
லைதிகமென்பது லகுரையிம்மரத்
தெய்தியோர்பேயுண்டெனத்தெளித
லபாவமென்பதின் மையோர்பொருளைத்
தாவாதவ்விடத்திற் றானிலையென்றல்
மீட்சியென்பதிராமன் வென்றானென
மாட்சியாலிராவணன் றோற்றமைமதித்த
லுள்ளநெறியென்பது நாராசத்திரியிற்
கொள்ளத்தகுவது காந்தமெனக்கூற
லெட்டுளப்பிரமாண பாசங்கள்
சுட்டுணர்வொடு திரியக்கோட
லையந்தேராது தெளிதல்கண்டுணரா
மையேபதியில்வழக் குணர்ந்ததையுணர்தல்
நினைப்பெனநிகழ்வது சுட்டுணர்வெனப்படுவ
தேனைப்பொருளுண்மை மாத்திரைகாண்ட
றிரிவாக்கோடலொன் றையொன்றென்றல்
விரிகதிரிப்பியை வெள்ளியென்றுள்ள
லையமென்பதொன்றை நிச்சயியாது
மையிற்றறியோமகனோவென்ற
றேராதுதெளிதல் செண்டுவெளியி
லோராதுதறியை மகனெனவுணர்தல்

கண்டுணராமை கடுமாப்புலியொன்
றண்டலைமுதலிய கண்டுமெறியாமை
யில்வழக்கென்பது முயற்கோடொப்பன
சொல்லின்மாத்திரத்தாற் கருத்திற்றோன்று
முணராததையுணர்த்துவது பிணிக்குத்தீப்
புணர்ந்திடன்மருந்தெனப் புலங்கொளநினைத்தல்
நினைப்பெனப்படுவது காரணநிகழாது
நினக்கிவர்தாயுந் தந்தையுமென்று
பிறர்சொற்கருதலிப் பெற்றியளவைகள்
பாங்குறுமுலகி லோகாயதம்பௌத்தஞ்
சாங்கியநையாயிகம் வைசேடிக
மீமாம்சமடஞ்சமயவாசிரியர்
தாமேபிருகற்பதி சினனேகபிலன்
அக்கபாதன்கணாதன் சயிமினிமெய்
பிரத்தியமனுமான சாதகமுவமான
மருத்தாபத்திய பாவமிவையே
யப்போதியன்றுளவளவையாவன
வென்றவன்றன்னை விட்டிறைவனீசனென
நின்றசைவவாதி நேர்படுதலும்
பரசுநின்றெய்வதமெப் படித்தென்ன
விருசுடரோடிய மானனைம்பூதமென்
றெட்டுவகையு முயிருமியாக்கையுமாய்க்
கட்டிநிற்போனுங் கலையுருவினோனும்
படைத்துவிளையாடும் பண்பினோனுந்
தொடைத்துயர் தீராத்தோற்றத்தோனுந்
தன்னில்வேறுதா னொன்றிலோனு
மன்னோனிறைவனு மென்றுரைத்தனன்
பேருலகெல்லாம் பிரமவாதியென்
றோர்தேவனிட்டமுட்டை யென்றனன்
காதல்கொண்டுகடல்வணன்புராண
மோதினாரணன் காப்பென்றுரைத்தனன்
கற்பங்கைசந்தங் காலெண்கண்
டெற்றெனிருத்தஞ் செவிசிக்கைமூக்
குற்றவியாகரண முகம்பெற்றுச்
சார்பிற்றோன்று வாரணவேதத்

தாதியந்த மில்லையதுவே
நெறியெனும் வேதியனுரையின
விதியுங்கேட்டு மெய்த்திறம்வழக்கென
விளம்புகின்ற வைத்திறத்தினுமிசையா
தவருரையெனவாசீவகனூ லறிந்த
புராணனைப்பேசிநின் னிறைநூற்பொருள்யாதென
வெல்லையில்பொருள்க ளெங்குமெப்பொழுதும்
புல்லிக்கிடந்து புலப்படுகின்ற
வரம்பிலிறைவ னிறைநூற்பொருளை
யுரந்தருமுயிரே யொருநால்வகையினு
மூவணுவுற்றுங் கண்டுமுணர்ந்திடப்
பெய்வகைகூடிப் பிரிவதுஞ்செய்யு
நிலநீர்தீக்காற் றெனநால்வகையின்
றலையாமுடம்பெனத் திரள்வதுஞ்செய்யும்
வெவ்வேறாகிவிரிவதுஞ்செய்யு
மவ்வகையறிவ துயிரெனப்படுமே
யற்பமாகியுறு நிலந்தாழ்ந்து
சொற்படுசித்தத்தொடு சுவையுடைத்தா
யிழினெனநிலஞ் சேர்ந்தாழ்வதுநீர்நீ
டெய்தலுமேற்சேரியல்பு முடைத்தாங்
காற்றிலங்கேயசைத்தல் கடனிவை
வேற்றியல்பெய்தும் விபரீதத்தா
லாதியில்லாப் பரமாவணுக்கள்
தீதுற்றியாவதுஞ் சிதைவதுசெய்யாப்
புதிதாய்ப்பிறந் தோன்றுன்றிற்புகுதா
முதுநீரணுநில வணுவாய்த்திரியா
வொன்றிரண்டாகிப் பிளப்பதுஞ்செய்யா
வன்றியுமவைபோற் பரப்பதுஞ்செய்யா
வுலாவுந்தாழுமுய் வதுஞ்செய்யுங்
குலாமலைபிறவாக் கூடும்பலவும்
பின்னையும்பிரிந்து தன்றன்மையாதாகும்
மண்ணியவயிரமாய்ச் செறிந்துபற்பமுமாம்
வேயர்த்தொளைபடும் பொருளாமுளைக்குந்
தேயாமதிபோற் செழுநிலவரைப்பா
னிறைந்திவ்வணுக்கள் பூதமாய்நிகழிற்

குறைந்துமொத்துங் கூடாவரிசையிற்
ஞேன்றுமுக்காலரைக் கால்ாயுறுந்
துன்றுமிக்கதனுற் பெயர்சொலப்படுமே
மெய்க்குணத்தடைந்தால்லதூஉநிலனுய்ச்
சிக்கென்பதுவு நீராயிழைவதுந்
தீயாய்ச்சுடுவதுங் காற்ருய்வீசுவது
மாயதொழிலையடைந் திடமாட்டா
தோரினுந்தெய்வக்கண்ணுருணர்குவர்
நோலாப்பூதத்திரட்சி யுள்ளானோர்
மாலைப்பொழுதி லொருமயிரறியார்
சாலத்திரள்மயிர் தோற்றுதல்சாலுங்
கருமம்பிறப்புங் கருநிலப்பிறப்புஞ்
சேமப்பிறப்பும் வெண்ணப்பிறப்புமென்
றிவ்வாறுபிறப்பினும் பண்புறுவரிசையிற்
பாற்பட்டுப்பிறந்த கழிந்தவறிவே
பிறப்பிற்கலந்து
வீடணைவாழியல் வேண்டா
வுதுவுறற்பாலரிது செய்போக்கி
னியல்பிது—தப்புமது மண்டலமென்றறியல்வேண்டும்
பெறுதலுமிறத்தலு மிடையூறுறுதலு
முறுமிடத்தெய்தலுந் துக்கசுகமுறுதலும்
பெரிதவைநீங்கலும் பிறத்தலுஞ்சாதலுங்
கருவிற்பட்ட பொழுதேபிறக்கு
மின்பமுந்துன்பமு மிவையிவையெனத்தரு
முன்னுளவூழே பின்னுமுறுவிப்பது
மறக்கவிந்நூலின் வகையிதுவென்று
சொற்றமாற்றத் தொடர்ச்சியைவிட்டு
நிகண்டவாதியை நீயுரைநின்னுற்
புகழ்ந்ததலைவன்யார் நூற்பொருள்யாவை
யப்பொருணிகழ்வுங் கட்டும்வீடும்
மெய்ப்படவிளம்பென விளம்பலுறுவோ
னிந்திரர்தொழப்படு மிறைவனெம்மிறைவன்
றந்தநூற்பிடக மாத்திகாயமதன்
மாத்திகாயமுங் காலாளதகாசமும்
றீதில்சீவனும் பரமாணுக்களும்

நல்வினையுந்தீவினையு மவ்வினையாற்
பந்தமும்வீடு மித்திறத்தவான்ற
பொருளின்றன்மை யதாயுந்தோன்றும்
சார்வோன்றன்மையி லாயினுநித்தமு
நித்தமுமநித்தமு மாயதினின்றது
நனித்தகுணத்தோர் கணத்தின்கண்ணே
தோற்றமுநிலையுங் கேடுமென்னு
மாற்றருமூன்று மாக்கலுமுரித்தா
நிம்பமுளைத்து நிகழ்தனித்திய
நிம்பத்தப்பொரு ளன்மையநித்தியம்
பயற்றுத்தன்மை கெட்டதாங்குமாய
மியற்றியப் யறழிதலுமேதுத்
தருமாத்திகாயந்தா னெங்குமுளதாய்ப்
பொருள்களைநடத்தும் பொருந்தியநித்திய
மப்படித்தாகிய தன்மாத்தியகாயமு
மெய்ப்பொருள்களையு நிறுத்தலியற்றுங்
காலங்கணிதமெனுங் குறிநிகழ்ச்சியு
மேலுங்கற்பத் திரண்டுநிகழ்ச்சியு
மாக்குமாகாயமு மெல்லாப்பொருளும்
பூக்குமிடங்கொடுக்கும் புரிவிற்றாகும்
சீவனுடம்போ டொத்துத்தோன்றித்
தாவில்சுவைமுதலிய புலன்களைநுகரு
போரணிபுற்கலம் புறவுருவாகுஞ்
சீர்சானல்வினைதீ வினையவைசெயும்
பருவாழியிரண்டையு மாற்றிமுன்செய்
யருவினைப்பய னனுபவித்தறுத்திடுத
லதுவீடாகுமென்றன னவன்பின்
ஈனிதுளங்கிய மதமென்றெடுத்துரைப்போன்
றனையறிவரிதாய்த் தான்முக்குணமாய்
மனநிகழ்வின்றி மாண்பமைபொதுவா
யெல்லாப்பொருளுந் தோன்றுதற்கிடமெனச்
சொல்லுதல்மூலப் பகுதிசித்தத்து
மானென்றுரைத்த புத்திவெளிப்பட்
டதன்கணாகாயம் வெளிப்பட்டவற்றின்
கூட்டத்தில் மனம்வெளிப்பட்டாப்புறு

மனத்தாங் காரவிகாரமு
மாகாயத்திற்செவி பொலிவிகாரமும்
வாயுவிற்றூக் குமூறெய்துவிகாரமும்
அங்கியிற்கண்ணு மொளியுமாம்விகாரமும்
தங்கியவப்பில்வாய் சுவையெனும்விகாரமும்
நீலக்கண்மூக்கு நாற்றவிகாரமுஞ்
சொலப்பட்டவிவற்றிற் றூக்குவிகாரமுமாய்
வாக்குப்பாதம் பாணிபாயுருபத்தமென
வாக்கியவிவை வெளிப்பட்டிங்கறைந்த
பூதவிகாரத் தான்மாலைமாமுத
லாகியவெளிப் பட்டுலகாய்நிகழ்ந்து
வந்தவழியே யிவைசென்றடங்கி
யந்தமில்பிரளய மாயிறுமளவு
மொன்றாயெங்கும் பரந்துநித்தியமாம்
அறிதற்கெளிதாமுக் குணமன்றிப்
பொறியுணர்விற்கும் பொருளுமின்றி
யப்பொருளெல்லா மறிந்திடற்குணர்வா
யொன்றாயெங்கும் பரந்துநித்தியமாய்
நின்றளவுணர்வாய் நிகழ்தருபுருடன்
பலமார்பொருள் களிருபத்தைந்துள
நிலநீர்தீவளி யாகாயம்மே
மெய்வாய்கண் மூக்குச்செவிதாமே
யறுசுவையொளி யூறோசைநாற்றம்
வாக்குப்பாதம் பாணிபாயுரு
பத்தம்வசனகமன தான
விசர்க்கமானந்தமென் றறிவைக்கு
மல்லதுமனோபுத்தி யாங்காரசித்த
முயிராவுமானமா வொன்றொடுமொமெனச்
செப்பியதிறமுங் கேட்டுவைசேடிக
நின்வழக்குரை யென்னப்பொய்தீர்
பொருளுங் கரணமுங்கருமமுஞ்
சாமானியமும் விசேடமுங்கூட்டமு
மாமாறுகூறுமதிற் பொருளென்பது
குணமுந்தொழிலு முடைத்தாயெத்தொகைப்
பொருளுக்குமேதுவாம் பொருளொன்பான்

ஞாலநீர்தீ வளியாகாயந்
திசைகாலமான் மாவாகுமிவற்று
ணிலங்கருதி-யொலியூறுநிறஞ்சுவைநாற்றமொடைந்து
மயில்குணமுடைத்து நின்றநான்கு
சுவைமுதலொரோகுண மவைகுறையுடைய
வோசையூறுநிறநாற்றஞ்சுவையே
மாசில்பெருமைசிறுமை வன்மை
மென்மைசீர்மைநொய்மை வடிவமெனு
நீர்மைபக்க முதலவனேகங்
கண்ணியபொருளின் குணங்களாகும்
பொருளுங்குணமுங் கருமமுமியற்றற்
குரியவுண்மைதருமுறைப் பொதுதான்
போதலுநிற்றலும் பொதுக்குணமாதலிற்
சாதலுநிகழ்தலும் பொருட்டன்மை
யென்றணுக்கூட்டமுங்குணமுங்குணியு
மொன்றியவாதியுமுரைத்தனனுடனே
பூதவாதியைப்புகனீயென்னத்
தாதகிப்பூவுங்கடியுமிட்டு
மற்றுங்கூட்டமுமதுக்களிபிறந்தாங்
குற்றிடும்பூதத்துணர்வுதோன்றிடு
மவ்வுணர்வப்பூதத்தழிவுகளின்
வேறுவகையுறியப்பறையோசையிற்
கெடுமுயிரொடுகூட்டியவுணர்வும்
பூதமுமுயிரில்லாவுணர் வில்பூதமும்
அவ்வப் பூதவழியவைபிறக்கு
மெய்வகையிதுவே வேறுரைவிகற்பமு
மெய்பொருளுமுலகாயதனுணர்வே
கண்கூடல்லது கருத்தளவழியு
மிம்மையுமிம்மைமயனுமெப்பிறப்புமிதளப்போ
பொய்மை மறுமையுண்டாய்வினைதுய்த்த
லென்றலுமெல்லாமார்க்கமுங்கேட்டு
நன்றலவாயினுநான்மாறுரைக்கிலன்
பிறந்த முற்பிறப்பையெய்தப்பெறுதலி
னறிந்தோருண்டோவென்று நக்கிடுதலுந்
தெய்வமயக்கினுங்கனவுறுதிறத்தினு
மையவுறுவார்மனம்வேறும்வகை
யையமன்றியில்லையென்றலுநின்
றந்தைதாயரையனுமானத்தல்ல
திந்தஞாலத்தெவ்வகையறிவாய்
மெய்யுணர்வின்றி மெய்ப்பொருளுணர்வரிய
வையமல்லதறுதிச் சொற்பெறு

றுளவரிச்சோல்மோ ஒன்னியபொருளுரைத்
தைவகைச்சமயமு மறிந்தேனங்கென.

சமயக்கணக்கர் தந்திறங் கேட்டகாதை
முற்றிற்று.

## இருபத்தெட்டாவது
## கச்சிமாநகர்புக்ககாதை

ஆங்குத்தாயரோடறவணர்த்தேர்ந்து
வாங்குவிற்றானைவானவன்மகிழ்ச்சி
வேற்றுமன்னருமுழிஞைவெம்படைப்போர்ப்
புறஞ்சுற்றியபுறக்குடிகடந்து
சுருங்கைத்தூம்பின்மனைவளர்கோதையர்
கருங்குழல்கழீஇய கலவைநீரு
மெந்திரவாவி யிளையருமகளிருந்
தந்தமிலாடிய சந்துகழிநீரும்
புவிக்காவலன்றன் புண்ணியநன்னாள்
சிவிறியுங்கொம்புஞ் சிதறுவிரைநீரும்
மேலைமாதவர் பாதம்விளக்குஞ்
சீலவுபாசகர் செங்கைநீரு
மறஞ்செய்மாக்க ளகின்முதல்புகைத்து
நிறைந்தபந்தற் றசும்புமாநீரு
* முறுப்புமுருமற் கந்தவுந்தியினாற்
செறித்தரைப்போர்தஞ் செழுமணிநீரு
மென்றிந்நீர்க ளெங்கும் பரத்தலிற்
கன்றியகாரமு மிடங்கருமீன்களு
மொன்றியபுலவொழி யுடம்பினவாகித்
தாமரைகுவளை கழுநீராம்பற்
பூவிரைபரந்து பொறிவண்டார்ப்ப
விந்திரதனுவென விலங்கக்கழுத்து
வந்தெறிபொறிகள் வகைமாண்புடைய
கடிமதிளோங்கிய விடைநிலைவரைப்பிற்

* 'உறுப்புமுரானுருமல்' என்றும்பாடம்.

பசுமிளைநிறைந்து பஃறொழினிறைந்த
வெள்ளிக்குன்ற முள்கிழிந்தென்ன
நெடுநிலைதோறு நிலாச்சுதைமலருங்
கொடிமிடைவாயில் குறுகினன்புக்குக்
கடைகாப்பமைந்த காவலாளர்
மிடைகொண்டியங்கும் வியன்மலிமறுகும்
பன்மீன்விலைஞர் வெள்ளுப்புப்பகருநர்
கண்ணொடையாட்டியர் காழியர்கூவியர்
புண்ணிணவிலைஞர் பாசவர்வாசவர்
என்னுநர்மறுகு மிருங்கோவேட்களுஞ்
செம்புசெய்ஞ்ஞருங் கஞ்சகாரரும்
பைம்பொன்செய்ஞ்ஞரும் பொன்செய்கொல்லரு
மரங்கொறச்சரு மண்ணீட்டாளரும்
வரந்தரவெழுது மோவியமாக்களுந்
தோலின்றொழிலருந் துன்னுவினைஞரு
மாலைகாரருங் காலக்கணிதரு
நலந்தருபண்ணுந் திறனும்வாய்ப்ப
நிலங்கலங்கண்ட நிகழக்காட்டும்
பாணரென்றிவர் பல்வகைமறுகும்
விலங்காம்பொரூஉம் வெள்வளைநேரா
டிலங்குமணிவிலைஞரிரீஇயமறுகு
மாகதர்சூதர் வேதாளிகர்மறுகும்
போகம்புரக்குமவர் போலிமறுகும்
கண்ணுழைகல்லா நுண்ணூற்கைவினை
வண்ணவறுவையர் வளந்திகழ்மறுகும்
பொன்னுரைகாண்போர் நன்மனைமறுகும்
பன்மணிபகர்வோர் மன்னியமறுகு
மறையோர்மாத்தொழில் குறையாமறுகு
மரசியன்மறுகு மமைச்சியன்மறுகு
மெனைப்பெருந்தொழில்செ யேனோர்மறுகு
மன்றமுங்கவலையுஞ் சந்தியுஞ்சதுக்கமும்
புதுக்கோள்யானையும் பொற்றேர்ப்புரவியுங்
கதிக்குறைவடிப்போர் கவின்கொள்வீதியுஞ்
சேணோங்கருவி தாழ்ந்தசெய்குன்றமும்
வேணவாமிகுக்கும் விரைமரக்காவும்

விண்ணவர்தங்கள் விசும்பிடைமறைந்து
நண்ணுதற்கொத்த நன்னீரிடங்களுஞ்
சாலைகுங்கூடமுந் தமனியப்பொதியிலுங்
கோலங்குயின்ற கொள்கையிடங்களுங்
கண்டுமகிழ்வுற்றுக் கொண்டவேடமோ
டந்தரசாரிக ளமர்ந்தினிதுறையு
மிந்திரவிகார மெனவெழில்பெற்று
நவையறுநாத னல்லறம்பகர்வோ
ருறையும்பள்ளிபுக் கிறைவனைநல்லாள்
கோவலன்றாதை மாதவம்புரிந்தோன்
பாதம்பணிந்துதன் பாத்திரதானமுந்
தானப்பயத்தாற் சாவகமன்ன
னூனமொன்றின்றி யுலகாள்செல்வமுஞ்
சேவற்குணர்ந்த தீவகப்பீடிகை
யொல்காதுகாட்டப் பிறப்பினையுணர்ந்தது
முணர்ந்தோர்முன்ன ருயர்தெய்வந்தோன்றி
மணங்கவல்கெடுத்தது மாநகர்கடல்கொள
வற்றுணரடிகளுந் தாயருமாங்கு
விட்டிறவாம விப்பதிபுகுந்ததூஉங்
கெட்டதுஞ்சாவக மன்னன்றன்னோ
டெய்தத்தீவகம்வலமிட்டுத் திருநகர்புகுந்ததும்
புக்கமளிந்தப் பொய்யுருவுடனே
தக்கசமயிக டந்திறங்கேட்டதும்
அவ்வவர்சமயத் தறிபொருளெல்லாஞ்
செவ்விதன்மையிற் சிந்தைவையாதிது
நாதனல்லறங் கேட்டலைவிரும்பி
மாதவற்சேர்ந்து வந்தவண்ணமுஞ்
சொல்லினளாகலிற் றூயோய்நின்னையென்
னல்வினைப்பயன்கொ ணன்கண்டதுவென
தையல்கேணின் றாதையுந்தாயுஞ்
செய்ததீவினையையிற் செழுநகர்கேடுறத்
துன்புறவிளிந்தமை கேட்டுச்சுகத்த
னன்புகொளறத்திற் கருகனேனாதலின்
மனைத்திறவாழ்க்கையை மாயமென்றுணர்ந்து
தினைத்துணைதானுஞ் செல்வமும்யாக்கையு

நிலையாதென்றே நிலைபெறவுணர்ந்து
மலையாவறத்தின் மாதவம்புரிந்தனென்
புரிந்தியானிப் பூங்கொடிபெயர்ப்படுந்
திருந்தியநன்னகர் சேர்த்ததுகேளாய்
குடக்கோச்சேரலன் குட்டுவர்பெருந்தகை
விடாச்சிலைபொறித்த வேந்தன்முன்னாள்
துப்படுசெவ்வாய்த் துடியிடையாரொடு
மிப்பொழில்புகுந்தாங் கிருந்தவெல்லையு
ளிலங்காதீவத்துச் சமனொளியென்னுஞ்
சிலம்பிணையெய்தி வலங்கொண்டுமீளுந்
தருமசாதனர் தன்னின்மூத்தோர்
கருமுகிற்படலத்துக் ககனத்தியங்குவோ
ரரசிற்கேது வவ்வழிநிகழ்தலிற்
புரையோர்தாமும் பூம்பொழிலிழிந்து
கற்றலத்திருந்துழிக் காவலன்விரும்பி
முற்றவமுடைமையின் முனிகளையேத்திப்
பங்கயச்சேவடி விளக்கிப்பான்மையி
னங்கவர்க்கறுசுவை நால்வகையமிழ்தம்
பாத்திரத்தளித்துப் பற்பலசிறப்பொடு
வேத்தவையாரொடு மேத்தினனிறைஞ்சலின்
பிறப்பிற்றுன்பமும் பிறவாவின்பமு
மறத்தகைமுதல்வ னருளியவாய்மை
யின்பவாரமு திறைவன்செவிமுதற்
றுன்பநீங்கச் சொரியுமந்நாள்
பெருந்தானைக்கொன்பது வழிமுறைமுன்னோன்
கோவலன்மன்னவன் றனக்குநீங்காக்
காதற்பாங்க னாதலிற்றுங்கா
நல்லறந் தானுங்கேட்டு
முன்னோர்முறைமையிற் படைத்ததையன்றித்
தன்னனியன்ற தனம்பலகோடி
யேழுநாளெல்லை யிரவலர்க்களித்துத்
தொழுதவம்புரிந்தோன் சுத்தற்கியற்றிய
வானோங்குசிமையத்து வால்வளைசயித்த
வேனோர்க்கெல்லா மிடர்கெடவியன்று
கண்டுதொழுதேத்துங் காதலன்வந்தித்

தண்டாக்காட்சித் தவத்தோரருளிக்
காவிரிப்பட்டினங் கடல்கொளுமென்ற
தூவுரைகேட்டுத் துணிந்திவணிருந்தி
னின்னுங்கேளாய் நன்றிமாதே
தீவினையுருப்பச் சென்றநின்றாதையுந்
தேவரிற்றோற்றமுஞ் செய்தவப்பயத்தால்
ஆங்கத்தீவினை யின்னுந் துய்த்துப்
பூங்கொடி முன்னவள் போதியாநல்லறந்
தாங்கியதவத்தாற் றன்றவன்றாங்கிக்
காதலிதன்னொடு கபிலையம்பதியி
னாசறநல்லறங் கேட்டுவீடெய்துமென்
றற்புதக்கிளவி யறிந்தோர்கூறச்
சொற்பயமுணர்ந்தேன் றோகையானு
மந்நாளாங்கவன் றன்னெறிகடவேன்
நின்னதுதன்மையி னெடுநிலைக்கந்திற்
றுன்னியதுவதிக னுரையிற்றுணிந்தனை
தவநெறியறவணன் சாற்றக்கேட்டனை
யாங்கவன்றானுநின் னறத்திற்கேது
பூங்கொடிகச்சி மாநகராதலின்
மற்றவம்மாநகர் மாதவன்பெயர்நாள்
பொற்றொடிதாயரு மப்பதிபடர்ந்தன
ரன்னதையன்றியு மணியிழைகேளாய்
பொன்னெயிற்காஞ்சி நாடுகவினழிந்து
மன்னுயிர்மடிய மழைவளங்கரத்தலி
னந்நகர்மாதவர்க்கையமிடுவோ
ரின்மையினிந்நக ரெய்தினர்காணு
யாருயிர்மருந்தே யந்நாட்டகவயிற்
காரெனத்தோன்றிக் காத்தனன்கடனென
வருந்தவனருள வாயிழைவணங்கித்
திருந்தியபாத்திரஞ் செங்கையினேந்திக்
கொடிமதின்மூதூர்க் குடக்கணின்றோங்கி
வடதிசைமருங்கின் வானத்தியங்கித்
தேவர்கோமான் காவன்மாநகர்
மண்மிசைக்கிடந்தென வளந்தலைமயங்கிப்
பொன்னகர்வறிதாய்ப் புல்லென்றாயது

கண்டுளங்கசிந்த வொண்டொடிநங்கை
பொற்கொடிமூதூர்ப் புரிசைவலங்கொண்டு
நடுநகரெல்லை நண்ணினளழிந்து
தொடுகழற்கிள்ளி துணையிளங்கிள்ளி
செம்பொன்மாச்சினைத் திருமணிப்பாசடைப்
பைம்பூம்போதிப்பகவற்கியற்றிய
* சேதியந்தொழுது தென்மேற்காகத்
தாதணிபூம்பொழி றான்சென்றெய்தலும்
வையங்காவலன் றன்பாற்சென்று
கைதொழுதிறைஞ்சிக் கஞ்சுகனுரைப்போன்
கோவலன்மடந்தை குணதவம்புரிந்தோ
ளுவலந்தீவிற் றனனிமிக்கோ
ளங்கையினேந்திய வமுதசுரபியொடு
தங்காதிப்பதித் தருமதாவனத்தே
தேய்ந்துதோன்றினன் மாமழைபோலென
மந்திரச்சுற்றமொடு மன்னனும்விரும்பிக்
கந்திற்பாவை கட்டுரையெல்லாம்
வாயாகின்றேன் வந்தித்தேத்தி
யாய்வளைநல்லா டன்னுழைச்சென்று
செங்கோல்கோடியோ செய்தவம்பிழைத்தோ
கொங்கவிழ்குழலார் கற்புக்குறைபட்டோ
நலத்தகைநல்லாய் நன்னாடெல்லா
மலத்தற்காலை யாகியதறியேன்
மயங்குவேன்முன்னரோர் மாதெய்வந்தோன்றி
யுயங்காதொழிநின் னுயர்தவத்தாலோர்
காரிகைதோன்று மிவள்பெருங்கடிஞையி
னாருயிர்மருந்தா லகனிலமுய்யு
மாங்கவளருளா லமரர்கோனேவலிற்
றங்காமாரியுந் தானனிபொழியு
மந்நாளிந்த வகனகர்புகுந்த
பின்னணிகழும் பேரறம்பலவாற்
கார்வறங்கூரினு நீர்வறங்கூராது
பாரகவீதியிற் பண்டையோரிழைத்த
கோமுகியென்னுங் கொழுநீரிலஞ்சியொடு

* 'செய்தியந்தொழுது' என்றும் பாடம்.

மாமணிப்பல்லவம் வந்ததீங்கெனப்
பொய்கையும்போதியிலும் புனைமினென்றறைந்த
தெய்வதம்போயபிற் செய்தியாயமைத்த
திவ்விடமென்றேயவ்விடங்காட்டத்
தீவகம்போன்ற காவகம்பொருந்தக்
கண்டுளஞ்சிறந்த காரிகைநல்லாள்
பண்டையெம்பிறப்பினைப் பான்மையிற்காட்டிய
வங்கப்பீடிகை யிதுவெனவறவோன்
பங்கயப்பீடிகை பான்மையின்வகுத்துத்
தீவதிலகையுந் திருமணிமேகலா
மாபெருந்தெய்வந் தன்னையும்வந்தித்
தேத்துதற்கோயி லுளத்தகப்புனைந்து
விழவுஞ்சிறப்பும் வேந்தணியற்றத்
தொழுதகைமாதர் துதித்தனரேத்திப்
பங்கயப்பீடிகைப் பசிப்பிணிமருந்தெனும்
மங்கையினேந்திய வமுதசுரபியை
வைத்துநின்றெல்லா வுயிரும்பெருங்கனப்
பைத்தவல்குற்பாவைதன்களவின்
மொய்த்தலூவறு பாடைமாக்களிற்
காணார்கேளார்கான்முடமானோர்
பேணுமாக்கள் பேசார்பிணித்தோர்
படிவநோன்பினர் பசிநோயுற்றோர்
மடிநல்கூர்ந்த மாக்கள்யாவரும்
பன்னூறாயிரம் விலங்கின்றொகுதியு
மன்னுயிரடங்கலும் வந்தொருங்கீண்டி
யருந்தியோர்க்கெல்லா மாருயிர்மருந்தாம்
பெருந்தவர்கைபெய் பிச்சையின்பயமு
நீருநிலமுங் காலமுங்கருவியுஞ்
சீர்பெறவித்திய வித்தின்விளைவும்
பெருகியதென்னப் பெருகவவள்சுரப்ப
வசித்தொழிலுதவி வளந்தந்ததுவெனப்
பசிப்பிணிதீர்த்த பாவையையேத்திச்
செல்லுங்காலைத் தாயர்தம்முட
னல்லவைகடிந்த வறவணவடிகளு
மல்லன்மூதூர் மன்னுயிர்முதல்வி

நல்லறச்சாலை நண்ணினர்சேறலுஞ்
சென்றவர்தம்மைத் திருவடிவணங்கி
நன்றெனவிரும்பி நல்லடிகழுவி
யாசனத்தேற்றி யறுசுவைநால்வகைப்
போனகமேந்தப் பொழுதினிற்கொண்டபின்
பாசிலைத்திரையலும் பளிதமும்படைத்து
வாய்வதாகவென மனப்பாடீமென
மாயைவிட்டிறைஞ்சினண் மணிமேகலையென.

கச்சிமாநகர் புக்ககாதை

முற்றிற்று

---

## இருபத்தோன்பதாவது

## தவத்திறம்பூண்டு தருமங்கேட்டகாதை.

இறைஞ்சியநின்ற விளங்கொடிவாழ்த்தி
யறந்திகழ்நாவி னறவணனுரைப்போன்
வென்றிவேற்கிள்ளிக்கு நாகநாடாள்வோன்
றன்மகள்பீலி வளைதான்பயந்த
புனிற்றிளங்குழவியைத் தீவகம்பொருந்தித்
தனிக்கலக்கம்பளச் செடிகைத்தாலும்
வணங்கிக்கொண்டவன் வங்கமேற்றிக்
கொணர்ந்திடுமந்நாள் கூரிருளடைகரை
யம்பிக்கெடுத்தோன் மைந்தனைக்காணு
தாசற்குரைத்தலு மவனயர்வுற்று
விரைவினன்றேடி விழாக்கோண்மறப்பத்
தன்விழாஅத்தவிர்தலின் வானவர்தலைவ
னின்னுயிர்த்தந்தை நெடுங்குலத்துதித்த
மன்னுயிர்முதல்வன் மகரவேலையுண்
முன்னியவங்க மூழ்கிக்கேடுறப்
பொன்னினூசி பசுங்கம்பளத்துத்
துன்னியதென்னத் தொடுகடனீந்துழி
யேழுநாளெல்லை யுருவுவந்தெய்த
வழுவாச்சீலம் வாய்மையிற்கொண்ட
பான்மையிற்றனது பாண்டுகம்பளந்
தானடுக்குற்ற தன்மைநோக்கி

யாதிமுதல்வன் போதிமூலத்து
நாதனுவா னளிநீர்ப்பரப்பி
னெவ்வமுற்றூ னெவ்வந்தீரெனப்
பௌவத்தெடுத்துப் பார்மிசையுற்றவு
மறவரசாளவு மறவாழியுருட்டவும்
பிறவிதோறுதவவும் பெற்றியனென்றே
சாரணரறிந்தோர் காரணங்கூற
வந்தவுதவிக் காங்கவள்பெயரைத்
தந்தையிட்டன னினைத் தையனின்றுறவியு
மன்றேகனவி னனவெனவறைந்த
மென்பூமேனிமணி மேகலாதெய்வ
மென்பவட்கொப்பவ ளிடுசாபத்து
நகர்கடல்கொள்ளநின் றூயருநானும்
பகருநின்பொருட்டா விப்பதிபடர்ந்தன
மென்றலுமறவண னடியிணையிறைஞ்சிப்
பொன்றிகழ்புத்த பீடிகைபோற்றுந்
தீவதிலகையு மித்திறஞ்செப்பின
ளாதலினந்த வணிநகர்மருங்கே
வேற்றுருக்கொண்டு வெவ்வேறுரைக்கு
நூற்றிறச்சமய நுண்பொருள்கேட்டே
யவ்வுருவென்ன வைவகைச்சமயமுஞ்
செவ்விதன்மையிற் சிந்தையின்வைத்திலெ
னடிகள்கண்டுமெய்ப் பொருளருளுகவென
நொடிவணங்கை நுண்ணிதிற்கேணீ
யாதிசினேந்திர னளவையிரண்டே
பேதமில்பிரத்தியங் கருத்தளவென்னச்
சுட்டுணர்வைகப் பிரத்தியமெனச்சொலி
விட்டனர்நாம சாதிகுணக்கிரியைகள்
மற்றவையனுமானத் திடையுமெனக்
காரணகாரியஞ் சாமானியக்கருத்
தோரிற்பிழைக்கையு முண்டுபிழையாவது
கனலிற்புகைவபோற் காரியக்கருத்தே
யேனையளவைக ளெல்லாங்கருத்தினி
லானமுறைமையி னனுமானமாம்பிற
பக்கமேதுத்திட்டாந்த முபநயமென
வந்துளவவற்றிற் பக்கமிம்மலை
நெருப்புடைத்தென்றல் புகையுடைத்தாதலெனல்
பொருந்துமேதுவகை யமையடுக்களைபோற்
றிட்டாந்தமுபநய நிதுமலையும்புகையுடைத்தே
நெருப்புடைத்தல்லா தியாதொன்றதுபுகை
பொருத்தமன்று புலன்போலென்றல்

மேயவிப்பக்கத்துமீட்சிமொழியா
யாயவைதன்மிய திருட்டாந்தமாகுந்
தூயவேது சுபாவமாயிற்
சத்தமநித்த மென்றல்பக்கம்
பண்ணப்படுதலாலெனல்பக்கந்
தன்வசனமாகும் யாதொன்றுயாதொன்று
பண்ணப்படுவதநித்தியங் கடம்போலெனல்
சபக்கத் தொடர்ச்சியா தொன்றநித்தமல்லாதது
பண்ணலாகா தாகாசம்போலென்றல்
விபகத்துத்தொடர்ச்சி மீட்சிமொழியென்ற
வந்நுவயத்திற் பிரமாணமாவதிவ்
வெள்ளிடைக்கட் குடமில்லையென்றல்
செவ்வியல்பக்கந் தோன்றுமையினெனல்
பக்கதன்ம வசனமாகு
மின்மையிற்கண்டில முயற்கோடென்ன
லந்நெறிசபக்கம் யாதொன்றுண்டது
தோற்றரவுடுக்குங் கைநெல்லிபோலென
வேற்றவி பக்கத்துரையெனலாகு
மிவ்வகையேதுப் பொருள்சாதிப்பன
வென்னைகாரியம் புகைசாதித்தல்
புகையுளவிடத்து நெருப்புண்டென்னு மநுவயத்தானு
நெருப்பில்லாவிடத்துப் புகையில்லையென்னும் வெதிரேகத்
புகைநெருப்பைச் சாதித்ததென்னின் [தானும்
எரியப் புகையினிகழ்ந்துண்டான
வூர்திச் சாமவண்ணங்கடைசாமம்
வாய்த்தநெருப்பின்வரு காரியமாதலின்
மேனோக்கிக்கறுத்திருப்பப் புகைத்திருப்பத்
தானெருப்பைச்சாதிக்க வேண்டுமென்
றநுவயஞ்சாதிக்கின் முன்னுங்கழுதையுங்
கணிகையுந்தம்மி லொருகாலத்தோரிடத்தென்
றநுவயங்கண்டாற் பிற்காலத்துங்
கணிகையைக்கண்ட விடத்தேகழுதையை
யநுவயிக்கவேண்டுமது கூடாது
நெருப்பில்லாவிடத்துப் புகையில்லையெனநேர்
திருத்தகுவெதிரேகஞ் சாதிக்குமெனி
னுபவாலில்லாக் கழுதையின்பிடரி
னரிவாலுமிலையாகக் காணப்பட்டவத்தனையே
கொண்டுபிறிதோரிடத்துநரிவாலி
னுய்வாலையனுமிக்க வரிதாமதனை துவுமாகா
தொட்டியவுபநய நிகமனமிரண்டுந்
திருட்டாந்தத்திலே சென்றடங்கும்

பக்கமேதுத் திருட்டாந்தங்க
ளொக்கநல்லவுந் தீயவுமுளவதின்
வெளிப்பட்டுள்ள தன்மியினையும்
வெளிப்பட்டுள்ள சாத்தியதன்மத்திறம்
பிறிதிலவேறும் வேறுபாட்டினையுந்
தன்கட்சாத்திய நயந்தருதலுடையது
நன்கெனப்பக்கமென நாட்டுகவதுதான்
சத்தமநித்தநின்ற வொன்றொன்றைப்
பற்றிநாட்டப் படுவதுதன்மி
சத்தஞ்சாத்திய தன்மமாவது
நித்தாநித்த நிகழுநல்லேது
மூன்றாய்த்தோன்றி மொழிந்தபக்கத்
தூன்றிநிற்றலுஞ் சபக்கத்துண்டாதலும்
விபக்கத்தின்றி யிடுதலுஞ்சபக்கஞ்
சாதிக்கப் பொருடன்னொற்பக்கத்
தோதியபோது வகையொன்றிருத்தல்
சத்தவநித்தஞ் சாத்தியமாயின்
ஒத்தவநித்தங் கடாதிபோலெனல்
விபக்கம் விளம்பின்
யாதொன்றியா தொன்றநித்தமொன்று
பண்ணப்படாததா காசம்போலொன்றுகும்
பண்ணப்படுதலுஞ் செயலிடத்தொன்றலும்
நண்ணியபக்கஞ் சபக்கத்திலுமாய்
விபக்கத்தின்றிய நித்தத்தினுக்கு
மிகத்தகுமேதுவாய் விளங்கிற்றென்க
ஏதமில்திட்டாந் தம்மிருவகைய
சாதன்மியமவை தன்மியமென்னச்
சாதன்மியமெனப் படுவதநித்தங்கடத்
தந்நுவயத்தென்க வைதன்மியதிட்டாந்தஞ்
சாத்தியமெய்தா திடத்திலேதுவுமின்மை
இத்திறனல்ல சாதனத்தொத்தன
தீயபக்கமுந் தீயவேதுவும்
தீயவெடுத்துக் காட்டுனமாறுன
பக்கப்போலியு மேதுப்போலியுந்
திருட்டாந்தப்போலியுமென விவற்றுட்
பக்கப்போலியுமொன்பது வகைப்படும்
பிரத்தியபக்கம்விருத்தமனுமானம்
சுவசனவிருத்த முலோகவிருத்த
மாகமவிருத்தம் பிரமசித்தவிசேடண
மப்பிரசித்தியவிசேடிய மப்பிரசித்தோ
பயமப்பிரசித்த சம்பந்தம்மென
வெண்ணியவிவற்றுட் பிரத்தியபக்கவிருத்தங்

கண்ணியகாட்சி மாறுகொளலாகும்
சத்தஞ்செவிக்குப் புலனென்றன்றெனல்
மற்றநுமான விருத்தமாவது
மானவிருத்த மெழுவதுகருத்தளவை
மாறுக்கூறலநித்திய கடத்தைநித்தியமெனல்
சுவசனவிருத்தந் தன்கோலமாறி
யம்பலென்றாய் மலடியென்றேயியம்ப
லுலகவிருத்த முலகமுறையிற்
குமதிசந்திர னல்லவென்ற
லாகமவிருத்தந் தன்னூன்மாற்றைதனுரைக்கி
லருத்தவாதியாயுள்ளவை சேடிக
னித்தசுத்த நித்தியமெனநுவற
லப்பிரசித்த விசேடணமாவது
தத்தமெதிரிக்குச் சாத்தியந்தெரியாமை
பவுத்தன்மாறாய் நின்றசாங்கியனைக்
குறித்துச்சத்த மவிநாசியென்றா
லவனவிநாசி வாதியாதலிற்
சாத்தியவிஞசமப்பிரசித்தமாகும்
அப்பிரசித்த விசேடியமாவது
தன்மியெதிரிக்குத்தன்மிபிரசித்த
மின்றியிருத்தல் சாங்கியன்மாறாய்
நின்றபௌத்தனைக்குறித்தநமற்ச்செய்தன்
னியமானனென்றாலவனான்மவாதி
ஆதலிற்றன்மியப்பிரசித்தமப்பிரசித்தத்
தொய்யமாவது
மாறானோர்க்குத் தன்மிசாத்திய
மேறாப்பிரசித்த மாயிருத்தல்பகர
வைசேடிகன்பவுத்தனைக்குறித்துச்
சுகமுதலியதொ ழைகப்பொருட்குக்
காரணமான்மா வென்றாற்சுகமு
மான்மாவுந்தானிசை யாமையி
னப்பிரசித்த மப்பிரசித்தசம்பந்தமாவ
தெதிரிகருதியிருந்த பொருள்சாதிக்கை
மாறும்பவுத்தற்குச் சத்தவநித்தங்
கூறிலவன் கொள்கையதாதலில்
வேறுசாதிக்க வேண்டாதாகும்
ஏதுப்போலி யோதின்மூன்றாகும்
சித்தமநேகாந் திகம்விருத்தமென
உபயாசித்த மன்னியதாசித்தம்
சித்தாசித்த மாச்சரியசித்த
மெனநான்காகு முபயாசித்தமாவது

வன்னியதாசித்த மாறாய்நின்றாற்
குன்னியவேதுவன்றா யொழிதல்
சத்தஞ்செயலுறுதலி னித்தமென்னிற்
சித்தவெளிப்பாடல்லதுசெயலுற
லுய்த்தசாங்கியனுக்கசித்தமாகுஞ்
சித்தாசித்தமாவதேது
சங்கயமாயசாதிநிச்சயித்த
வாவிபனியெனவையுறாநின்றே
தூயபுகைநெருப்புண்டெனத்தெளித
லாசிரியசித்தமாறானவனுக்
கேற்றதன்மியின்மை காட்டுதலாகாசஞ்
சத்தகுணத்தாற் பொருளாமென்னி
னாகாசம் பொருளல்லவென்பானுக்குத்
தன்மியசித்தமனைகாந்திகமுஞ்
சாதாரணவசாதாரண சபக்கைகத்
தேசவிருத்தி விபக்கதேசவிருத்தி
விருத்தாவியாபிசாரியென்றறு சாதாரணஞ்
சபக்கவிபக்கத்துக்கு மேதுபொதுவாயிருத்தல்
சத்தமநித்த மறியப்படுதலினென்றா
லறியப்படுதெனித்தாநித்த மிரண்டுக்குஞ்
செறியுங்கடம்போ லநித்தத்தறிவோ
வாகாசம்போல நித்தத்தறிவோ
வென்னல் சாதாரணமாவதுதா
னன்னியபக்கத் துண்டாமேதுச்
சபக்கவிபக்கந்தன்னினின்றாதல்சத்தநித்த நித்தங்கேட்கப்
படுதலினென்னிற் கேட்கப்படலெனு
மேதுப்பக்கத்துளதாயி னல்லது
சபக்கவிபக்கத்து மிடத்தாதலிற்
சங்கயமெய்தியனை காந்திகமாஞ்
சபக்கதேசவிருத்தி விபக்கவியாபியாவ
தேதுச்சபக்கத் தோரிடத்தெய்தி
விபக்கத்தெங்கு முண்டாதலாகுஞ்
சத்தஞ்செய விடைத்தோன்றாதாகு
நித்தமாகலினென்றா னித்தமென்ற
லேதுச்செய விடைத்தோன்றாமைக்குச்

சுபக்கமின்னினு மாகாசத்தினு
மின்னினிகழாதாகாசத்தாகலி
னித்தங்கடாதியினொத்தலிற்கடம்போ
லழிந்துசெயலிற் றோன்றுமோமின்போ
லழிந்துசெயலிற் றோன்றாதோவெனல்
விபக்கையாதேசவிருத்திசபக்க
வியாபியாவதேது விபக்கத்
தோரிடத்துற்றுச் சபக்கத்தொத்தியறல்
செயலிடைத் தோன்றலிற்
சொல்லனித்தமெனி னித்தவேதுச்
செயலிடைத் தோன்றற்குவிபக்க
வாகாசத்தினு மின்னிமின்னிகழ்ந்
தாகாசத்துக்காணாது சபக்ககடாதிக
டன்னினோங்குமா யேகாந்தமல்ல
மின்போலநித்தமாய்ச் செயலிடைத்தோன்றாதோ
குடம்போலநித்தமாய்ச் செயலிடைத்தோன்றுமோ
வென்னுமுபையைகதேசவிருத்தி
யேதுச்சபக்கத்தினும் விபக்கத்தினுமாகி
யொரோதேசத்து வாதித்தல்
சத்தநித்த மூர்த்தமாதலினெனின்
மூர்த்தவேது நித்தத்தினுக்குச்
சபக்கவாகாச பரமாணுக்களி
னாகாசத்துநிகழ்ந்து மூர்த்தமாம்
பரமாணுவி னிகழாமையானும்
விபக்கமான கடாகசுகாதிகளிற்
சுகத்துநிகழ்ந்து கடத்தொழிந்தமையினு
மேகதேசத்துநிகழ்ந் தேகாந்த
மன்றமூர்த்தமாகாசம்போலநித்தமோ
வமுதவணுமூர்த்தமாய்ச்சுகம்போல நித்தமோவெனல்
விருத்தவியாபிசாரியாவது
விருத்தவேதுவிற்கு மிடங்கொடுத்தல்
சத்தமநித்தஞ் செயலிடைத்தோன்றலி
னொத்ததெனின்ச் செயலிடைத்தோன்றற்குச்
சபக்கமாயுள்ள கடாதிநிற்கச்
சத்தநித்தங் கேட்கப்படுதலிற்

சத்தத்துவம்போலெனச் சாற்றிடுதெ
லிரண்டினுஞ்சங்கயமா யேகாந்தம்பல
விருத்தந்தன்னைத் திருத்தகவிளம்பிற்
றன்மசரும விபரிதசாதனந்
தனந்தனமாகச் சருபவிபரிதஞ்
சாதனதன் மசருபவிபரிதஞ்
சாதனதன்ம விசேடவிபரிதஞ்
சாதனமெனத்தச்ச சருபவிபரிதஞ்
சானதஞ்சொன்ன வேதுவிற்சாத்தியந்
தன்மத்துருவங் கெடல்சாத்த
நித்தம்பண்ணைப் படுதலினென்றூற்
பண்ணப்படுவெதநித்தமாதலிற்
பண்ணைப்பட்ட வேதுச்சாத்திய
தன்மநித்தத்தை விட்டநித்தஞ்
சாதித்தலான் விபரிதந்தன்மவிசேட
விபரிதசாதனஞ் சொன்னவேதுச்
சாத்தியதன்மந் தன்னிடைவிசேடங்
கெடச்சாதித்தல் கண்ணறிவொக்கு
மிந்தியங்களெண்ணில் பாரத்தந்தொகுத்து
நிற்றலினூற் சயனசயனங்கள்போ
லொன்றூற்றொருத்து நிற்றலினென்கின்ற
வேதுச் சயனசயனத்தின்
பாரத்தம்போலக் கண்முதலிந்தியங்
களையும்பாரத்தத்திற் சாதித்துச்சய
னடானைப்போலாகிக் கண்முத
லிந்தியத்துக்கும் பானுய்ச்சாதிக்கி
னிரவயமாயுள்ள வாற்பாவைச்சாவயமாச்
சாதித்துச்சாத்தியதன் மத்தின்விசேடங்
கொடுத்தலின் விபரிதந்தன்மிச்சருப
விபரிதசாதனந் தன்மியுடைய
சருபமாத்திரத்தினை யேதுத்தானே
விபரிதப்படுத்தல் பாவந்திரவியங்
கன்மமன் றுகுணமன்றெனத் திரவியமா
யெக்குணங்கன்மத் துண்மைவேறுதலிற்
சாமானியவிசேடம் போலென்றூற்

பொருளுங்குணமுங் கருமமுமொன்றாய்
நின்றவையிற்றினிடை யுண்மைவேறுதலா
லென்றுகாட்டப்பட்ட வேதுமூன்றினுடை
யுண்மையேதுப் படுத்தும்பொருளா
முண்மைசாத்தியத் தல்லாமையினுந்
திருட்டாந்தத்தினுட் சாமானியவிசேடம்
போக்கிப்பிறிதொன் றிலாமையானு
மயபாவமென்று பகர்ந்ததன்மியினை
யபர்வமாக்குதலான் விபரீதம்
தன்மிவிசேட விபரிதசாதனந்
தன்மிவிசேட வபாவஞ்சாதித்தன்
முன்னங் காட்டப்பட்டவேதுவே
பாவமாகின்றது கருத்தாவுடைய
கிரியையாமதனை விபரிதமாக்கிய
தாதலாற்றன்ம விசேடங்கெடுத்தது
தியவெடுத்துக் காட்டாவனதாமே
திருட்டாந்தவாபாசங்கள்திருட்டாந்த
வாய்பாடிருவகைப் படுமென்றேமுற்
கூறப்பட்டன விங்கவற்றுட்சகா
தன்மியதிருட்டாந்த மாவதோதி
னைந்துவகை யுளதாருஞ்சாதன
தன்மியவிகலமுஞ் சாத்தியதன்ம
விகலமுமுபைய தன்மவிகல்மு
மன்னுவய விபரிதானுவயமென
வதன்மியதிருட்டாந்தமு மைவகைய
சாத்தியாவியாவிருத்திசாதனவியா
விருத்தியுபையாவியா விருத்தியவ்
வெதிரேகம் விபரிதாவெதிரேகமென
விவற்றுட்சாதனதன்ம விகலமாவது
திருட்டாந்தத்திற் சாதனங்குறைவது
சத்தநித்த மூர்த்தமாதலான்
யாதொன்றறியா தொன்றினமூர்த்த
மதுநித்த மாதலாற்காணவற்றது
பரமாணுவிலென்னிற் றிருட்டாந்தப்
பரமாணுநித்தத்தொடு மூர்த்தமாதலாற்

சாத்தியதன்ம நித்தத்துவநிரம்பிச்
சாதனதன்ம மமூர்த்தங்குறையுஞ்
சாத்தியதன்ம விகலமாவது
காட்டப்பட்ட திருட்டாந்தத்திற்
சாத்தியதன்மங் குறைவுபடுதல்
சத்தநித்த மூர்த்தமாதலா
லியாதொன்றியா தொன்றமூர்த்தமாவது
நித்தம்புத்திபோ லென்றாற்
றிருட்டாந்தமாகக் காட்டப்பட்ட
புத்தியமூர்த்த மாய்நின்றே
யநித்தமாதலாற் சாதன்மமூர்த்தத்துவ
நிரம்பிச்சாத்திய நித்தத்துவங்குறையு
மூபையதன் மவிகல்மாவது
காட்டப்பட்ட திருட்டாந்தத்திற்
சாத்தியசாதன மிரண்டுங்குறைதலன்றியு
மதுதானசன்னுவ சனனுமென்றிருவகையா
மவற்றுட் சனனுவுள்ளவுபையதன்மி
விகலமாவதுள்ள பொருட்கட்
சாத்தியசாதனங் கொள்ளுமிரண்டுங்
குறையக்காட்டுதல் சத்தநித்தம்
மூர்த்தமாதலான் யாதொன்றியாதொன்றில்
மூர்த்தமதநித்த மதநித்தங்கடம்போலெனத்
திருட்டாந்தங் காட்டப்பட்டகடந்
தானுண்டாகிச் சாத்தியமாயுள்ள
நித்தத்துவமுஞ் சாதனமாயுள்ள
வமூர்த்தத்துவமுங் குறையும்
சனனுயுள்ள வுபையதன்மவிகல
மில்லாப்பொருட்கண்ணே சாத்தியசாதன
வெல்லையிரண்டுங் குறைய கூட்டுதல்
சத்தமநித்த மூர்த்தமாதலான்
யாதொன்றியாதொன்று மூர்த்தமதனல்
நித்தமதாகாசம்போலெனுந் திருட்டாந்தத்துச்
சாத்தியதன்மமாயுள்ள வநித்தமுஞ்
சாதனதன்மமாயுள்ள மூர்த்தமுமிரண்டுமாச்
சத்தென்பானுக்கதன் கணின்மையானே
குறையுநித்தவமூர்த்த முண்டென்பானுக்

சரித்தகாக வமூர்த்தமாதலா
ல்வனுக்குங்குறையுமன் னுவயமாவது
சாத்தியசாதனந் தம்மிற்கூட்ட
மாத்திரஞ்சொல்லா திரண்டனுடைய
வுண்மையைக்காட்டுதல் சத்தமநித்தங்
கிருதகமாதலின் யாதொன்றி யாதொன்று
கிருத்தமநித்தமெனு மன்னுவயஞ்
சொல்லாதுகுடத்தின் கண்ணேகிருத்த
வநித்தங்காணப் பட்டதென்று
லன்னுயவமதெரியாகும் விபரிதா
னனுவயமவியாபகத் துடையவன்னுவயத்தால்
வியாப்பியம் விதித்தல்
சத்தமநித்தங் கிருதகத்தாலெனின்
யாதொன்றியாதென்று கிருதகமநித்தமென
வியாப்பியத்தால்வியாப
கத்தைக்கருதா தியாதொன்றியாதொன்
றநித்தமது னமியதிருட்டாந்தத்தது
சாத்தியாவி கிருதகமென
வியாபகத்தால் வியாப்பியத்தைக்கருதுத
லப்படிகருதின வியாபகம்வியாப்பி
யத்தையின்றியு நிகழ்தலின்விபரித
மாமவைதன்மிய திருட்டாந்தத்தச்
சாத்தியா வியாவிருத்தியாவது
சாதனதன்மமீண்டுச் சாத்தியதன்ம
மீளாதொழிதல் சத்தநித்தமூர்த்தத்
தொன்றால் யாதொன்றியாதொன்று
நித்தமுமன்றதுவு மூர்த்தமுமன்று
பரமாணுப்போ லெனினப்படி
வைதன்மிய திருட்டாந்தமாகக்
காட்டப்பட்ட பரமாணுநித்தமாய
மூர்த்தமாதலிற் சாதனமூர்த்தமீண்டுச்
சாதனமீளாதொழிதல் சத்தநித்த
மூர்த்தத்தென்றால் யாதொன்றியா
தொன்றநித்தமு மன்றதுமூர்த்தமுமன்று
கன்மம்போல வென்றால்வைதன்மிய
திருட்டாந்த மாகக்காட்டப்
பட்டகன்மமூர்த்த மாயநின்றே
யநித்தமாதலிற் சாத்தியமானநித்தியமு
மன்றுமீண்டு சாதனமாயுள்ள
வமூர்த்தமீளாதுபயா வியாவிருத்தி
காட்டப்பட்டவை தன்மியதிருட்டாந்தத்தி

னின்றுசாதன சாத்தியங்கள்மீளாமை
யன்றியுமுண்மை யினுபாயாவியா
விருத்தியென்னவிருவகை யுண்மையி
னுபயாவியாவிருத்தி யுள்ளபொருட்கட்
சாத்தியசாதன மீளாதயடிவைதன்மிய
திட்டாந்தங்காட்டல் சாத்தநித்தமூர்த்த
மாதலினென்றாற் கியாதொன்றியாதொன்
றநித்தமன்று மூர்த்தமுமன்றா
காசம்போலென்றால் வைதன்மியதிருட்டாந்த
மாகக்காட்டப்பட்டவாகாசம் பொருளென்பார்க்கா
காசத்தின்கண்ணே நித்தமுமூர்த்தமுமாதலால்
சாத்தியநித்தமுஞ் சாதனமாயுள்ள
வமூர்த்தமுமிரண்டுமீண்டில வின்மையி
னுபாயவிருத்தியாவது சத்தமநித்த
மூர்த்தமாதலானென்ற விடத்து
யாதொன்றியாதொன்றநித்தமு மூர்த்தமு
மன்றாமாகாசம்போலென வைதன்மிய
திருட்டாந்தங்காட்ட லாகாசம்போ
லல்லவென்பானுக் காகாசந்தானே
யின்மையினாற் சாத்தியவநித்தமுஞ்
சாதனமூர்த்தமு மீட்சியுமீளாமையு
மில்லையாகுமவ் வெதிரேகமாவது
சாத்தியமில்லாத விடத்துச்சாதன
மின்மைசொல்லாதே விடுதலாஞ்சத்த
சத்தநித்தம்பண்ணப் படாமையாலென்றால்
யாதொன்றியாதொன்று நித்தமன்று
பண்ணப்படுவ தல்லாதுமன்றே
யனுவயவெதிரேகந் தெரியச்சொல்லாதுகுடத்தின்கண்ணே
மநித்தங் கண்டேமாதலாலெனின் [பண்ணப்படுதலு
வெதிரேகந்தெரியாதுவிபரீத
வெதிரேகம்பிறிதிவை தலைதடுமாறாச்
சொல்லுதல் சத்தநித்தமமூர்த்தமாதலி
லென்றுநின்றவிடத்து யாதோரிடத்து
நித்தியமில்லையவ்விடத்த மூர்த்தமில்லை
யெனுதேயாதோரிடத்து மூாத்தமுமில்லை
யவ்விடத்தநித்தமு மில்லையென்றால்
வெதிரேகமாறுகொளு மெனக்கொள்க
நாட்டியவிப்படி தீயசாதனத்தாற்
காட்டுமனுமானுபாசமெய்யும்பொய்யுமித்திறம்விதியா
லையமின்றியறிந்துகொளாய்ந்தென.

தருமங்கேட்டகாதை முற்றும்.

# ௩௦-வது பவத்திற மறுகெனப்பாவை நோற்ற காதை.

---

தாணந்தாங்கிச் சீலந்தலைநின்று
போனபிறப்பிற் புகுந்ததையுணர்ந்தோள்
புத்ததத்தன் மசங்கமென்னு
முத்திரமணியை முறைமையின்வணங்கிச்
சரணாகதியாய்ச் சரணஞ்சென்றடைந்தபின்
முரணாத்திருவற மூர்த்தியைமொழிவோ
ளறிவுவறிதா யுயிர்நிறைகாலத்து
முடிதயங்கமரர் முறைமுறையிரப்பத்
துடிதலோத மொழியத்தோன்றிப்
போதிமூலம் பொருந்தியிருந்து
மாரனைவென்று வீரணாக்கிக்
குற்றமூன்று முற்றவறுக்கும்
வாமன்வாய்மை யேமக்கட்டளை
யிறந்தகாலத் தெண்ணில்புத்தர்களுஞ்
சிறந்தருள்கூர்ந்து திருவாய்மொழிந்த
தீதறுபொருளினீர் நெறியுடைத்தாய்ச்
சார்பிற்றோன்றித் த்தமின்மீட்டுத்
தொடர்தன்மண்டில வகையறியக்காட்டி
யெதிர்முறைபிழைப்ப மீட்சியுமாகி
யீங்கிதில்லா வழியில்லாகி
யீங்கிதுள்ள வழியுண்டாகவிற்
றக்கதக்கசார்பிற் றோற்றமெனச்
சொற்றகப்படு மிலக்கணத்தொடர்பாற்
கருதப்பட்டுங் கண்டநான்குடைத்தாய்
மருவியசந்திவகை மூன்றுடைத்தாய்த்
தோற்றம்பார்க்கின் மூன்றுவகையாய்த்
தோற்றற்கேற்ற காலமூன்றுடைத்தாய்
வினையும்பயனுங் கூற்றும்விளைந்து
நிலைமையில்வறிய துன்பமெனத்தொக்க
வுலையாவீட்டிற் குறுதியாகி
நால்வகைவாய்மைக்குச் சார்பிடனாகி
யைந்துவகைக்கந்தத் தமைதியாகி
மெய்வகையாறு வளிக்குமுகமெய்தி
நயங்கணான்காற் பயன்களெய்தி
யியன்றநால்வகையால் விணாவிடையுடைத்தாய்
நின்மிதனின்றியூழ் பாடின்றிப்

பின்போக்கல்லது பொன்றக்கொடாதாய்ப்
பண்ணுநரின்றிப் பண்ணப்படாதா
யானுமின்றி யென்னதுமின்றிப்
போனதுமின்றி வந்ததுமின்றி
முடிதலுமின்றி முடிவுமின்றி
வினையும்பயனும் பிறப்பும்வீடு
மினையனவெல்லாந் தானேயாகிய
பேதைமைசெய்கை யுணர்வேயருவுரு
வாயிலூறனு கர்வேவேட்கை
பற்றேபவமே தோற்றம்வினைப்பய
னிற்றெனவகுத்த விராறுமண்ணிற்
பிறந்தோரறியிற் பெரும்பேறறிகுவ
ரறியாராயினாழ் நரகிருப்பர்
பேதைமையென்பது யாதெனவினவி
னோதியவிவற்றை யுணராதுமயங்கி
யியற்படுபொருளாற் கண்டதுமறந்து
முயற்கோடுண்டெனக் கேட்டதுதெளித
லுலகமூன்றினு முயிராகுலக
மலகில்பல்லுயி ராறுவகைத்தாகு
மக்களுந்தேவரும் பிரமருநரகருந்
தொக்கவிலங்கும் பேயுமென்றே
நல்வினை தீவினை யென்றிருபயத்தாற்
சொல்லப்பட்ட கருவிற்சாதலுங்
கருவினுட்பட்ட பொழுதினுட்டோன்றி
வினைப்பயன்விளையுங் காலையுயிர்கட்கு
மனப்பேரின்பமுங் கவலையுங்காட்டுந்
தீவினையென்பது யாதெனவினவி
னாய்தொடிநல்லா யாங்கதுகேளாய்
கொலையேகளவே காமத்தீவழக்
குலையாவுடம்பிற் றோற்றுவமூன்றும்
பொய்யேகுறளை கடுஞ்சொற்பயனில்
சொல்லெனச்சொல்லிற் றோன்றுவநான்கும்
வெஃகல்வெகுளல் பொல்லாக்காட்சி
யுள்ளந்தன்னி லுருப்பன மூன்றும்
பத்துவகையெனப் பயனறிபுலவ
ரித்திறம்படாதார் படர்குவராயின்
விலங்கும்பேயு நரகருமாகிக்
கலங்கியவுள்ளக் கவலையிற்றோன்றுவர்
நல்வினையென்பது யாதெனவினவின்
சொல்லியபத்தின் றொகுதியினீங்கிச்
சீலந்தாங்கித் தானந்தலைநின்று

மேலெனவகுத்த வொருமூன் றுதிறத்துத்
தேவருமக்களும் பிரமருமாகி
மேவியமாட்சி வினைப்பயனுணர்குவ
ருணர்வெனப்படுவது றங்குவோருணர்விற்
புரிவின் றாகிப் பொலன்கொளாததுவே
யருவுருவென்பதவ் வுணர்வுசார்ந்த
வுயிருமுடம்பு மாகுமென்ப
வாயி லுறலேயாயுங்காலை
யுள்ளமுறுவிக்க வுறுமிடனாகு
மாறெனவுரைப்ப துள்ளமும்வாயில்
வேறுபுலன்களை மேவுதலென்பது
நுகர்வெனப்படுவதைம் புலன்களைக்காதல்
வேட்கைவிருப்பி னுகர்ச்சியாராமை
பற்றெனப்படுவது பசைஇயவறிவே
பவமெனப்படுவது கருவியீட்டந்
தருமுறை யிதுவெனத் தாந்தாஞ்சாதல்
பிறப்பெனப்படுதல் கருமப்பெற்றியி
னுறப்புணருள்ளஞ் சார்பொடுகதிகளிற்
காரணகாரியவுருக் களிற்றோன்றல்
பிணியெனப்படுவது சார்பிற்பிறிதா
யியற்கையிற்றிரிந்துட விடும்பைவதனை
மூப்பெனப்படுவது தந்தமளவுந்
தாக்குநிலையாமையிற் றுந்தெளிவுறுதல்
சாக்காடென்ப தருவுத்தன்மை
யாக்கைவீழ்கதியென மறைந்தீறுதல்
பேதமைசாராச் செய்கையாகுஞ்
செய்கைசாரா வுணர்ச்சியாகு
முணர்ச்சிசாராவா வருவுருவாகு
மருவுருச்சாரா வாயிலாகும்
வாயில்சாரா வூறாகும்மே
யூறுசாரா நுகர்ச்சியாகும்
நுகர்ச்சிசார்ந்து வேட்கையாகும்
வேட்கைசார்ந்து பற்றாகும்மே
பற்றிற்றோன்றுங் கருமத்தொகுதி
கருமத்தொகுதி காரணமாகி
வருமேயேனை வழிமுறைத்தோற்றந்
தோற்றஞ்சார்பின் மூப்புப்பிணிசாக்கா
டவலவாற்றுக் கவலைகையாறெனத்
தகைதவிறுன்பந்தலை வருமென்ப
ஊழின்மண்டலமாய்ச் சூழுமின்னுகர்ச்சி
பேதைமைமீளச் செய்கைமீளுந்

செய்கைமீள வுணர்ச்சிமீளு
முணர்ச்சிமீள வருவுருமீளு
மருவுருமீள வாயின்மீளும்
வாயின்மீள வூறுமீளு
மூறுமீள நுகர்ச்சிமீளும்
நுகர்ச்சிமீள வேட்கைமீளும்
வேட்கைமீளப் பற்றுமீளும்
பற்றுமீளக்கருமத் தொகுதிமீளுங்
கருமத்தொகுதி மீளத்தோற்றமீளுந்
தோற்றமீளப் பிறப்புமீளும்
பிறப்புப்பிணிமூப்புப் சாக்காடவல
வாற்றுக்கவலை கையாறென்றென்றிக்
கடையிறுன்ப மெல்லாமீளு
மிவ்வகையான மீட்சியாகிக்
கண்டமாகு மென்ப
பேதைமைசெய்கை யென்றிவையிரண்டுங்
காரணங் கையவாதலானே
யிரண்டாங் கண்டமாகுமென்ப
வுணர்ச்சியரு வுருவாயினூறே
நுகர்ச்சியென்று நோக்கப்படுவன
முன்னவற்றியல் பாற்றுன்னியவாதலின்
மூன்றாங்கண்டம் வேட்கைபற்றுக்
கருமவீட்டமெனக் கட்டுரைப்பவை
பற்றுப்பற்று நிகழ்ச்சியொழுக்கினுட்
குற்றமும் வினையுமாகலானே
நான்காங் கண்டம்
பிறப்பேபிணியே மூப்பேசாவென
மொழியுந்துன்ப மெனவிவை
பிறப்பினுட் கும்பயனுதலினாற்
பிறப்பினமுத லுணரவாதிபொன்
வினையினிடை முதற்சந்தி
நுகர்ச்சியொழுக்கொடு விழைவின்கூட்டமும்
புகர்ச்சியினறிவ திரண்டாஞ்சந்தி
கன்மக்கூட்டத் தொடுவருபிறப்பிடை
முன்னிச்செல்வது மூன்றாஞ்சந்தி
மூன்றுவகைப்பிறப்பு மொழியுங்காலை
யான்றபிறமார்க்கத் தாயவுணர்வொடு
தோன்றல்வீடெனத் துணிந்துதோன்றியு
முணர்வுள்ளடங்க வுருவாய்த்தோன்றியு
முணர்வுமுருவு முடங்கித்தோன்றியு
முணர்தருமக்க டெய்வம்விலக்காமையுங்

காலமூன்றுங் கருதுங்காலை
யிறந்தகால மென்னல்வேண்டும்
மறந்தபேதைமை யென்றிவைசொலுங்காலை
யெதிர்காலமென விசைக்கப்படுமே
பிறப்பேபிணியே மூப்பேசாவே
யவலவாற்றுக் கவலைகையாறுகள்
குலவியகுற்றமெனக் கூறப்படுமே
யவாவேபற்றே பேதைமையென்றிவை
புனையுமடைபவமும் வினைசெயலாகு
முணர்ச்சியரு வுருவாயிலூறே
நுகர்ச்சிபிறப்பு மூப்புப்பிணிசாவிவை
நிகழ்ச்சிப்பயனுங்கே நேருங்காலைக்
குற்றமும்வினையும் பயனுந்துன்பமும்
பெற்றதோற்றப் பெற்றிகணிலையா
வெப்பொருளுக்கு மானமாவிலையென
விப்படியுணரு மிவைவீட்டியல்பா
முணர்வேயரு வுருவாயிலூறே
நுகர்வேபிறப்பே பிணிமூப்புச்சாவே
யவலவாற்றுக் கவலைகையாறென
நுவலப்படுவன நோயாகும்மே
யந்நோய்தனக்குப் பேதைமைசெய்கை
யவாவேபற்றுக்கரும வீட்டமிவைகாரணமாகுந்
துன்பந்தோற்றம் பற்றேகாரண
மின்பவீடே பற்றவிதன்காரண
மொன்றியவுணர்வே வாய்மைநான்காவ
துருவுநுகர்ச்சி குறிப்பினையுள்ள
மறியவிவையைங் கந்தமாவன
வறுவகைவழக்கு மறுவின்றுகிளப்பிற்
றொகைஇயதொடர்ச்சி தன்மைமிகுத்துரை
யியைந்துரையென்ற நான்கினுமியைந்த
வுண்மைவழக்கு மின்மைவழக்கு
முள்ளதுசார்ந்த வின்மைவழக்குமெனச்
சொல்லியதொகைத்திற முடம்புநீர்நாடு
தொடர்ச்சிவித்து முளைத்தாலென்ன
னிகழ்ச்சியிவற்றை நெல்லெனவழங்கலி
னியல்புமிகுத்துரை யீறுடைத்தென்றுந்
தோன்றிற்றென்று மூத்ததென்று
மூன்றினொன்றியல்பு மிகுத்துரைத்த
லியைந்துரையென்ப தெழுத்துப்பலகூடச்
சொல்லெனத்தோற்றம் பலகூட்டகூடிய
வெல்லையைத்திங்க ளென்றுவழங்குத

செய்கைமீள வுணர்ச்சிமீளு
முணர்ச்சிமீள வருவுருமீளு
மருவுருமீள வாயின்மீளும்
வாயின்மீள வூறுமீளு
மூறுமீள நுகர்ச்சிமீளும்
நுகர்ச்சிமீள வேட்கைமீளும்
வேட்கைமீளப் பற்றுமீளும்
பற்றுமீளக்கருமத் தொகுதிமீளுங்
கருமத்தொகுதி மீளத்தோற்றமீளுந்
தோற்றமீளப் பிறப்புமீளும்
பிறப்புப்பிணிமூப்புச் சாக்காடவல
மாற்றுக்கவலை கையாறென்றிக்
கடையிறுன்ப மெல்லாமீளு
மிவ்வகையான மீட்சியாகிக்
கண்டமாகு மென்ப
பேதைமைசெய்கை யென்றிவையிரண்டுங்
காரணங் கையவாதலானே
யிரண்டாங் கண்டமாகுமென்ப
வுணர்ச்சியரு வுருவாயிலூறே
நுகர்ச்சியென்று நோக்கப்படுவன
முன்னவற்றியல் பாற்றுன்னியவாதலின்
மூன்றாங்கண்டம் வேட்கைபற்றுக்
கருமவீட்டமெனக் கட்டுரைப்பவை
மற்றுப்பற்று நிகழ்ச்சியொழுக்கினுட்
குற்றமும் வினையுமாகலானே
நான்காங் கண்டம்
பிறப்பேபிணியே மூப்பேசாவென
மொழிந்திடுந்துன்ப மெனவிவை
பிறப்பினுட் கும்பயனுதலினற்
பிறப்பின்முத லுணரவாகிபோன
வினையினிடை முதற்சந்தி
நுகர்ச்சியொழுக்கொடு விழைவின்கூட்டறும்
புகர்ச்சியினறிவ திரண்டாஞ்சந்தி
கன்மக்கூட்டத் தொடுவருபிறப்பிடை
முன்னிச்செல்வது மூன்றாஞ்சந்தி
மூன்றுவகைப்பிறப்பு மொழியுங்காலை
யான்றபிறமார்க்கத் தாயவுணர்வொடு
தோன்றல்வீடெனத் துணிந்துதோன்றியு
முணர்வுள்ளடங்க வுருவாய்த்தோன்றியு
முணர்வுமுருவு முடங்கித்தோன்றியு
முணர்தருமக்க டெய்வம்விலங்காகையுக்

காலமூன்றுங் கருதுங்காலை
யிறந்தகால மென்னல்வேண்டும்
மறந்தபேதைமை செய்கையானவற்றை
நிகழ்ந்தகாலமென நேரப்படுமே
புணர்வேயருவுரு வாயிலூறே
நுகர்வேவேட்கை பற்றேபவமே
தோற்றமென்றிவை சொல்லுங்காலை
யெதிர்காலமென விசைக்கப்படுமே
பிறப்பேபிணியே மூப்பேசாவே
யவலவாற்றுக் கவலைகையாறுகள்
குலவியகுற்றமெனக் கூறப்படுமே
யவாவேபற்றே பேதைமையென்றிவை
புனையுமடைபவமும் வினைசெயலாகு
முணர்ச்சியரு வுருவாயிலூறே
நுகர்ச்சிபிறப்பு மூப்புப்பிணிசாவிவை
நிகழ்ச்சிப்பயனுங்கே நேருங்காலைக்
குற்றமும்வினையும் பயனுந்துன்பமும்
பெற்றதோற்றப் பெற்றிகணிலையா
வெப்பொருளுக்கு மானமாவிலையென
விப்படியுணரு மிவைவீட்டியல்பா
முணர்வேயரு வுருவாயிலூறே
நுகர்வேயிறப்பே பிணியேமூப்பே
யவலவாற்றுக் கவலைகையாறென
நுவலப்படுவன நோயாகும்மே
யந்நோய்தனக்குப் பேதைமைசெய்கை
யவாவேபற்றுக்கரும வீட்டமிவைகாரணமாகுந்
துன்பந்தோற்றம் பற்றேகாரண
மின்பவீடே பற்றலிதன்காரண
மொன்றியவுணர்வே வாய்மைநான்காவ
துருவுநுகர்ச்சி குறிப்பினையுள்ள
மறியவிவையைங் கந்தமாவன
வறுவகைவழக்கு மறுவின்றுகிளப்பிற்
றொகைஇயதொடர்ச்சி தன்மைமிகுத்துரை
யியைந்துரையென்ற நான்கினுமியைந்த
வுண்மைவழக்கு மின்மைவழக்கு
முள்ளதுசார்ந்த வின்மைவழக்குமெனச்
சொல்லியதொகைத்திற முடம்புநீர்நாடு
தொடர்ச்சிவித்து முளைத்தாலென்ன
னிகழ்ச்சியிவற்றை நெல்லெனவழங்கலி
னியல்புமிகுத்துரை யீறுடைத்தென்றுந்
தோன்றிற்றென்று மூத்ததென்று

மூன்றினொன்றியல்பு மிருத்துரைத்த
லியந்துரையென்ப தெழுத்துப்பலகூடச்
சொல்லெனத்தோற்றம் பலநாட்கூடிய
வெல்லையைத்திங்க ளென்றுவழங்குத
லுளவழக்குணர்வில்வழக்கு முயற்கோ
டுள்ளதுசார்ந்த வுளவழக்காகுஞ்
சித்தத்துடனே யொத்துநுகர்ச்சி
யுள்ளதுசார்ந்த வில்வழக்காகுஞ்
சித்தமுற்பவித்தது மின்போலென்கை
யில்லதுசார்ந்த வுண்மைவழக்காங்
காரணமின்றிக் காரியநேர்த
லில்லதுசார்ந்த வில்வழக்காகு
முயற்கோடின்மையிற் றோற்றமுமில்லென
நான்குநயமெனத் தோன்றப்படுவ
தொற்றுமைவேற்றுமை புரிவின்மையியல்பெனக்
காரணகாரிய மாயுங்கழிபொருள்களை
யோர்விலனாகி,யொன்றாயுணர்த லொற்றுமைநயமாம்
வீற்றுவீற்றாக வேதனைகொள்வது
வேற்றுமைநயமென வேண்டல்வேண்டும்
பொன்றக்கொடாப் பொருள்வழிப் பொருள்களுக்
கொன்றியகாரண முதவுகாரணத்தைத்
தருதற்குள்ளந் தானிலையென்றல்
புரிவின்மை நயமெனப்புகறல்வேண்டு
நெண்முளைதோன்று மெனல்நல்ல
வியல்புநய ̈மிவற்றினுங்கொள்பயன்
றுக்கபொருளஃ தொன்றிலையென்றும்
பொருளிடைப் பற்றுகாதென்றுஞ்
செய்வானொடுகோட் பாடிலையென்று
மெய்துகாரணத்தாங் காரியமென்று
மதுவுமன்றத லாததுமன்றெனும்
விதிமுறைதொகைஇ வினாவிடைநான்குள
துணிந்துசொல்லல் கூறிட்டுமொழிதல்
வினாவின்விடுத்தல் வாய்வாளாமையெனத்
தோன்றியதுகெடுமோ கெடாதோவென்றாற்
கேடுண்டென்ற றுணிந்துசொல்லாகும்

செத்தான்பிறப்பானே பிறவானேவென்று
செப்பிற்-பற்றிறந்தானே வனமகனேவென்னன்
மிக்ககூறிட்டுமொழித லெனவிளம்புவர்
வினாவின்விடுத்தல் விரிக்குங்காலை
முட்டைமுந்திற்றோ பனைமுந்திற்றோவெனக்
கேட்டுரையென்றோ லெம்முட்டைக்கொப்பனை
யென்றல்நல்வாய் வாளாமையா
ஆகாயப்பூப்பழைதோ புதிதோவென்றுற்
புகல்வானுக்குமாற்ற மூமையாதிருத்தல்
கட்டும்வீடு மதன்காரணத்த
தொட்டித்தருதற் குரியோரில்லை
யாமேலுரைத்த பொருள்களெல்லாம்
காமம்வெகுளி மயக்கங்காரண
மன்றளிதந்துக்க மான்மகசியெனத்
தனித்துப்பார்த்துப் பற்றறுத்திடுதல்
மயற்றிரிகருணை முதிரையென்றறிந்து
* திருந்துநல்லருளாற் செற்றமறந்திடுக
சுருதிசிந்தனை பாவனைதெரிசனை
கருதியுய்த்து மயக்கங்கடிக
இந்நால்வகையால் மனத்திருணீங்கென
தீன்மலையாமங்கல மொழியின்
தீபன்கணங் காட்டத்
தவத்திறம்பூண்டு தருமங்கேட்டுப்
பவத்திறமறு கெனப்பாவைநோற்றனளென.

* 'மறந்திருக்க, என்றும்பாடம்.

பவத்திறமறு கெனப்பாவை
நோற்றகாதைமுற்றிற்று.
மணிமேகலைமுற்றுப் பெற்றது.

# மணிமேகலை.

## பதிகம்.

இளங்கதிர்ஞாயிறெள்ளுந் தோன்றல்
விளங்கொளிமேனி விரிசடையாட்டி
பொன்றிகழ்நெடுவரை யுச்சிதோன்றித்
தென்றிசைப்பெயர்ந்தவித்தீபதெய்வதஞ்
சாகைச்சம்புத்தன்கீழ்நின்று
மாநிலமடந்தைக்கு வருதுயர்கேட்டு
வெந்திறலரக்கர்க்கு வெம்பகைநோற்ற
சம்புவென்பாள் சம்பாபதியினள்
செங்கதிர்ச்செல்வன் றிருக்குலம்விளக்குங்
கஞ்சைவேட்கைக் கரந்தாண்ட
வமரர்முனிவ னகத்தியன்றனாது
கரகங்கவிழ்ந்த காவிரிப்பாவை
செங்குணக்கொழுகிய சம்பாபதியயற்
பொங்குநீர்ப்பரப்பொடு பொருந்தித்தோன்ற
வாங்கினிதிருந்த வருந்தவமுதியோ
ளோங்குநீர்ப்பாவையை யுவந்தெதிர்கொண்டாங்
காணுப விசும்பினாகாயகங்கை
வேணவாத்தீர்த்த விளக்கேவாவெனப்
பின்னிலைமுனிவர்ப் பெருந்தவன்கேட்டிக்
கன்னிகேளிவ் வருந்தவமுதியோள்
நின்னால்வணங்குந்தன்மையள் வணங்கெனப்
பாடல்சால் சிறப்பிற்பாரதத்தோங்கிய
கோடாச்செங்கோற் சோழர்குலக்கொடி
கோணிலைதிரிந்து கோடைநீடினுந்
தாணிலைதிரியாத் தண்டமிழ்ப்பாவை
தொழுதனணிற்பத் தொன்மூதாட்டியைக்
கழுமியவுவகையிற் கவான்கொண்டிருந்து
தெய்வக்கருவுந் திசைமுகக்கருவுஞ்
செம்மலர்முதியோன் செய்தவந்நா
ளென்பெயர்ப்படுத்தவிவ் விரும்பெருமூதூர்
நின்பெயர்ப்படுத்தே நீவாழியவென

விருபாற்பெயரிய வுருகெழுமூதூ
ரொருநூறுவேள்வி யுரவோன்றனக்குப்
பெருவிழாவறைந்தும் பெருகியதலரெனச்
சிதைந்தநெஞ்சிற் சித்திராபதிதான்
வசந்தமாலையான் மாதவிக்குரைத்து
மணிமேகலைதான் மாமலர்கொய்ய
வணிமலர்ப்பூம்பொழி லகவயிற்சென்றது
மாங்கப்பூம் பொழிலரசிளங்குமரனைப்
பாங்கிற்கண்டவள் பளிக்கறைபுக்கதும்
பளிக்கறைபுக்க பாவையைக்கண்டவன்
றுளக்கறுநெஞ்சிற் றுயரொடும்பெயர்ந்தபின்
மணிமேகலாதெய்வம் வந்துதோன்றி
மணிமேகலையைமணிப் பல்லவத்துய்த்தது
முவவனமருங்கினவ்வுயிர் சால்தெய்வதஞ்
சுதமதிதன்னைத் துயிலெழுப்பியதூஉ
மாங்கத்தீவகத் தாயிழைநல்லா
டன்றுயிலுணர்ந்து தனித்துயருழந்தது
முழந்தோண்முன்ன ரொளிமணிப்பீடிகைப்
பழம்பிறப்பெல்லாம் பான்மையினுணர்ந்தது
முணர்ந்தோண்முன்ன ருயர்தெய்வந்தோன்றி
மனங்கவலொழிகென மந்திரங்கொடுத்ததுந்
தீவதிலகை செவ்வனந்தோன்றி
மாபெரும்பாத்திர மடக்கொடிக்களித்ததும்
பாத்திரம்பெற்ற பைந்தொடிதாயரோ
டியாப்புறுமாதவத் தறவணர்த்தொழுதது
மறவணவடிகளா புத்திரன்றிறத்து
நறுமலர்க்கோதைக்கு நன்கனவுரைத்தது
மாங்கப்பாத்திர மாபுத்திரன்பாற்
சிந்தாதேவி கொடுத்தவண்ணமு
மற்றப்பாத்திர மடக்கொடியேத்திப்
பிச்சைக்கவ்வூர்ப் பெருந்தெருவடைந்ததும்
பிச்சையேற்ற பெய்வளைகடிஞையிற்
பத்தினிப்பெண்டிர் பாத்தூணீத்ததுங்
காரிகைநல்லாள் காயசண்டிகைவயிற்
றானைத்தீக்கெடுத் தம்பலமடைந்தது

மம்பலமடைந்தன ளாயிழையென்றே
கோங்கலர்நறுந்தார்க் கோமகன்சென்றது
அம்பலமடைந்த வரசிளங்குமரன்முன்
வஞ்சவிஞ்சையன் மகள்வடிவாயது
மறஞ்செய்வேலோன் வான்சிறைக்கோட்ட
மறஞ்செய்கோட்ட மாக்கியவண்ணமுங்
காயசண்டிகையென விஞ்சைக்காஞ்சய
னாயிழைதன்னை யகலாதணுகலும்
வஞ்சவிஞ்சையன் மன்னவன்சிறுவனை
மைந்துடைவாளிற் றப்பியவண்ணமு
மையரியுண்கண்ணவன்றுயர்ப்பொறூஉ
டெய்வக்கிளவியிற் றெளிந்தவண்ணமு
மறைகழல்வேந்த னாயிழைதன்னைச்
சிறைசெய்கின்றதுஞ் சிறுவீடுசெய்தது
நறுமலர்க்கோதை நல்லறமுரைத்தாங்
காய்வளையாபுத் திரநாடடைந்தது
மாங்கவன்றன்னோ டணியிழையேகி
யோங்கியமணிப்பல் லவத்திடையுற்றது
முற்றவளாங்கோ ருயர்தவன்வடிவாய்ப்
பொற்றொடிவஞ்சி மாநகர்புக்கது
நவையறுநன்பொரு ளுரைமினோவெனச்
சமயக்கணக்கர் தந்திறங்கேட்டது
மாங்கத்தாயரோ டறவணர்த்தொழுது
பூங்கொடிகாஞ்சி மாநகர்புக்கதும்
புக்காள்கொண்ட பொய்யுருக்களைந்து
மற்றவன்பாதம் வணங்கியவண்ணமுந்
தவத்திறம்பூண்டு தருமங்கேட்டும்
பவத்திறமறுகெனப் பாவைநோற்றது
மிளங்கோவேந்த னருளிக்கேட்ப
வளங்கெழுகூல வாணிகன்சாத்தன்
வண்டமிழத்தின் மணிமேகலைத்திற
னாறைம்பாட்டினு ளறியவைத்தனனென.

பதிகம்

முற்றிற்று.

| பக்கம். | வரி. | பாடம். | வேறுபாடம். |
|---|---|---|---|
| *எஉ | ருக | காதல் | காக்குதல் |
| எச | ககசு | மானு | மரனு |
| *எஎ | ஙஎ | கந்தற் | ககந்தற் |
| எஅ | எசு | கந்தன் | கசந்தன் |
| *கூஅ | ரு | கோட்டபும்கக்கு | கோட்டகம்புக்கு |
| *ஷை | கஅ | உறுநர் | உறூஉ |
| க௦ங | கூஉ | திராத் | தீர்த்த |
| க௦எ | உஙங | றறிவைக்கு | றறிவையாக |
| | உஙச | மல்லது | வல்லது |
| *க௦கூ | உ | மகிழ்ச்சி | வஞ்சியின் |
| *ஷை | அ | சந்து | சாந்து |
| கக௦ | ஙஉ | புணணின | புள்ளின் |
| ககக | ஙக | தன் | தான |
| *ககஉ | க௦ரு | ககனத் | களத் |
| *ககச | கஅஉ | தாவனத்தே | தாவதை |
| ககரு | உ௦சு | தெய்வதம் | தெய்வம் |
| ஷை | உகரு | ரேத்தி | ளேத்தி |
| கககூ | உ | ஞைப்போன் | ஞைப்பான் |
| *ஷை | கூ | கெடுத்தோன் | கொடுத்தோன் |
| ஷை | கரு | மூழ்கி | முங்கிக் |
| ககஎ | உஎ | றுதவவும் | றுதவும் |
| ஷை | உகூ | வுதவி | மாதவி |
| ஷை | சஎ | பிரத்தியங் | பிரத்தியக்கங் |
| கஉஅ | எ | ளறிவு | னறிவு |
| கஉகூ | சரு | லூறனு | றேறுகாவே |
| *ஷை | சுகூ | காட்சியுள்ளங் | காட்சியென்றுள்ளங் |
| கஙௗ | அகூ | காதல் | கவர்தல் |
| ஷை | க௦க | தருவுத்தன்மை | தருவுருத்தன்மை |
| ஷை | க௦ரு | சராவா | சாராவா |
| * | உஙச | யுறிய | யறிய |
| *க௦அ | உஎக | மிம்மைமயனு மெப்பி றப்புமினிப்பே | மிம்மைப்பயனு மெப்பி றப்புமிப்பிறப்பே |
| கஉகூ | சுகூ | காட்சி | காட்சியென்றே |
| *கஙௗ | அகூ | காதல் | கவர்தல் |
| ஷை | கூஉ | கருவியீட்டம் | கருமவீட்டம் |
| ஷை | க௦ரு | சாராவா | சாரா |
| அரு | கஉகூ | ஆவது வரியாக, | |

துன்பமறுக்குந்துணி—பொருளுணர்ந்தோர் என்று வேறு மொரு பிரதியிலிருக்கின்றது.

* இக்குறியிட்டப்பட்டவை பிழைதிருத்தமும் வேறுபாடமோம்.

7169a.

# விளம்பரம்.

இப்புத்தகம் வேண்டுவோர் சென்னைசைனுபஜார்வீதி புத்தக ஷாப்பில் க முருகேசசெட்டியாரிடத்திலும், மதராஸ் ரிப்பன்பிரஸிலும் ரூபா-க-கொடுத்துவாங்கிக்கொள்ளப்படும்.